கல்கி



ALKI டிசம்பர் 5, 1954 4 அண


நாளுக்கு நாள் அதிக தெளிவான,
எழிலோங்கும்
சருமம்
கேடில் கலந்த
ரெக்ஸோனா
இந்த அற்புத
வேலையைச்
செய்யட்டும்.
ரெக்ஸோனாவின் கேடில் கலந்த நுரையை உங்கள் சருமத்தில் மெதுவாகத் தேய்த்து பிறகு கழுவுங்கள். உங்கள் சருமம் நாளுக்கு நாள் அதிக மழமழப்பும் தெளிவும் பெறுவதைக் காண்பீர்கள். அதனால் புதுப் பொலிவுடன் விளங்குவீர்கள்.
ரெக்ஸோனா
கேடில்* கலந்த சோப் இதுஒன்றே
* சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.
Rexona
Rexona
BLENDED WITH CADYL
RP. 123-50 TM
ரெக்ஸோனா ப்ரொப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது.

கல்கி பொருளடக்கம்

மலர் 14
இதழ் 19

1954 டிசம்பர் 5

ஜய ௵
கார்த்திகை 20

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

"அதற்குச்
சிறிதும்
சந்தேகம்
கிடையாது



அவர்
வெகு அழகாக
அணிந்து
கொண்டிருப்பது
பின்னி மில்
துணிகளே"

வாங்குமிடம்:

வெங்கடேஷ் வஸ்திராலயா
இங்கு வாங்குவதே பெரு ஆனந்தம்

ரீடெய்ல் ஷோரூம்:

வெங்கடேஷ் வஸ்திராலயா

2, தம்பு செட்டித் தெரு (போன்: 4688) மதராஸ்-1

கல்கி

மலர் 14

தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார்

இதழ் 19

வான வெளியிலே பயங்கர பூதங்கள்!

உலகம் எங்கும் வான வெளியில் பயங்கரமான பூதங்கள் சஞ்சரித்து ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கி யிருக்கின்றன.

மந்திரவாதியால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு பூதம் அவன் கூறிய அலுவல்களை யெல்லாம் முடித்த பின் அவன் எதிரே வந்து கைகட்டி நின்றது.

"எனக்கு என்ன வழி சொல்லுகிறாய்? மேற்கொண்டு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டது.

மேற்படி பூதத்தைச் சமாளிக்க வழி தெரியாமல் விழித்த மந்திரவாதி, இறுதியில் அந்தப் பூதத்துக்கே தான் இரையாகும்படி நேர்ந்தது என்று கதை உண்டு.

அதைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிக பயங்கரமான சம்பவம் இப்போது உண்மையிலேயே நிகழ்ந்துள்ளது.

மேற்படி துர்மந்திரவாதி ஒரு பூதத்தைத்தான் சிருஷ்டித்தான். ஆனால், இன்றைய ராஜ தந்திரவாதிகளோ மகா பயங்கரமான பல பூதங்களைச் சிருஷ்டித்து விட்டு, விழிக்கும் படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

மந்திரவாதி சிருஷ்டித்த பூதத்தால் அவனுக்கு மாத்திரமே ஆபத்து ஏற்பட்டது.

ஆனால், தந்திரவாதிகள் சிருஷ்டித்துள்ள பூதங்களோ வெனில், 'மானிட வர்க்கத்தையே விழுங்குவோம், நாகரிகத்தை அழிப்போம், தாவர வர்க்கங்களைத் துவம்சம் செய்வோம், ஜீவராசிகள் யாவையும் சர்வநாசம் செய்வோம்' என்று அட்டகாசம் செய்கின்றன.

* * * *

மூன்றாவது உலக மகா யுத்தம் மூளலாம்; அந்த யுத்தம் அணுகுண்டு, ஜலவாயு (ஹைட்ரஜன்) குண்டு யுத்தமாக உருவாகி உலகம் அழியும்படியான நிலைமை ஏற்படலாம்.—இத்தகைய பீதி ஏற்கெனவே உலகமக்களின் மனத்தை அல்லல்படுத்திக் கொண்டிருக்கிறது.

இந்த நிலைமையில் இப்போது மற்றொரு பயங்கரமான சூழ்நிலை உலகத்தை ஆட்கொண்டு வருவதைக் கவனிப்போர் கலங்காமல் இருக்க முடியாது.

அதாவது மூன்றாவது மகா யுத்தம் ஏற்படாமலேயே உலகம் பேராபத்துக்கு உள்ளாகி விடுமோ என்று எண்ணும்படியான சம்பவங்கள் சமீப காலத்தில் நிகழ்ந்திருக்கின்றன.

சென்ற பல மாதங்களாக அமெரிக்கர்கள் பசிபிக் சமுத்திரப் பிரதேசத்தில் ஜலவாயு குண்டுகளைப் பரீட்சித்துப் பார்த்து வருகிறார்கள் அல்லவா?

ஜலவாயு குண்டுகள், அவற்றின் சிருஷ்டி கர்த்தாக்களான விஞ்ஞானிகள் எதிர் பார்த்ததைக் காட்டிலும் அதிகப் பயங்கரமான எல்லையற்ற சக்தியுள்ளவை என்பது இப்போது சந்தேகத்துக் கிடமின்றி வெளியாகி யிருக்கிறது.

மேற்படி பரீட்சையின் விளைவாக அவர்கள் எதிர்பாராத பல பூதங்கள் வான வெளியிலே தங்கள் இஷ்டப்படி சஞ்சரிக்கத் தொடங்கி யிருக்கின்றன.

அவைகள் பருவகாலம் தப்பி மழை பெய்யும்படி செய்கின்றன; மழைத் தண்ணீரை விஷமாக்கி விடுகின்றன; அடிக்கடி புயல் காற்றை உண்டாக்கி, அது திடீர் திடீரென்று திசை மாறி அடிக்கும்படி செய்து விடுகின்றன.

சமீபத்தில் அமெரிக்காவிலே ஏற்பட்ட பயங்கரமான புயல் விபத்துகளுக்கெல்லாம் ஜலவாயு குண்டுகளின் பரீட்சைதான் காரணமோ என்ற திகிலும் அமெரிக்கர்களிடையே உண்டாகி யிருக்கிறது.

ஜலவாயு குண்டுப் பரீட்சையினால் ஆயிரக்கணக்கான சதுர மைல்கள் தூரம் பசிபிக் மகா சமுத்திரத்தில் உள்ள மீன்கள் சின்னா பின்ன மாக்கப் பட்டிருக்கின்றன.

ஆஸ்திரேலியாவில் உள்ள குதிரைகளுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

ஜப்பானிலிருந்து கல்கத்தா வரையிலும் எத்தனையோ ஆயிரம் மைல் தூரத்துக்கு எங்கு பார்த்தாலும் மேகங்களும் மழைத் தண்ணீரும் பாதிக்கப் பட்டிருக்கின்றன.


வத்தி வைக்கிறார்!
1
2
விஷமம்
சர்ச்சில்
ரஷ்யர்கள் எதிர்க்க வேண்டியிருந்தால், 1945ல் போரில் கிடைத்த ஜெர்மன் ஆயுதங்களை ஜெர்மானியருக்குக் கொடுக்கத் தயாராக வைத்திருக்கும்படி கட்டளையிட்டதாகச் சர்ச்சில் வெளியிட்ட செய்தி பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது.
கார்ட்டூன்
சுற்றி வருகிறார்!
சுஹ்ரவர்த்தியின் எதிர்காலம் இன்னும் ஸ்திரமற்ற நிலையில் இருக்கிறது!
????
சுஹ்ரவர்த்தி
குரைக்கும் நாய்...
தென் கொரியா
ஸிங் மென் ரீ
அமெரிக்கா
தென் கொரியத் தலைவரின் விபரீதப் பிரசாரங்களை அமெரிக்கா கடுமையாகக் கண்டிக்கப் போகிறதாம்!
ஜீவனாம்சம்!
வருமானமில்லாத கணவனுக்குப் பணம் படைத்த மனைவி ஜீவனாம்சம் தரவேண்டும் என்று விவாகரத்து மசோதாவில் பார்லிமெண்டுக் கமிட்டி முக்கிய மாறுதல் செய்திருக்கிறது.
மிருகங்களின் ஊர்வலம்!
ராஜ்ய சர்க்கார்களுக்கு ஆலோசனை கூற இடைக்கால மிருகப் பாதுகாப்பு ...
எங்களையே தேர்ந்தெடுங்கள்!
எங்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுங்கள்!
நானும் ஒரு அங்கத்தினராக வேண்டும்!
...சபை ஒன்றை நிறுவ இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர்.


கெட்டிக்காரர் யார்?
“வேகமாகத் தள்ளுங்கள்!”
பிரகாசம் காங்கிரஸில் சேர்ந்து விட்டார். ஆனால் தேர்தலுக்குப் பிறகும் அவர் காங்கிரஸில் நீடித்திருப் பாரா?
ஆந்திர காங்கிரஸ்
கதம்பம்
எறும்பின் கோபம்!
மௌர்வி ஜில்லா பிரஜா-சோஷலிஸ்டுகள் ஜயப் பிரகாஷின் மீது-திரு ஒழுங்கு நடவடிக்கை யெடுக்க வேண்டு மென்று தெரிவித்திருக்கின்றனர்
ஜயப் பிரகாஷ்
மௌர்வி ஜில்லா பி-சோ-கட்சி
காப்பியா? டீயா?
காப்பி, டீ வர்த்தகத்துக்குச் சர்க்காரின் கட்டுப்பாடுகள் அதிகமாகியிருக்கின்றன....
இனி, இரண்டிலும் ஒரே விதமணம் வீசலாம்!
குதிரைப் பந்தய சீசன்!
சென்னை நகர சபை மேயராகத் திரு எம். ஏ. சிதம்பரம் தேர்ந் தெடுக்கப் பட்டிருக்கிறார். — இனி, குதிரை வேகமாக முன்னேறுமா?
சர்க்கார்
நகர சபை

ஜப்பானைச் சேர்ந்த ஹிரோஷிமாவில் அமெரிக்கர்கள் வீசிய அணுகுண்டைப் போல் சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு மடங்கு அதிக சக்தி பொருந்திய பத்து ஜலவாயு குண்டுகளை இது வரை அமெரிக்கர்கள் பரீட்சித்துப் பார்த்திருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

மேற்படி பரீட்சையின் விளைவாக ஏற்பட்டுள்ள மற்றும் பல உற்பாதங்களை வெளியிடாமல் மறைத்திருக்கிறார்கள் என்றும் தெரிகிறது.

மேற்கொண்டு ஜலவாயு குண்டுகளைப் பரிசோதனை செய்து பார்க்கும் விஷயமாகப் பிரபல அமெரிக்கர்களிடையே கடுமையான அபிப்பிராய பேதமும் ஏற்பட்டிருக்கிறதாம்.

இது வரையில் பரீட்சிக்கப்பட்ட ஜலவாயு குண்டுகளே வெகு காலம் வரையில் மானிட வர்க்கத்துக்கும் மற்ற ஜீவராசிகளுக்கும் சொல்லொணாத் துன்பத்தைக் கொடுத்து வரும் என்று பிரபல விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

இந்நிலையில் ஜலவாயு குண்டுப் பரீட்சையைத் தொடர்ந்து நடத்துவது பற்றி அமெரிக்காவில் அபிப்பிராயபேதம் எழுந்திருப்பதைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை.

அணுகுண்டுக் கட்டுப்பாட்டையும் ஆயுதக் குறைப்பையும் இதுவரையில் பிடிவாதமாக எதிர்த்து வந்த அமெரிக்கா முதலிய வல்லரசுகளின் மனம் இப்போது மாறி வருகிறது என்பதை, சில தினங்களாக ஐக்கியநாடுகள் சபையில் நிகழ்ந்து வரும் விவாதம் நிரூபணம் செய்கிறது.

எனவே, ஜலவாயு குண்டுகளின் நாச சக்தியைக் கண்டு அவற்றின் சிருஷ்டி கர்த்தாக்களும் உலக மக்களைப் போல் கலக்கம் அடைந்திருக்கிறார்கள் என்று ஏற்படுகிறது அல்லவா!

• • •

வல்லரசுகள் சிருஷ்டித்துள்ள நாச சக்திகளால் புண்பட்டிருக்கும் உலக மக்களின் மனத்துக்கு, இப்போது நேருஜி கூறியுள்ள யோசனைகள் அருமருந்தாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

சென்ற வாரம் புது டில்லியில் நடந்த அணு சக்தி அபிவிருத்தி மகாநாட்டை ஆரம்பித்து வைத்த ஜவாஹர்லால்ஜி, அணு சக்தியைக் கொண்டு சமாதான கால ஆக்கத் திட்டங்களை நிறைவேற்றும் முயற்சியில் இந்தியா முன்னேற்றம் அடைந்து வருகிறது என்ற நற்செய்தியை உலகத்துக்கு அறிவித்தார்.

அணுசக்திக்கு இன்றியமையாத 'தோரியம்' என்ற உலோகம் உலகிலேயே இந்தியாவில்தான் அதிகமாக இருக்கிறது என்று மேற்படி மகாநாட்டில் பேசிய டாக்டர் பாபா குறிப்பிட்டார்.

எனவே, அணு சக்தியை ஆக்கத் திட்டங்களுக்கு உபயோகிப்பதில் பாரத நாடு உலகம் முழுவதற்கும் வழிகாட்டும் வாய்ப்புக் கிடைப்பதற்கு இடமிருக்கிறது.

சர்வநாசத்தை உண்டு பண்ணும் அணுகுண்டு, ஜலவாயு குண்டுகளை உற்பத்தி செய்வதற்காக அமெரிக்கா, ருஷ்யா, பிரிட்டன் முதலிய வல்லரசுகள் செலவு செய்யும் மகத்தான தொகையைக் கவனிப்போர் திடுக்கிட்டுத் திக்பிரமை அடையாமல் இருக்க முடியாது.

ஒரு அணுகுண்டு அல்லது ஜலவாயு குண்டை உற்பத்தி செய்வதற்காக ஏற்படும் செலவுத் தொகையைக் கொண்டு எத்தனையோ கப்பல்களையும் விமானங்களையும் அணைக்கட்டுகளையும் நிர்மாணித்து விடலாம்!

உலக நாகரிகத்தின், மானிட வர்க்கத்தின் அழிவைத் தவிர வேறு எதற்கும் தகுதியற்ற மேற்படி குண்டுகளை உற்பத்தி செய்யும் வல்லரசுகள் அணு சக்தியை ஆக்க வேலைகளுக்கு உபயோகிக்க முற்படும் பட்சத்தில், உலகில் யுத்த பீதி, ஆதிக்க ஆசையாகிற அந்தகாரம் ஒழிந்து சமாதான ஒளியும் சுபிட்ச வாழ்வும் ஏற்படுவதற்கு வழி உண்டாகும் அல்லவா!

அத்தகைய சுபிட்ச உலகத்தை உருவாக்குவதற்கு, இந்தியாவில் சென்ற வாரம் நடந்த அணு சக்தி அபிவிருத்தி மகாநாடு அங்குரார்ப்பணம் செய்திருக்கிறது என்று கூறலாம்.

சாரதா தேவிக்குப் பாத காணிக்கை

பாரத புண்ணிய பூமியில் எத்தனையோ மகா புருஷர்களும் பதிவிரதா ரத்னங்களும் அவதரித்திருக்கிறார்கள். அவர்களுடைய புனித வரலாறுகளால் பாரத சரித்திரத்தின் ஏடுகள் பேரொளி வீசித் திகழ்கின்றன.

தர்மங்களுக்கெல்லாம் தலைசிறந்த தர்மமான சத்தியத்தை நிலைநாட்டுவதற்காக அரிச்சந்திரன் ராஜ்யத்தையும் மனைவி மக்களையும் துறந்ததைக் கேட்கும் போது கண்ணீர் பெருகுகின்றது.

தந்தையின் சுகத்துக்காக ராஜ்ய உரிமையையும் இல்லற இன்பத்தையும் உதறித் தள்ளிய பீஷ்மரின் வரலாறு கேட்போரைத் திக்பிரமை அடையும்படி செய்து விடுகின்றது.

காலனை வென்ற சாவித்திரி, காலத்தை வென்ற நளாயினி இவர்களுடைய சரித்திரங்களைக் கேட்கும்போது உடல் சிலிர்க்கின்றது.

இவை போன்றதோர் அதிசய சம்பவம் நமது வாழ்நாளில் நிகழ்ந்திருப்பதைக் கவனிப்போர், மேற்படி வரலாறுகளைப் புராணக் கதைகள் என்று அலட்சியம் செய்யத் துணிய மாட்டார்கள்.

இல்லறத்தில் துறவறத்தின் சிகரத்தை எட்டிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் மனைவி சாரதாமணி தேவியாரின் வரலாறு, அந்தப் பதிவிரதா சிரோமணிகளின் சரித்திரங்களைக் காட்டிலும் அதிக ஆச்சரியத்தையும் உணர்ச்சியையும் உண்டு பண்ணுவதாக இருக்கிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ண மகாமுனிவர் தமது சீடர்களிடம் கிருஷ்ண பரமாத்மாவைக் கண்டார். தெருவில் செல்லும் பெண்களிடம் சீதாப் பிராட்டியாரையும் மகாலக்ஷ்மியையும் கண்டார். சாரதாமணி அம்மையாரிடம் பராசக்தியைக் கண்டார்.

பரமஹம்சரின் பிரதம சீடரான விவேகானந்தர் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தபோது, அவரை அமெரிக்கர்கள் ஏளனமாகக் கேள்வி கேட்டனர்:

"உங்கள் நாட்டில் பெண்கள் என்ன நிலைமையில் இருக்கிறார்கள்! அவர்களுக்கு என்ன உரிமைகள் அளிக்கப் பட்டிருக்கின்றன!"

இந்தக் கேள்விகளுக்கு விவேகானந்தர் ஒரே வாக்கியத்தில் பதில் அளித்து, அவர்கள் வாயடைத்துப் போகும்படி செய்தார்.

"அமெரிக்கர்களாகிய நீங்கள் பெண்ணை ஒருவருடைய மனைவியாகக் கருதுகிறீர்கள். இந்தியர்களாகிய நாங்கள் பெண்ணை ஒருவருடைய தாயாகக் கருதுகிறோம்."

பாரதப் பண்பாட்டின் உயர்ந்த தத்துவத்தை, பாரதப் பெண்மணியின் பெருமையை அவ்விதம்

விவேகானந்தர் சுருங்கக் கூறி விளங்க வைத்ததைக் கண்டு அமெரிக்கர்கள் அதிசயித்தனர்.

அந்த மகோன்னதமான தத்துவத்தின் புனித வடிவமாகத் திகழ்ந்த சாரதாமணி தேவியார், பாரத நாட்டு மக்கள் யாவருக்கும் தாயாக இருந்ததை, இன்றும் இருந்து வருவதைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை.

அப்படிப்பட்ட மகத்துவம் பொருந்திய ஸ்ரீ சாரதாமணி தேவியாரின் நூற்றாண்டு விழா இந்த வாரம் பாரத நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. அக் கொண்டாட்டத்தில் பங்கு பெறுவதற்காக இந்தக் "கல்கி"யை விசேஷ மலராக வெளியிட்டு, அன்னை சாரதாமணியின் பாதகமலங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

இந்த மலரில் சாரதத் தாயைப் பற்றிய பல அரிய கட்டுரைகளும், அன்னையின் பொன்மொழிகளும் அடங்கியுள்ளன.

சிந்தனையில் போற்றிடுவோம்
செந்தமிழில் பாடிடுவோம்
வந்தனைகள் செய்து
வணங்கிடுவோம் — முந்துபுகழ்
பாரதத்தாய் பெற்ற பெரும்
பாக்கியத்தால் வந்துதித்த
சாரதத்தாய் வாச மலர்த் தாள்.

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

சாரதாமணி அம்மையாரின் புனிதத் தோற்றம், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் சமாதி நிலை, அவரது பிரத்தியட்ச தெய்வமான மகாகாளி கோவில் கொண்டுள்ள புனித ஸ்தலம் முதலியவை, நமது சைத்திரிகர் சந்திரா தீட்டியுள்ள இந்த இதழின் அட்டையை அலங்கரித்துக் கொண்டிருப்பதைப் பாருங்கள்!

பறி போகிறது!

—கொழும்பு, நவ. டீ 27வ.

இவ்வாரம் இலங்கைப் பார்லிமெண்டின் மேல் சபையான செனட்டில் ஸ்ரீ பெரி சுந்தரத்தின் தீர்மானத்தைப் பற்றி நடந்த விவாதத்தில் தீர்மானம் எதிர்பார்த்தபடி தோல்வியடைந்து விட்ட பொழுதிலும், பல உண்மைகளை அம்பலப்படுத்துவதற்கு அது உதவியது. பிரஜாவுரிமை மனுவை விசாரணை செய்யும் உதவிக் கமிஷனர்களின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்திப் பெரும்பாலான மனுக்களை நிராகரிக்கும் முறையில் அவர்களுக்குப் பிரதம கமிஷனர் அனுப்பி யிருக்கும் சில சுற்றறிக்கைகளைப் பற்றிச் சென்ற மாதம் டில்லியில் நடைபெற்ற இலங்கை இந்தியா சமரசப் பேச்சுக்களின் போது பிரஸ்தாபம் ஏற்பட்டது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். இதுமாதிரியான சுற்றறிக்கைகள் ஏதுமே யில்லையென்று இலங்கை தூதுகோஷ்டி சாதித்தபொழுது இலங்கை ஜனநாயக காங்கிரஸ் தலைவர்கள் அந்த அறிக்கைகளின் போட்டோப் பிரதிகளைக் காண்பித்து இலங்கைத் தூதுகோஷ்டியின் முகத்தில் கரியைப் பூசினார்கள். அந்த ரகசியச் சுற்றறிக்கைகளைப் பகிரங்கமாகச் சபையில் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுதான் செனட்டர் பெரி சுந்தரம் கொண்டு வந்த தீர்மானத்தின் முக்கிய சாராம்சம் ஆகும்.

பிரஜாவுரிமை கோரும் மனுதாருக்குத் தம்மையும் தமது குடும்பத்தையும் சம்ரட்சித்துக் கொள்

பனித் துளி

விக்டோரியா காலத்திலிருந்து விண்ஸர் நகரிலுள்ள 60 வயதுக்கு மேற்பட்ட ஏழைகளுக்கு 112 ராத்தல் நிலக்கரி கிறிஸ்துமஸ் வெகுமதியாக அளிக்கப்படுகிறது. —விண்ஸர் செய்தி

பணமாகக் கொடுத்தால் 'கரி'யாக்கி விடுவார்கள் என்ற எண்ணமாக இருக்குமோ?

★

சென்னை மீன் வளர்ப்போர் சங்கம் குறுகிய காலத்தில் 450 அங்கத்தினர்களைச் சேர்த்துப் பெரும் புகழ் அடைந்துள்ளது. —சென்னைச் செய்தி

"என்ன வலை விரித்திருப்பார்களோ!" என்று மற்ற சங்கங்கள் தீவிரமாக ஆராய முற்படலாம்!

★

கெவின் ஷீஹான் என்னும் அயர்லாந்து வாலிபன் பசியையும், தூக்கத்தையும் மறந்து, கொஞ்சங்கூட நிறுத்தாமல் 127 மணி நேரம் பிரசங்க மாரி பொழிந்தான்!—ஓல்டுஹாம் செய்தி

அதிகப் பிரசங்கி என்பதில் கொஞ்சங்கூடச் சந்தேகமே இல்லை!

★

பிரிட்டிஷ் ஆட்சியாளர் காந்திஜியைச் சிறை செய்து வைத்திருந்த எரவாடா ஜெயிலிலுள்ள இரு அறைகளில் இனி அண்ணலின் திருவுருவத்தையும், அவருடைய உபதேசங்களையுங் கொண்டு அலங்கரிக்க ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.—பம்பாய்ச் செய்தி

உலகின் கவனத்தை யெல்லாம் அந்த அறைகளில் சிறைப் படுத்தும் நோக்கத்தி லிருக்குமோ!

★

திருவல்லிக்கேணியில் குழந்தைகள் விளையாடுவதற்கான திறந்த வெளி மைதானத்தை மராமத்து மந்திரி ஸ்ரீ ராமநாதபுரம் ராஜா திறந்து வைத்தார். —சென்னைச் செய்தி

ஆகா! 'திறந்த வெளி'யை எப்படித்தான் 'திறந்து' வைத்தாரோ!

★

சொந்தக்காரர்கள் வந்து கேட்காத 192 நாய்கள் வியன்னாவிலுள்ள 'காணமற் போன சொத்துக்கள்' சேமிக்கும் நிலையத்திலுள்ளன!

—வியன்னா செய்தி

இப்பொழுது, "நன்றி விசுவாசம் இல்லாதவர்கள் சொந்தக் காரர்களே" என்று பிரஸ்தாப நாய்கள் வாயிருந்தால் சத்தியம் செய்தாலும் செய்யும்!


எப்போதிய வருமானமிருக்க வேண்டுமென்பது சட்டத்திலுள்ள ஒரு முக்கியமான நிபந்தனை. இந்த நிபந்தனையைப் பரிசோதிக்க மனுதாரின் வருமானத்தையும் அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களின் வருமானத்தையும் சேர்த்துக் கணக்கிடுவதுதான் இதுவரை வழக்கமாயிருந்து வந்தது. இவ்வருட செப்டம்பர் 5ம் தேதி, அதாவது டில்லி ஒப்பந்தம் ஏற்படுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னால் மனுதாரின் வருமானம் மட்டுமே அவருடைய குடும்பம் முழுவதற்கும் போதுமானதாயிருக்க வேண்டுமென்றும் இல்லாத பட்சத்தில் மனுவை நிராகரித்துவிட வேண்டுமென்றும் பிரஜா பதிவுக் கமிஷனர் தமது உதவிக் கமிஷனர்களுக்கு ஒரு ரகசிய சுற்று நிருபம் அனுப்பியிருக்கிறார். இதேபோல மனுக்களைப் பல்லாயிரக் கணக்கில் நிராகரிக்க உதவும் முறையில் கமிஷனர் பிறப்பித்திருக்கும் ரகசிய சுற்று நிருபங்களை ஸ்ரீ பெரிசுந்தரம் செனட்டில் படித்துக் காட்டி, அவைகளையெல்லாம் பகிரங்கமாகப் பிரசுரிக்க வேண்டுமென்றார். சட்ட சம்பந்தமான விசாரணைகளில் ரகசியத்துக்கு இடமே கிடையாதென்றும் அரசாங்கம் தனது நாணயத்தை நிரூபிப்பதற்கேனும் இந்தச் சுற்று நிருபங்களைப் பகிரங்கமாக வெளியிட வேண்டுமென்றும் செனட்டர் எஸ். நடேசனும் கோரினார். ஆனால் எது நியாயம், எது அநியாயம் என்பதையெல்லாம் கவனியாமல் எதிர்க் கட்சி என்ன தீர்மானம் கொண்டு வந்தாலும் கண்மூடித் தனமாக அதை முறியடிக்கும் அரசாங்கக் கட்சி, செனட்டர் பெரிசுந்தரத்தின் நியாயமான கோரிக்கையையும் நிராகரித்து விட்டது. இந்தச் சுற்று நிருபங்களை ஆதாரமாகக்கொண்டு, இலங்கையிலேயே பிறந்து வளர்ந்து வேறு தேசம் அறியாத பல்லாயிரக் கணக்கான மக்களின் பிரஜாவுரிமை பறிமுதல் செய்யப்பட்டு வருகிறது.

இது என்ன அக்கிரமம்?

நிற்க, இந்தியர்களுக்கு இன்னொரு பெரிய ஆபத்து இப்பொழுது உருவாகியிருப்பதைக் காங்கிரஸ் கூட்டுப் பொதுக் காரியதரிசி ஸ்ரீ கே. ஜி. எஸ். நாயர் இவ்வாரம் எடுத்துக் காட்டி எச்சரித்திருக்கிறார். இந்தியர்களின் பிரஜாவுரிமை மனுக்கள் பைசல் ஆவதின் முன்னால் அவர்கள் இலங்கைப் பிரஜைகள் அல்ல என்ற காரணத்துக்காக வேலை நீக்கம் செய்யக் கூடாதென்றும் இதற்குமாறாக அவர்களுக்கு இலங்கை அரசாங்கம் பிரயாண தஸ்தாவேஜுகள்கூட வழங்க வேண்டுமென்றும் டில்லி ஒப்பந்தத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டது. இதை மீறிப் பிரஜாவுரிமை மனு பைசல் ஆவதின் முன்பே பல இந்தியர்களை வேலையிலிருந்து நீக்கிவிட நோட்டீஸ்கள் வழங்கப்பட்டிருப்பதை ஸ்ரீ நாயர் சுட்டிக்காட்டி "இந்த அக்கிரமமும் உண்டா!" என்று கேட்டிருக்கிறார். —ரஜனி

சென்னை நகரின் புதிய மேயர்

சில தினங்களுக்கு முன் நடந்த சென்னை நகரசபைக் கூட்டத்தில் ஸ்ரீ எம். ஏ. சிதம்பரம் சென்னை மேயர் பதவிக்கு ஏகமனதாகத் தேர்தெடுக்கப் பட்டதைக் குறித்து மகிழ்ச்சி அடைகிறோம். தமது முப்பத்தாறாவது வயதில் இந்த உயர் பதவிக்கு வந்துள்ள ஸ்ரீ சிதம்பரம், செட்டி நாட்டு ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரின் மூன்றாவது புதல்வர் ஆவார். பிரபல வர்த்தகரும் தொழில் அதிபருமான ஸ்ரீ சிதம்பரம் 1951-ம் ஆண்டிலிருந்து தென்னிந்தியவர்த்தக சங்கத்தின் தலைவராக இருந்து வருகிறார். அவர் கிரிக்கெட், டென்னிஸ் பந்து விளையாட்டுகளில் ஆர்வமுள்ளவர். வெளிநாடுகளில் பரந்த வியாபாரத் தொடர்பு உள்ள அவர், பல தடவை அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளுக்குச் சென்று கைத்தொழில், வியாபார நுணுக்கங்களை நன்கு அறிந்து வந்துள்ளார்.




இவ்வாறாக, பல தொழில் துறைகளிலும் இளம் வயதிலேயே மிகுந்த அநுபவமும் செல்வாக்கும் பெற்றுள்ள ஸ்ரீ சிதம்பரம் அவர்களின் மேயர் பதவி காலம், சென்னைமா நகருக்குப் பலன் தரத் தக்கதாக இருக்கும் என்று நம்புகிறோம்.

மேயர் பதவி காலம் ஒரு வருஷமே ஆதலால், இவ்வளவு குறுகிய காலத்துக்குள் பதினெட்டு லட்சம் மக்கள் வாழும் மாபெரும் சென்னை நகரத்தின் உத்தாரணத்துக்காகக் கணிசமாக என்ன செய்ய முடியும் என்ற கேள்வி எழலாம்.

ஸ்ரீ சிதம்பரம் தமது பதவி காலத்தில், குழாய்த் தண்ணீர்ப் பிரச்னை, சேரிகளின் அலங்கோலம், பிச்சைக்காரர்கள் தொல்லை, கார்ப்பொரேஷன் நிதி நிலைமை போன்ற சென்னை சமாளிக்க வேண்டிய பல பிரச்னைகளில் ஏதாவது ஒன்று தீருவதற்கு வழிவகை செய்தால்கூட, சென்னை மக்கள் அவருக்கு நன்றி உடையவர்களாக இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.


தனலக்ஷ்மி
நிட்டிங் கம்பெனி
திருப்பூர்
உழைப்பிலும்
உறுதியிலும்
அழகிலும்
சிறந்தவை
தனலக்ஷ்மி பனியன்கள்
REGD
TRADE
DKC
MARK
ஸ்டாக்கிஸ்டுகள்:
ட. சித்தப்ப செட்டியார் (சிலோன்) லிமிடெட்
கொழும்பு & கண்டி.
V.S. நாச்சிமுத்துசெட்டியார் & சன்ஸ்
சிக்பேட்டை, பெங்களூர் ஸிடி.



அமரதாரா

கல்கி

அத்தியாயம் 26

"அது என்ன ரகசியம்?"

மறுநாள் நான் ஆடுவதும் பாடுவதுமாய் இருந்தேன். பொழுது போனதே தெரியவில்லை. திரும்பத் திரும்பக் கண்ணாடியில் போய் முகத்தைப் பார்த்துக் கொண்டேன். தலையை விதம் விதமாய் வாரிக் கொண்டேன். நெற்றியில் சாந்துப் பொட்டு இட்டுக் கொண்டேன். அழித்து அழித்து இட்டுக் கொண்டேன்.

'அசட்டுப் பெண்ணே, என்ன அலங்காரம் பண்ணிக் கொண்டாலும் உன் முகத்தில் இருக்கிற அழகுதானே இருக்கும்' என்று எனக்கு நானே புத்தி சொல்லிக்கொண்டேன். காரணமின்றி அடிக்கடி சிரித்துக் கொண்டேன். அப்பா வண்டியில் வந்து இறங்குகிற சத்தம் கேட்டதும் என் உற்சாகம் மிதமிஞ்சி விட்டது. என்னுடைய பாட்டு, சிரிப்பின் கூச்சல் எல்லாம் அதிகமாகி விட்டது.

அப்பா உள்ளே வந்ததும் அம்மாவிடம் "இன்றைக்கென்ன, இந்துமதி ஒரே கொம்மாளமாய் இருக்கிறாள்? சிரிக்கிற சிரிப்பு வீதிக்கு வந்து கேட்கிறதே?" என்று கேட்டார்.

அதற்கு என் தாயார் "அவள் சிரிப்பதற்கு ஏதாவது காரணம் வேண்டுமா? திடீரென்று நினைத்துக் கொண்டு சிரிப்பாள்; திடீரென்று நினைத்துக் கொண்டு அழுவாள்" என்றாள்.

இதைக் கேட்டுக் கொண்டே நான் முன் கட்டுக்கு ஓடி வந்து, "இப்பொழுது சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. நான் என்ன செய்வது சொல்லுங்கள்?" என்று அப்பாவைக் கேட்டேன்.

"இந்தப் பழைய ஹாஸ்யத்தை எவ்வளவு தடவைதான் சொல்வது?" என்றார் என் அருமைத் தந்தை.

"பழைய விஷயம்தான் உயர்ந்த விஷயம். கலை, சித்திரம், சிற்பம், சங்கீதம், இலக்கியம் எல்லாம் பழசாக இருந்தால்தான் சிறப்பு என்பீர்களே!" என்றேன்.

"நீ சொன்னது இப்போது என்ன கலையில் சேர்ந்தது?"

"இலக்கியத்தைச் சேர்ந்தது!"

"உன்னோடு வாதம் செய்ய என்னால் முடியாது. முதலில் குடிப்பதற்கு ஏதாவது கொண்டு வா."

"நான் கேட்கிற கேள்விக்குப் பதில் சொன்னால் முதல்தரக் காப்பி கொண்டு வந்து கொடுப்பேன். இப்போதே சொல்ல வேண்டும். அஜந்தாச் சித்திரம்......"

நான் வார்த்தையை முடிப்பதற்குள் என் தந்தை 'கலகல' வென்று சிரித்து விட்டு, "அஜந்தாச் சித்திரம் ஆயிரத்து ஐந்நூறு வருஷம் பழமையானது. அதை யாரும் கொண்டு போய்விட மாட்டார்கள். காப்பி குடித்து விட்டுச் சொல்கிறேன்!" என்றார்.

"இதை மட்டும் சொல்லி விடுங்கள். ஒருவரைப் பார்த்து 'அட, அஜந்தாச் சித்திரமே!' என்று சொன்னால் அது ஒரு வசவுதானே?" என்று கேட்டேன்.

"இது என்ன கேள்வி?" என்று கேட்டுவிட்டு அப்பா சிரித்தார்.

"அது வசவா, புகழ்ச்சியா என்பது சொல்லுகிற குரலைப் பொறுத்திருக்கிறது. மகா கெட்டிக்காரன் என்று சொன்னால் உண்மையிலேயே ரொம்பக்

கெட்டிக்காரன் என்று அர்த்தம் வரும் படியும் சொல்லலாம். பரம முட்டாள் என்று அர்த்தம் வரும்படியும் சொல்ல லாம். ஆனால் அஜந்தாச் சித்திரத்தைப் பற்றிக் கெட்ட அர்த்தம் ஏற்படும்படி இதுவரை யாரும் சொன்னதாக எனக் குத் தெரியாது. உலகத்திலேயே ஒப்பில் லாத கலை அழகு வாய்ந்த சித்திரங்கள் அஜந்தாச் சித்திரங்கள். எங்கேயோ மலைக் குகைகளில் மறைந்து கிடந்ததைக் கொஞ்ச நாளைக்கு முன்புதான் கண்டு பிடித்திருக்கிறார்கள். அது பற்றி ஒரு புத்தகம் கூட என்னிடம் இருக்கிறது. உனக்குக் காட்டுகிறேன். நீயே தெரிந்து கொள்ளலாம்'' என்றார்.

இதற்குள் அம்மா காப்பி கொண்டு வந்து கொடுத்தாள். அவர்கள் இரண்டு பேரும் வந்து விட்டுப் போனதைப்பற்றி நானே சொல்லிவிட வேண்டுமென்று எனக்குத் துடிதுடித்துக் கொண்டிருந் தது. அம்மா ஏதாவது சொல்லி அவர் களைப் பற்றிக் கெட்ட அபிப்பிராயம் அப்பாவுக்கு உண்டாக்கிவிடப் போகி றாளோ என்று பயமாயும் இருந்தது.

காப்பி குடித்தானதும் ''அப்பா, அப்பா! நேற்றைக்கு யார் நம் வீட்டுக்கு வந்திருந் தார்கள், சொல்லுங்கள் பார்க்கலாம்!'' என்று ஆரம்பித்தேன்.

என் குரலில் தொனித்த குதூகலம் எனக்கே வியப்பை அளித்தது.

''தெரியவில்லையே, அம்மா! உன்னு டைய சந்தோஷத்தைப் பார்த்தால் இந்திரன், சந்திரன், பிரும்மா; விஷ்ணு இவர்களுக்குக் குறையாமல் யாராவது வந்திருக்க வேண்டும் என்று தோன்று கிறது'' என்றார்.

''அவர்களெல்லாம் வந்தால் எனக்கு என்ன சந்தோஷம்? யார் வந்தால்தான் எனக்கு என்ன சந்தோஷம்? ஏதோ சொல்லலா மென்று பார்த்தேன்; உங்க ளுக்கு வேண்டா மென்றால் சொல்ல வில்லை'' என்றேன்.

''இல்லை, இல்லை! கட்டாயமாகச் சொல்லியே தீரவேண்டும். சந்திரமணி, அப்படி யார்தான் வந்தார்கள்? நீதான் எனக்குச் சொல்லேன்.''

''இல்லை, இல்லை! நானே சொல்லு கிறேன். ஜமீந்தார் தங்கபாண்டியனும் அவருடைய சிநேகிதரும் வந்திருந்தார் கள். அப்பா! ஜமீந்தார் தங்கபாண்டி யன் முன்னெல்லாம் வாயை மூடிக் கொண்டு இருப்பாரே! நீங்கள் கூட இந்த உம்மணாமூஞ்சிப் பிள்ளை எப்படித் தான் இந்தப் பெரிய ஜமீனை ஆளப்போகி றானோ என்று சொல்வீர்களே, இப்போது அவர் எவ்வளவு வாசாலகர் ஆகியிருக் கிறார் தெரியுமா? என்ன பேச்சுப் பேசுகிறார் தெரியுமா?''

''சிலபேர் அப்படித்தான் சாதுவாய் இருக்கிறார்கள், திடீரென்று சாமர்த்தி யம் வந்து விடுகிறது! தங்கபாண்டிய னுடைய சாமர்த்தியம் மிதமிஞ்சி விடப் போகிறதே என்று இப்போது கவலையா யிருக்கிறது! அந்தப் பிள்ளைக்கும் மாமா சொக்கையாவுக்கும் ஏக ரகளையாம்!''

''எனக்கு ரொம்பவும் சந்தோஷமா யிருக்கிறது!'' என்றேன் நான்.

''எதற்காக உனக்குச் சந்தோஷம்?''

''இந்தச் சொக்கையாவைக் கண்டால் எனக்குப் பிடிக்கிறதேயில்லை. அவனோடு



தங்கபாண்டியன் சண்டை போடுவதில் எனக்குச் சந்தோஷம். அவ்வளவு தைரி யம் தங்கபாண்டியனுக்கு எப்படி வந்தது என்று உங்களுக்குத் தெரியுமா? அவருக்கு ஒரு சிநேகிதர் கிடைத்திருக் கிறார். அவர் பெயர் ரங்கதுரை. அவர்கள் இரண்டு பேரும் நேற்றைக்கு இங்கு வந்திருந்தார்கள், அப்பா. உங்களைப் பார்க்கத்தான். அவர் என்னமோ சரித் திர ஆராய்ச்சியில் ஈடுபட்டவராம். இந்த ஊரில் முத்து வீரப்பப் பாண்டியனைப் பற்றியும், ஊமைத்துரைக் கோட்டை யைப் பற்றியும் உங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுவதற்காக வந்தார். நீங்கள் அடிக்கடி பாடுவீர்களே, அந்த முத்துவீரப்பன் கும்மியில் ஒன்று பாடிக் காட்டினேன். அவருக்கு ஒரே சந்தோ

ஷம். உங்களுக்குத் தெரிந்த எல்லாப் பாடல்களையும் எழுதி வாங்கிக் கொள்ளப் போகிறாராம்!'' என்றேன்.

"அப்படியானால் அந்தப் பையன் புத்திசாலிப் பையன்தான். இந்த மாதிரிப் பாடல்களை அனுபவிக்க ரொம்பப் பரிபக்குவம் வேண்டும். சாதாரணமானவர்க



ளிடம் சொன்னால் ஏதோ நாட்டுப்புறக் கூத்துப் பாட்டு என்று சொல்லி விட்டுப் போவார்கள்'' என்றார் மந்திரமூர்த்தி.

* * *

என் தங்கை சொல்லியிருந்தபடி ஸ்நானபானங்கள் முடிந்ததும், அவராகவே அஜந்தாச் சித்திரங்களைப் பற்றிய புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு வந்து காட்டினார். அதில் உள்ள படங்களைச் சுட்டிக்காட்டி அவற்றின் அழகைப் பற்றியும் கலைத் திறனைப் பற்றியும் விளக்கமாகக் கூறினார்.

முன்னொரு தடவை இந்தப் புத்தகத்தைப் பார்த்ததுண்டு. ஆனால் அதன் பெருமையை அப்போது அறிய வில்லை. சில சித்திரங்களைச் சுவரிலிருந்து இடிந்து விழுந்திருந்த படியே புகைப்படமாக எடுத்துப் போட்டிருந்தார்கள். இது ஏதோ கறையான் அரித்த சித்திரம் போல் அல்லவா இருக்கிறது என்று எண்ணிக் கொண்டேன். இன்னும் சில படங்களுக்குப் புது வர்ணம் கொடுத்துப் பூர்த்தி செய்து முதலில் எப்படி இருந்திருக்குமோ அந்த ரூபத்தில் வெளியிட்டிருந்தார்கள். அவை வெகு அழகாயிருந்தன. அழகு மட்டுமா? பாவங்கள், அங்க நெளிவுகள் இவற்றின் சிறப்பைக் குறித்து என் தந்தை பெரிய பிரசங்கமே செய்து விட்டார்.

"இந்த மாதிரி விஷயங்களைப் பற்றி நீ கேட்பதில்லையே என்றுதான் வருத்தப் பட்டுக் கொண்டிருந்தேன். இப்போது திடீரென்று உனக்கு அஜந்தாச் சித்திரத்தின் நினைவு எப்படி வந்தது?'' என்று கேட்டார்.

"வரும், வரும்! எனக்கு எல்லாம் திடீரென்று தான் வரும்'' என்று சொல்லிச் சமாளித்துக் கொண்டேன்.

என்னுடைய நினைவெல்லாம் உண்மையில் வேறு காரியத்தில் இருந்தது. அவர் அஜந்தாச் சித்திரத்தைப் பற்றி முதலில் குறிப்பிட்ட போது நான் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டு நின்றேன். இப்பொழுது அதைப் பற்றித் தெரிந்து கொண்டு விட்டேன். இதை அவருக்கு அறிவிக்க ஆவல் உண்டாயிற்று. இந்தப் புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு எங்கள் வீட்டு வாசற்புறத்தில் பூந்தோட்டத்துக்குப் போனேன். அங்கே ஒரு செண்பக மரத்தடியில் நின்று கொண்டு அஜந்தாச் சித்திரப் பெண்மணிகள் நின்றது போலவும் கடைக்கண்ணால் பார்த்தது போலவும் நிற்கவும் பார்க்கவும் பயிற்சி செய்யத் தொடங்கினேன். முக்கியமாக ஒரு சித்திரத்தின் பாவம் எனக்கு ரொம்பப் பிடித்திருந்தது. சுலபமாயும் இருந்தது.

ஒரு பெண் ஒரு காலை மரத்தடியில் தூக்கி வைத்துக் கொண்டு, மரத்தின் மீது முதுகு பட்டும் படாமலும் சாய்ந்து கொண்டு, கையில் அழகிய ஒரு பூவை வைத்துக் கொண்டு, அந்தப் பூவிலேயே அவளுடைய உலகமெல்லாம் இருப்பது போல் பார்த்துக் கொண்டிருக்கிறாள். இது மாதிரி நிற்பதற்கு நான் இப்பொழுது நன்றாய்ப் பழகிக் கொண்டேன்.

அன்று பிற்பகலெல்லாம் என் கண் எங்கள் வீட்டு வாசற்புறத்துச் சாலையிலேயே இருந்தது. அவர்கள் வரும் நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். 'அவர் மட்டும் தனியாய் வரக் கூடாதா?' என்ற எண்ணமும் அடிக்

கடி தோன்றிக் கொண்டிருந்தது. இவ்வளவு கஷ்டப் பட்டுத் தெரிந்து கொண்டிருக்கும் அஜந்தாச் சித்திர பாவத்தைப் பின் எப்படி அவருக்குக் காட்டுவது?

கடைசியாக நான் ஆசைப்பட்ட படியே நடந்து விட்டது. நான் எங்கள் வீட்டு முன் பக்கத் தோட்டத்தில் நின்று கொண்டிருக்கும் போது அவர் வந்து விட்டார். அவருடன் தங்கபாண்டியனைக் காணவில்லை. நான் காரணம் விசாரிப்பதற் கெல்லாம் எனக்கு நேரம் இருக்கவில்லை. தோட்டச் சுவரின் கதவு திறந்தே இருந்தது. அவர் இந்தப் பக்கந்தான் வந்தாக வேண்டும். வருவதற்குள்ளே...

சண்பக மரத்தின் அடியில் ஒரு காலை மடித்துச் சாய்ந்து கொண்டு ஒரு கையில் சண்பகப் பூ ஒன்றை வைத்து அதையே கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் வந்து மரத்தின் கிளைகளில் ஒன்றைப் பிடித்துக் கொண்டு நின்றார். என்னைப் பார்த்துக் கொண்டுதான் நின்றார். ஆனால் ஒன்றும் சொல்லவில்லை. எனக்குச் சந்தேகம் வந்து விட்டது. நம்முடைய கருத்தை அவர் புரிந்து கொள்ள வில்லையோ நாம் அலட்சியமாய் இருக்கிறோம் என்று நினைத்துக் கொண்டு விடுவாரோ என்று பயந்து விட்டேன். அவரைப் பார்த்தும் பார்க்காமலும் "அஜந்தாச் சித்திரம் இப்போது எப்படி இருக்கிறது?" என்று கேட்டேன்.

உடனே அவர் "அஜந்தாச் சித்திரத்தைப் பார்த்து விட்டுத் தான் நீ இவ்விதம் நிற்கிறாயா? அல்லது உன்னைப் பார்த்துவிட்டுத் தான் அந்தச் சித்திரக்காரன் சித்



திரம் எழுதினுை என்று திகைத்துக் கொண்டிருக்கிறேன்'' என்ருர்.

எனக்கு அப்போது நேர்ந்த குதூகலத்தைச் சொல்லி முடியாது. ஒன்றும் சொல்வதற்குத் தோன்றவில்லை. மெய் சிலிர்த்தது. இப்படியெல்லாம் ஒருவர் கபடமாகவும் விகசிதமாகவும் பேசக்கூடுமென்று கனவிலும் எண்ணியதில்லை. உண்மையாகவே என்னை அவ்வளவு புகழ்ந்து பேசுகிருர் என்று நம்பினேன்.

இதற்குள் வாசலில் தோட்டக் கதவு மறுபடியும் திறக்கும் சத்தம் கேட்டது. வந்தவர் தங்க பாண்டியன்தான். வழியில் யாருடனே பேசிவிட்டுக் கொஞ்சம் தாமதித்து வந்தார் போலும்.

"வா, வா, உனக்காகத்தான் வீட்டுக்குள் போகாமல் காத்துக் கொண்டிருக்கிறேம்'' என்ருர் ரங்கதுரை.

தங்க பாண்டியன் எங்கள் அருகில் வந்து, "ஏதோ மகாநாடு நடக்கிறதோ என்று பார்த்தேன்'' என்ருர்.

"இரண்டு பேரில் மகாநாடு நடத்த முடியுமா?'' என்ருர் ரங்கதுரை.

நான் அசட்டுத்தனமாக, "அஜந்தா ரகசியத்தைப் பற்றி மட்டும் சொல்ல வேண்டாம்'' என்றேன்.

"அது என்ன அஜந்தா ரகசியம் எனக்குத் தெரியக்கூடாதா?'' என்று தங்க பாண்டியன் கேட்டார்.

"இன்னொருவருக்குத் தெரிந்து விட்டால் அது எப்படி ரகசியமாகும்?'' என்று கூறினேன் நான்.

"உங்கள் இரண்டு பேருக்கும் அதற்குள்ளேயே ரகசிய விஷயம் ஏற்பட்டுவிட்டது என்று எனக்கு எப்படித் தெரியும்?'' என்ருர் தங்கபாண்டியன்.

அப்போது எனக்குச் 'சொரேர்' என்றது. நான் சரியாகப் பேசவில்லை என்பதும் அறிவிக்கப் பட்டது.

ரங்கதுரை உடனே நிலைமையைச் சமாளித்துக் கொண்டு "இந்த ரகசியம் இரண்டு பேர் ரகசியமும் அல்ல, மூன்று பேர் ரகசியமும் அல்ல, உலகமே அறியாத ரகசியம். இந்தப் பெண் கையில் வைத்துக் கொண்டிருக்கிருளே, தங்க பாண்டியா, இந்தப் பூவின் சிருஷ்டி ரகசியத்தை யாராலாவது சொல்ல முடியுமா? இந்தப் பூவின் மரம் எத்தனை லட்சம் வருஷங்களுக்கு முன்னுல் இந்த உலகில் தோன்றியிருக்க வேண்டும்? அப்போதுதான் அது முதன் முதலில் எப்படி உண்டாயிற்று? இந்தப் பூவிலிருந்து உண்டாகும் சிறிய விதையும், அதிலிருந்து உண்டாகப்போகிற விதைகளும் இன்னும் எத்தனை லட்சம் வருஷங்கள் இதைப் போன்ற மரங்களை உண்டாக்கி வர முடியும்? இப்படி உலகத்தின் மகா மேதாவிகளையெல்லாம் திணற அடிக்குப் சிருஷ்டி ரகசியத்தை ஒரு நிமிஷத்தில் சொல்ல வேண்டும் என்று இந்தப் பெண் கேட்டாள், அதற்குள் நீயும் வந்துவிட்டாய்!'' என்ருர்.

தங்கபாண்டியன் அதற்கு "உனக்குச் சரித்திர ஆராய்ச்சியில் மட்டுந்தான் பித்து உண்டு என்று நினைத்தேன். தாவர ஆராய்ச்சியிலும் கிறுக்கு உண்டுபோல்



இருக்கிறது! வா, வா, போகலாம். மந்திர மூர்த்தி வந்து விட்டா ரல்லவா?" என்று தங்க பாண்டியன் என்னைப் பார்த்துக் கேட்டார்.

"ஓ, வந்துவிட்டார்! உங்களை எதிர் பார்த்துக் கொண்டு இருக்கிறார்!" என்றேன் நான்.

ரங்க துரையின் அப் பெரிய பிரசங்கம் என்னைத் திணற அடித்து விட்டது. என்னை விட அதிகமாகத் தங்கபாண்டியனைக் கலக்கி யிருக்க வேண்டும். ஏனெனில் அவர் அஜந்தா ரகசியத்தைப் பற்றி மறந்தே போய் விட்டார்.



* * *

என் தந்தையின் விஷயத்தில் எனது சூழ்ச்சி நன்றாய்ப் பலித்து விட்டது. நாட்டுப் பாடல்களில் பிரியமுள்ள வாலிபனைப்பார்ப்பதில் அவர் மிக ஆவலாக இருந்தார். ஜமீன்தார் தங்கபாண்டியனிடம் அவருக்கு எப்போதுமே அனுதாபம் இருந்தது. ஜமீன் காரியங்களைச் சொக்கையா அநியாயமாக நாசப் படுத்தி வருகிறார் என்ற பரிதாபமு மிருந்தது. ஆகையால் இரண்டு பேரையும் மிக்க அன்புடன் முகமன் கூறி வரவேற்றார். சிற்றுண்டி கொண்டு வந்து கொடுக்கச் சொல்லி உபசரித்தார்.

"முக்கியமாக உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு போவதற்காக வந்தோம். உங்கள் மகள் மீது மோட்டார்க் காரை ஏற்றிவிடப் பார்த்தோம்!" என்றார் தங்கபாண்டியன்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. மோட்டாரை நான்தான் கவிழ்த்து விடப் பார்த்தேன்!" என்றேன் நான்.

"அதுவும் விபரீதமாகத்தான் போயிருக்கும். மோட்டாரின் கிரயத்தைக் கொடுத்து விட்டு மறு காரியம் பாருங்கள் என்று ஜமீன்தார் சொக்கையா பாண்டியன் என்னிடம் மல்லுக்கு வந்திருப்பார்" என்றார் என்னுடைய தந்தையார்.

என் தாயார் இந்தச் சமயத்தில் "இதையெல்லாம் போய் ஒரு பெரிய மோட்டார் விபத்து என்று சொல்கிறீர்களே! நான் எப்பேர்ப்பட்ட மோட்டார் விபத்தில் அகப்பட்டுக் கொண்டேன் தெரியுமா? ஒரு நிமிஷத்தில் என் உயிரே போயிருக்கும்! அந்த ஒரே நிமிஷத்தில் அவர் அந்த மோட்டார் பஸ்ஸைத் தூக்கி என்னைக் காப்பாற்றினார்!"

"அவர் என்றால் யார்? பண்ணையாரைப் பற்றிச் சொல்லுகிறீர்களா?" என்று ரங்கதுரை கேட்டார்.

"நான் அப்படி யெல்லாம் அர்ஜுனன், அபிமன்யு வம்சத்தில் வந்தவன் அல்ல! ரத்தத்தைக் கண்டாலே பயந்துவிடுவேன்! இந்தப் பெண்ணின் தகப்பனார் காசிலிங்கத்தைச் சொல்கிறாள்" என்றார் மந்திரமூர்த்திப் பண்ணையார்.

"அப்படியா, சேதி! அதைப் பற்றி விவரமாய்ச் சொல்லுங்கள், கேட்போம்!" என்றார் ரங்கதுரை.

தங்கபாண்டியனும் வற்புறுத்தினர்.

அதன்மேல் பண்ணையார் நான் பல முறை அவரிடம் கேட்டிருந்த மோட்டார் பஸ் சம்பவத்தைப் பற்றி விவரமாகக் கூறினர். அதைக் கேட்ட இருவரும் மிகவும் அதிசயித்தார்கள்.

"சந்திரமணியின் உயிரை மட்டுந்தான் காப்பாற்றினன் என்று நினைக்காதீர்கள்! நினைவற்றுக் கிடந்த இவளைத் தூக்கிக் கொண்டு போய்ச் சத்திரத்துத் திண்ணையில் போட்டு விட்டுத் திரும்பி ஓடி வந்து மூன்று பேரைக் காப்பாற்றினன். மனு



ஷன் என்றால் காசிலிங்கம்தான் மனுஷன். மற்றவர்களெல்லாம் மண்ணாங்கட்டி!" என்று முடித்தார் பண்ணையார்.

சிறிது நேரம் ஒருவரும் பேசவில்லை. மௌனம் குடி கொண்டிருந்தது.

பிறகு ரங்கதுரை, "இப்படிப்பட்ட மனிதர் நமது தங்கபாண்டியன் தகப்பனைச் சுட்டுக் கொன்று விட்டதாகப் பொய்க் குற்றம் சுமத்தினர்களாமே, இது என்ன அக்கிரமம்!" என்றார்.

"இந்த உலகத்தில் என்ன அக்கிரமம் தான் நடக்காது!" என்றார் பண்ணையார்.

என் அன்னை, "பார்க்கப் போனல் இவரும் பெரிய அக்கிரமம் செய்து விட்டுத்தான் போய்விட்டார். கட்டிய மனைவியையும், பெற்ற மகளையும் அனாதைகளாக விட்டு விட்டு யாராவது போகுமிடத்தைப் பற்றிக் கூடச் சொல்லாமல் போவார்களா?" என்றாள்.

"உங்களுக்குத் தெரியாததற்கு நான் சொல்லப்போவதில்லை. தங்கபாண்டியன் அதைப் பற்றியும் எனக்குச் சொல்லியிருக்கிறன். ஏதாவது முக்கிய காரணமில்லாமல் அவர் போயிருக்க மாட்டார். அதைத் தெரிந்து கொள்ள நமக்குக் காலம் வரவில்லை" என்றார் ரங்கதுரை.

மறுபடியும் சற்று நேரம் மௌனம் குடி கொண்டிருந்தது.

"அவருடைய புகைப்படம் ஏதாவது இல்லையா, அம்மா?" என்றார் ரங்கதுரை.

"இருக்கிறது. அது ஒன்றுதான் அவர் எங்களுக்கு வைத்து விட்டுப் போன ஆஸ்தி. போகும்போது விதம் விதமாக நிறையப் படம் பிடித்துக் கொடுத்து விட்டுப் போனார். முன்னதாகவே தெரிந்துதான் செய்தாரோ, என்னமோ!" என்றாள் என் தாயார்.

எனக்கு இந்தப் பேச்செல்லாம் ஒன்றும் பிடிக்கவேயில்லை. நடுவில் குறுக்கிடக்கூடாது என்பதற்காகப் பொறுமையாகக் காத்திருந்தேன். என்னுடைய பொறுமையும் வரம்பு மீறிவிட்டது.

"போதும் இந்தப் பேச்சு. அப்பா, நீங்கள் முத்துவீரப்பப் பாண்டியனைப் பற்றிச் சில கும்மிப் பாடல்கள் பாடுவீர்களே! அது இவர்களுக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. உங்களிடம் மற்ற பாடல்களைக் கேட்பதற்காகவே முக்கியமாக வந்திருக்கிறார்கள்!" என்றேன்.

"ஆமாம், ஆமாம்! அது மறந்தே போய் விட்டது! பாடல் கேட்பதற்குத்தான் முக்கியமாக வந்தோம். அதோடு ஊமையன் கோட்டை முதலிய இடங்களுக்கு உங்களை அழைத்துக் கொண்டு போய்ப் பார்க்க வேண்டுமென்ற ஆவலும் இருக்கிறது" என்றார் ரங்கதுரை.

"அதற்கென்ன பார்த்தால் போகிறது! நீ என்ன பாடல் அம்மா இவர்களுக்குப் பாடிக் காட்டினய்?" என்று என் தந்தை மந்திரமூர்த்தி கேட்டார்.

அந்த மூன்று பாடல்களையும் நான் சொல்லிக் காட்டினேன்.

"நல்ல பாடல்களையெல்லாம் இந்து மதியே பாடிக் காட்டி விட்டாள்! ஆனல் இன்னமும் பல பாடல்கள் இருக்கின்றன" என்றார் மந்திரமூர்த்தி.

ரங்கதுரை, "கேட்ட பாடல்களுக்கு முதலில் பொருள் தெரிந்து கொள்ளு கிறோம். 'முருகன் கோவில் தெரியக் கட்டிய' என்று சொல்வானேன்? கோவில் கட்டும் போது தெரியாமலா கட்டு வார்கள்?" என்று கேட்டார்.

"இந்த ஊருக்கு வரும் வழியில் சாலை ஓரத்தில் குமரன் கோவில் தெரிகிறதே, பார்த்தீர்கள் அல்லவா? அந்தக் கோயில் ஒரு காலத்தில் மலை உச்சியில் மொட்டைக் கோபுரமாய் ஒருவர் கண்ணிலும் படாமல் இருந்தது. முத்து வீரப்பப் பாண்டியர் வெகு தூரத்துக்குத் தெரியும் படியாக அந்தக் கோவிலுக்குக் கம்பீர மான கோபுரம் கட்டினார். அதனாலே தான் 'தெரியக் கட்டிய' என்று போட்டிருக்கிறது. நீங்கள் இவ்வளவு தூரம் இந்தப் பாடல்களை ரசிப்பதே பெரிய காரியம். ஒன்றும் தெரியாதவர்களாய் இருந்தால் 'குதிரை' என்று சொல்லத் தெரியாமல் 'குருதை' என்று சொல்லு கிறவன் பாடல் எழுத வந்து விட்டான் என்று கேலி செய்வார்கள்."

அப்போது என் தாயார், "குதிரை என்று போட்டு விட்டால்தான் என்ன? குருதை என்று ஏன் அந்தப் பாடலில் சொல்ல வேண்டும்?" என்றாள்.

"அப்படிக் கேள்; ஒரு கேள்வி! நாட்டுப் பாடல் என்றால் நாட்டுக் குடி மக்களின் நாவில் வரும் சொற்களைக் கொண்டு அமைய வேண்டும். இந்த ஊரில் பாளையக்காரர் முத்து வீரப்பப் பாண்டியர் குதிரை மேல் ஏறி பவனி கிளம்பினால் ஊர் ஜனங்களெல்லாம் போட்டி போட்டுக் கொண்டு வந்து தெருவில் நிற்பார்கள். 'அதோ குருதை வாரதைப் பாரு! பாரிசாதக் குருதை மேல் இந்திரன் வாரதைப்போல் பாண்டியன் வாரதைப் பாரு' என்பார்கள். அதை அப்படியே வைத்துப் பாட்டிசைத்திருக்கிறார் நாட்டுப் புலவர். ஆனால் இதை யெல்லாம் விட முக்கியமான பாடல் புலியைப் பற்றிச் சொல்லுகிறது தான். வில்லுப் பாட்டுக் காரனிடம் அந்தக் கதையைக் கேட்க வேண்டும்! முத்து வீரப்பப் பாண்டியர் ஊமைத் துரையைக் காப்பாற்றி அனுப்பிய பிறகு இந்த ஊர் மலைக்காட்டில் மறைந்து திரிந்து கொண்டிருந்தாராம்—"

"அவர்தான் பெரிய வீரராயிற்றே, என்னத்திற்காக மறைந்து திரிய வேண்டும்?" என்றேன் நான்.

"அதற்குள் அவசரப் படுகிறாயே! உன் கேள்விக்குப் பதில் பாட்டிலேயே வருகிறது! பாண்டியன் அப்படிக் காட்டில் அலைந்து கொண்டிருந்தபோது திடீரென்று பதினாறடி வேங்கைப் புலி ஒன்று அவர் எதிரில் நின்றதாம்! அது எப்படிப்பட்ட புலி! எமனும் கண்டு அஞ்சக் கூடிய வேங்கைப் புலி! பற்களைக் கோரமாகக் காட்டிக் கொண்டு பாண்டியன் முன் நின்றது. பாண்டியன் அப் புலியைப் பார்த்துச் சொல்கிறார்:

'அடே, புலிப் பயலே! என் கையில் வேல் இருக்கிறதைப் பார்த்தாயா? இதை நான் உன் மேல் எறிவேன் என்று பயப்படாதே! இந்த வேலை நான் கட்ட பொம்மனைத் தூக்கிலே போட்ட கும்பெனி வெள்ளைக்காரர்களுடைய நெஞ்சில் பாய்ச்சுவதற்கென்றே வைத்திருக்கிறேன்! இதை உன் மேல் எறிய மாட்டேன்! உன்னைக் கொல்லுவதற்கு என்னுடைய இந்தக் கையே போதும்! அடே புலிப் பயலே! என்னடா உறுமுகிறாய்?' என்று சொல்லி விட்டுப் பாண்டியன் வேலைக் கீழே போட்டார். உடனே ஒரு பாய்ச்சல் பாய்ந்து புலியின் வாலைப் பிடித்துக் கொண்டு, அதை இழுத்துத் தலைக்கு மேலே ஒரு சுற்றுச் சுற்றிக் கீழே போட்டு மடித்தார். அதே மூச்சில் பாண்டியன் புலியைக் கீழே தள்ளியதும், அதை மிதித்ததும், துகைத்ததும், கொன்றதும் வில்லுப் பாட்டுக் காரன் பாடும்போது நம் கண் முன்னால் தோன்றும். ஒரு நிமிஷம் அவனுடைய முகம் புலியைப் போல இருக்கும்! இன்னொரு நிமிஷம் பாண்டியனுடைய முகம் போல் ஆகிவிடும்! கண்கள் அக்கினிப் பிழம்புபோல இருக்கும்! பற்கள் 'நற நற' வென்று கடிக்கும்! இந்த மாதிரி வில்லுப் பாட்டுப் பாடக் கூடியவர்கள் இந்த நாளில் இல்லாமலே போய் விட்டார்கள்."

இதுவரையில் சும்மா யிருந்த தங்க பாண்டியன் இப்போது குறுக்கிட்டு, "நான் கூட ஒரு வில்லுப் பாட்டுக் காரனை இந்த ஊரில் பார்த்திருக்கிறேன். அவனை வில்லுப் பாட்டுப் பாடச் சொல்வதற்குள் ஐந்து புட்டிச் சாராயம் வாங்கிக் கொடுக்க வேண்டி யிருந்தது. என்னத்தைச் சொல்ல?" என்றார்.

இதைக் கேட்டு எல்லாரும் 'கொல்' லென்று சிரித்தோம்.

* * *

நேரம் போவதே எங்களுக்குத் தெரியாமல் இருந்தது. தங்கபாண்டியன்தான் முதலில் தம் கைக் கடிகாரத்தைப் பார்த்

தார். "ரொம்ப நேரம் ஆகி விட்டது, போகலாமா?" என்று ரங்கதுரையைப் பார்த்துக் கேட்டார்.

ரங்கதுரை, "அம்மா சொன்ன படங்களை இன்னும் பார்க்கவில்லையே! நான் பார்த்துவிட்டுத்தான் வரப்போகிறேன்! நீ வேண்டுமானால் முன்னால் போ! அரை மணிக்குள் வந்து விடுகிறேன்" என்றார்.

தங்கபாண்டியனுடைய முகத்தை அப்போது பார்த்தேன். முகம் சிவந்திருந்தது. ரங்கதுரை இங்கே இருப்பது எதனாலோ அவருக்குப் பிடிக்க வில்லை என்று தோன்றியது. வேறு வழி யில்லாமல், "சரி, அரைமணி நேரம் கழித்து நானே வந்து அழைத்துப் போகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனார்.

ரங்கதுரை தங்கபாண்டியனைப் போகச் சொல்லிவிட்டு இன்னும் சிறிது நேரம் எங்களுடன் பேசிக் கொண்டிருப்பதற்காகவே படங்களைப் பார்ப்பதில் அவ்வளவு ஆவல் காட்டினார் என்று நினைத்தேன். சிறிது நேரத்துக்கெல்லாம் அவ்விதம் இல்லை என்று தெரிந்து விட்டது. என் தந்தை காசிலிங்கம் தான் மட்டும் எடுத்துக் கொண்ட படத்தையும், எங்கள் எல்லாருடன் சேர்ந்து எடுத்துக்கொண்ட படத்தையும், என்னை மட்டும் மடியில் வைத்துக் கொண்டு எடுத்த படத்தையும் திரும்பத் திரும்ப உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். அவற்றில் ஒரு படம் நான் மூன்று பிராயக் குழந்தையாய் இருந்தபோது கையில் புகைப்பட 'ஆல்பம்' ஒன்றை வைத்துக் கொண்டு அதில் உள்ள படங்களை ஒவ்வொன்றாகப் பிரித்துக் கீழே போடுவது போல் எடுக்கப் பட்டிருந்தது. இந்தப் படம் ரங்கதுரையின் கவனத்தை மிகுதியாகக் கவர்ந்தது.

"இது என்ன இப்படி ஓயாமல் பார்த்துக் கொண்டு இருக்கிறீர்களே! உயிருள்ளவர்கள் நேரில் இருக்கும்போது உயிரற்ற படங்களை யாராவது பார்த்துக் கொண்டிருப்பார்களா?" என்றேன் நான்.

"இல்லையே, இப் படங்களில் உள்ள ஒருவர் இப்போது நமக்கு நேரில் இல்லையே!" என்றார் ரங்கதுரை.

என் தாயார், "அவரை உங்களுக்கு முன்பின் தெரியாது. எங்களைக் கைவிட்டுப் போய்ப் பன்னிரண்டு வருஷம் ஆயிற்று. நாங்களே அநேகமாய் மறந்து போய் விட்டோம். நீங்கள் இந்தப் படத்தை உற்று உற்றுப் பார்ப்பதில் என்ன பிரயோஜனம்?" என்றாள்.

"இப்போது காசிலிங்கம் திரும்பி வந்தால் நமக்கு அடையாளம் தெரியுமா என்று கூடச் சொல்ல முடியாது. பன்னிரண்டு வருஷங்களில் எவ்வளவோ மாறுதல்கள் உண்டாகி யிருக்கும்" என்றார் மந்திரமூர்த்திப் பண்ணையார்.

"அப்படிச் சொல்ல முடியாது. சில பேருடைய முகம் மட்டும் எப்போதும் மாறுவதில்லை" என்றார் ரங்கதுரை.

திடீரென்று எனக்கு ஒரு யோசனை தோன்றிற்று. "என் தந்தையின் முகம் போல் உடையவரை நீங்கள் எங்கேயாவது பார்த்ததுண்டா?" என்றேன்.

ரங்கதுரை என்னை வியப்புடன் பார்த்து விட்டு. "ஆமாம், பார்த்திருக்கிறேன்! இதோ உன்னைப் பார்க்கிறேனே, அதுதான்! உன் தந்தையின் முகத்திலிருந்து மீசையைமட்டும் எடுத்து விட்டால் உன் முகம் போலவேதான் இருக்கும்!" என்றார்.

என் தாயார் "ஆனால் அவர் ஆறடி உயரம், ஆஜானுபாகுவாய் இருப்பார். ஒவ்வொரு கையும் ஒரு துதிக்கை நீளம்

இருக்கும். இந்தப் பெண ஆகிருதியிலும் என்னைக் கொண்டு விட்டாள், அசட்டுத் தனத்திலும் என்னைக் கொண்டு விட்டாள்" என்ருள்.

ரங்கதுரை சிரித்துக் கொண்டே, "உங்கள் அளவு அசட்டுத்தனம் இருந்தால், இந்தப் பெண் எவ்வளவோ கெட்டிக்காரியாய் இருப்பாள்! சமய சந்தர்ப்பம் தெரியாமல் பேசி விட்டு விழிக்க மாட்டாள்!" என்ருர்.

பிறகு அவர் ஊமையன் கோட்டைக்குப் போவது பற்றி என் தங்கையிடம் கேட்டார். அவசியம் அழைத்துக் கொண்டு போவதாகவும் ஆனல் அங்கே போய்ச் சேருவது, சுற்றிப் பார்ப்பது எல்லாம் கொஞ்சம் கஷ்டமாய் இருக்குமென்றும், ஒரு பகல் முழுவதும் இருந்து விட்டு வருவதற்குத் தயாராகச் சாப்பாடு, குடி தண்ணீர் முதலியவை தயார் செய்து கொண்டு போக வேண்டுமென்றும் மந்திரமூர்த்தி சொன்னர்.

"நானும் வருவேன், நானும் வருவேன்" என்று நான் கூச்சலிட்டுக் கூத்தாடிக் கொண்டிருந்தேன்.

"உன்னல் அந்தச் செங்குத்தான மலையில் பாதி தூரம் கூட ஏற முடியாது" என்ருர் மந்திரமூர்த்தி.

"அப்படியானல் என்னைத் தூக்கிக் கொண்டு போங்கள்! எப்படியும் நான் வந்துதான் தீருவேன்!" என்றேன்.

"இந்தப் பெண் கிடக்கிருள். நீங்கள் அவர்களுடன் போய் விட்டு வாருங்கள்!" என்ருள் என் அன்னை.

"இன்னெரு விஷயமும் சொல்லி விடுகிறேன்! ஊமையன் கோட்டையில் சில இருண்ட குகைகள் இருக்கின்றன. அக்குகைகளைப் பற்றிப் பலவிதமான வதந்திகள் உண்டு" என்ருர் மந்திரமூர்த்தி.

"என்ன வதந்திகள்?" என்று துடிப்புடன் கேட்டார் ரங்கதுரை.

"அங்கே பேய் பிசாசுகள் உலாவுவதாக ஒரு வதந்தி! முத்து வீரப்பப் பாண்டியனுடைய ஆவியே அந்தக் குகைகளில் அலைந்து கொண்டிருக்கிறதாம்! 'கொண்டு வா, அந்தச் சொக்கையா பாண்டியனை!' என்று சில சமயங்களில் கூச்சல் போடுமாம்!"

"என்ன? என்ன? சொக்கையா பாண்டியனையா?" என்று நாங்கள் எல்லாரும் வியப்புடன் கேட்டோம்.

"இல்லை, இல்லை! இந்தச் சொக்கையா பாண்டியன் இல்லை. இவனுடைய மூதாதை ஒரு சொக்கையா பாண்டியன் இருந்தான். அவனும் ஒரு பாளையக்காரன். முத்து வீரப்பன் ஒளிந்திருந்த இடத்தை அவன்தான் கும்பினிப் பட்டாளத்துக்குக் காட்டிக் கொடுத்ததாக வதந்தி. இந்தக் கதையெல்லாம் தம்பி, உன்னுடைய சரித்திர ஆராய்ச்சிக்கு ஒன்றும் பயன்படாது" என்ருர் மந்திரமூர்த்திப் பண்ணையார்.

குமரன் கோவிலுக்கும், ஊமைத்துரைக் கோட்டைக்கும் போய் வருவதற்கு அடுத்த வாரத்தில் ஒருநாள் நிச்சயப்படுத்திக் கொண்டோம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் குதூகலமாகச் செய்யத் தொடங்கினேம். (தொடரும்)

கல்கி ஆசிரியர்

பல நண்பர்களும் கல்கி நேயர்களும் 'கல்கி' ஆசிரியரின் உடல்நிலை பற்றிக் கவலையுடன் விசாரித்து வருகிருர்கள். அவர்களுக்குக் 'கல்கி' ஆசிரியர் தமது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிருர். சில மாதகாலமாகவே 'கல்கி' ஆசிரியர் உடல் நலம் கருதிச் சிகிச்சை பெற்று வந்தார். சென்ற நவம்பர் மாத இறுதியில் ஒரு நாள் அவரது உடல் நிலை ஒரு தீவிர கட்டத்தை அடைந்திருந்தது. இறைவன் அருளாலும் வைத்தியர்களின் உதவியாலும் இப்போது அந்தக் கட்டத்தைக் கடந்து, துரிதமாக முன்னேற்றம் அடைந்து வருகிருர். ஆசிரியருக்கு வந்த நோய் 'புளூரஸி' என்று கருதப்படுகிறது. இன்னும் இரண்டு மாத காலத்துக்கு ஆசிரியர் எந்த விதமான அலுவல்களையும் மேற்கொள்ளக் கூடாது என்று வைத்தியர்கள் கண்டிப்பாகக் கூறியிருக்கின்றனர். இறைவன் திருவருளாலும், 'கல்கி' நேயர்கள்; எழுத்தாள நண்பர்கள் ஆகியவர்களின் அன்பினலும் 'கல்கி' ஆசிரியர் அதிவிரைவில் பூரண குணம் அடைந்து முன்போல் எல்லாக் காரியங்களையும் மேற்கொள்ளக் கூடியவராவார் என்று எதிர்பார்க்கிறேம். ★★★

அன்னை சாரதாமணி

சுவாமி ருத்ரானந்தா

ஓரிடத்தில் இரண்டு நதிகள் ஒன்று கூடின. ஒரு நதி இன்னொரு நதியைப் பார்த்து, "அக்கா! இதென்ன 'கடல்' என்று சொல்லுகிறார்களே, அது எப்படியிருக்கும்!" என்று கேட்டது. "ஆம் தங்காய்! நானுந்தான் கேள்விப் பட்டேன். எனக்கும் பார்க்க வேண்டும் என்றுதான் ஆசை. கடலைக் கண்டவர்கள் அது 'மிகப் பெரியது' என்று சொல்லுகிறார்கள். அது எவ்வளவு பெரியது என்று யாருக்கும் சொல்லத் தெரிய வில்லை. வா; நேரில் போய்ப் பார்ப்போம் நாம்," என்றது இரண்டாவது நதி. இரண்டும் ஒன்றாகவே கூடிப் போய்க் கடலை அடைந்தன; கடலில் மறைந்தன. கடல் எவ்வளவு பெரியது; அது எப்படிப் பட்டது என்று யாரே சொல்ல வல்லார்! அன்னை யார்! அன்னை எப்படிப் பட்டவள்! அன்னையை அறிந்தவர் யார்! சொன்னவர் யார்! என்ன சொன்னார்!

"ஸாக்ஷாத் சாரதையே (அன்னை சாரதா தேவியைக் குறித்து) இவள்; சரஸ்வதி தேவி; ஞானத்தைப் புகட்டவே வந்திருக்கிறாள். ஆனால் தன் சுய அழகைத் தானே இம்முறை மறைத்துக் கொண்டு விட்டாள். ஏனெனில், நல்லொழுக்க மற்றவர் யாரேனும் தன்னைக் காணும்போது, அத்தகையோர் தீய நோக்கினைக் கொண்டவராயின், அவர் வீணில் துயரினை யடைவரே என்ற இரக்க உணர்ச்சியாலேயே தன்னுடைய சௌந்தரியத்தைத் தானே மறைத்துக் கொண்டு வந்திருக்கிறாள். ஞானமே வடிவாய் அமைந்த இவளை ஒரு சாமானியப் பெண்ணென்று நினைக்கின்றீர்கள்! இல்லை, இல்லை. இவள் என் அன்னை பராசக்தி!" என்றார் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் கடுந்தவம் புரிந்த அக் காலத்தில் ஒரு நாள் அற்புதக் காட்சி ஒன்றைக் கண்டாராம். அவரது கண்முன்னே அழகிய மாது ஒருத்தி அன்பு வடிவுடன் நிற்கக் கண்டார். முகத்தில் கருணை ரஸம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. அம் மாதின் எழிலையும், கருணை நோக்கையும் கண்ட ஸ்ரீ ராமகிருஷ்ணர் அது சீதையின் வடிவே யென ஓர்ந்தார். அந்தத் திவ்யக் காட்சியில் திளைத்திருந்து ஆனந்தம் அடைந்தார். இதைப் பற்றிப் பின்னொரு கால் தமது சிஷ்யர்களிடம் அவர் பேசும்போது, சீதையின் கைகளில் மணிகள் இழைத்த வளையல்கள் பொருந்தி யிருந்ததைத் தாம் கண்டதாகக் கூறி யுள்ளார்.

அது மாத்திரமன்றி, தம்முடைய சிஷ்யர்களின் உதவியால் அவ் வளையல்களைப் போன்றதான வளையல்கள் புதிதாகத் தயாரிக்கச் செய்து, அன்னை சாரதையின் கைகளில் அவற்றை அணிவித்து அவர் ஆனந்தம் கொண்டாராம்! மேலும், வேடிக்கையாகப் பேசித் தமது சிஷ்யர்களை மகிழ்விக்க எண்ணி, "கட்டழகியான என் மனைவிக்குக் கணவனான யான் கைநகைபோடுவது கடமையே அன்றோ!" என்றாராம்.



மனைவியைக் கடவுளாக மதித்து வணக்கம் செய்த ஸ்ரீ ராமகிருஷ்ணரின் விந்தைச் செயலையும் மக்கள் அறிந்திருக்கின்றனர். கற்பின் பெருமையை உணர்த்த வந்த வள்ளுவர்,

> தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் மழை

என்று கூறியுள்ளார். மனைவிக்குக் கணவனே தெய்வம் என்ற மாமறைப்படி பாரத மக்கள் பெண்மணிகளுக்கு அவர் தம் லக்ஷியத்தைப் பற்றிய படிப்பினையையே எப்போதும் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். ஆனால், கற்பெனப்படுவது ஆண் பெண் இருபாலார்க்கும் ஒத்ததே என்பதை மறந்து விட்டனர். "கற்பு நிலையென்று சொல்ல வந்தால், இரு கக்ஷிக்கும் அஃது பொதுவில் வைப்போம்" என்று பாரதியார் பாடினார்.

> "ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
> அறிவி லோங்கி இவ் வையம் தழைக்குமாம்;
> பூணு நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப்
> போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்"

என்றும் பாடியுள்ளார். ஆயினும் கணவன் தன்னுடைய மனைவியையே கடவுளாய் மதிக்க இயலுமோ! மதித்தல் வேண்டுமோ! இதைப் பற்றி இங்கு நாம் விவரிக்க விரும்பவில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் செய்தது என்ன என்பதை மட்டும் இங்கே குறிப்பிடுகின்றோம்.

ஒரு நாள் அவர் ஓர் ஆசனத்தில் சாரதா தேவியைத் தம் முன் அமரும்படி ஜாடை செய்தார். அவர் அச்சமயம் ஒருவகை தெய்வீக உணர்ச்சியில் மூழ்கி யிருந்தார். தேவியும் அது சமயம் தன்வய மிழந்து, தன் கணவன் குறிப்பறிந்து ஆசனத்தில் அமர்ந்தனள். பரமஹம்சர் தாம் செய்த தவத்தினையும், தவப் பயனையும், கையிற் கொண்ட ஜப மாலையுடன் தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தேவியின் திருவடியில் அர்ப்பணம் செய்தார். அவ்வளவுதான்; உடனே இருவரும் சமாதி நிலையை அடைந்தனர். தந்திர சாதனைகளில் தலை சிறந்த தான சடங்கு ஒன்று இது வெனப் பின்னர் புலப்பட்டது. 'சோடசி பூசை' என்று இதனைச் சொல்லுவார்கள். கடவுளை யடையும் வழிகள் என்னென்ன உண்டோ அவை யாவற்றையும் பயின்றவர் அன்றோ பரமஹம்சர்!

சன்னியாசம் பூண்ட சாதுக்கள், சாதாரணமாய் ஒன்று விவாகமே செய்து கொள்ளாதவர்களாய் இருப்பார்கள்; இல்லையேல், முன்னதாக விவாகம் ஆனவர்களாய் இருப்பின், மனைவியை விட்டுப் பிரிந்து தொலைவில் சென்று, பின்னர் மனைவியை மறந்து விடுவார்கள். ஸ்ரீராம கிருஷ்ணரின் கதையோ முற்றிலும் மாறானதாயும் அதி விசித்திர மானதாயும் ஏற்பட்

டது. ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு விவாகம் செய்ய வேண்டுமென்று அவரது தாய் சந்திரமணியம்மை நினைத்தபோது அவருக்கு வயது இருபத்து நான்கு; வினை தெரியாத வயதல்ல. முற்றிலும் கடவுள் நினைவிலேயே மூழ்கியிருந்தவர் என்றாலும், நூற்றுக்கு நூறு பங்கு தியாக புத்தி உடையவராயிருந்தும், தாம் பிறவித் துறவியாயிருந்தும், தாயார், 'விவாகம் செய்து கொள்' என்று சொன்னபோது, 'வேண்டாம்' அல்லது 'மாட்டேன்' என்று சொல்லாமல், அதற்கு அவர் உடனே தயாரானார்! நிற்க, பெண்ணுக்காக எப்பக்கமும் அலைந்து கொண்டிருக்கும்போது, நான்கு மைல் தூரத்தில் இருந்த ஜயராம்பாடி என்ற கிராமத்தில் பிறந்து வளர்ந்து வந்த ஐந்து வயதுப் பெண் சாரதாமணியைத் தமக்கு வாழ்க்கைத் துணைவியாக விவாகம் செய்யும்படி அவர் தாமே காட்டிக் கொடுத்தார். இதிலும் ஒரு ரகசியம் இருக்கத்தான் வேண்டும்.

பின்னர், பெண்ணுக்குப் பதின்மூன்று வயதளவு இருக்குங்கால், ஒரு சமயம் தம்முடைய பிறந்த ஊராகிய காமர்ப்புக்கூருக்கு, ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு முறை போயிருந்தார். அச்சமயம் சாரதாமணியைத் தம்மருகே வைத்துக் கொண்டு உலகத்தில் பெண்மணிகள் யார் யாரிடத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்ற போதனையை விஸ்தாரமாகச் செய்து வைத்தார். தாம் அதிகம் படிக்கவில்லையாயினும், எழுதப் படிக்கவும் ஓரளவு கற்றுக் கொடுத்தார். கடவுளை வழிபடும் மார்க்கமும் கற்றுக் கொடுத்தார். அப்போது தான், "சந்திரன் எல்லோருக்கும் மாமா; 'சந்த மாமா, வா வா!' என்று எத்தேசத்துக் குழந்தைகளும் அன்புடன் ஒரே சந்திரனை எவ்வாறு அழைக்கின்றார்களோ, அது போலத்தான் ஒரே கடவுள் எல்லோருக்கும் கடவுளாய் இருக்கிறார்; யார் அன்புடன் அழைப்பினும் அவர் இசைந்து வருவார்" என்ற ஒரு பேருண்மையை எளிதில் உணரும்படி அன்னை சாரதா தேவிக்கு அவர் புகட்டினார். இந்த உபதேசத்தின் வழியாகவே, "'அம்மா, அம்மா!' வென்று யார் அழைப்பினும் அத்தகையோர் யாவருக்கும் ஒரே தாயாகவே நீயும் அமைய வேண்டும்" என்பதையும் ஒருவாறு உணர்ப்பித்தார் போலும்!

அன்னை சாரதா தேவிக்கு இன்னும் குழந்தைப் பருவமான வயதே இருந்து வந்தது அப்போது; வினை தெரிந்த வயது இன்னும் ஆகவில்லை. ஆயின் அன்னைக்குப் பதினேழு வயது ஆன போது என்ன நடந்தது! இராமகிருஷ்ணர் எப்போதும் போல் பித்துப் பிடித்தவராகவே இருந்தார். எல்லோரும் பணத்துக்கோ, புகழுக்கோ, பெண்ணுக்கோ அன்றி வேறு ஏதாவது ஒன்றுக்கோ பித்துத்தான் பிடித்தவர்களாய் இருக்கிறார்கள்; தம்முடையதோ கடவுள் பித்து என்று அவர் தம்மைப் பற்றிக் கூறுவதுண்டு. இப்போதோ நல்ல பருவமடைந்த வயதில், தனக்குத் தாலிகட்டிய கணவனை நாடி மனைவி செல்கிறாள். ஆனால் தன்னை மறந்திருக்கும் தன் கணவனிடம் போனால், அவர் எப்படி வரவேற்பாரோ! துஷ்யந்த ராஜனிடம் சென்ற சகுந்தலை என்ன பாடுபட்டாள்! களங்கமற்ற நெஞ்சு, புயலடித்த போது கடல் பொங்கியதே போலப் பேராவலாகிய புயலால் பொங்கிக் கொண்டிருந்தது. இந்த நிலைமையில் இராமகிருஷ்ணர் அளித்த அத்தனை ஆதரவுடன் கூடிய வரவேற்பு எதிர்பாராத இன்பத்தைக் கொடுப்பதாக இருந்தது. எல்லா வகை உபசாரங்களும், தம்முடன் கூடவே தங்கவசதியும் அவரால் அளிக்கப்பட்டன.

"உனக்கு யான் கணவனாகவும், எனக்கு நீ மனைவியாகவும் ஏற்பட்ட நிலைமையால், ஏ! சாரதா! என்னுடைய சரீரம் உனக்குப் பாத்தியப்பட்டது. என் பொருட்டான கவலையோ கருத்தோ நீ கொள்ளாமல், உனக்கு இச்சை உண்டானால், இந்தச் சரீரத்தைக் கொண்டு நீ அடையக்கூடிய இன்பத்தை அடைவாயாயின் எனக்குச் சம்மதமே," என்றார் கணவனான இராமகிருஷ்ணர். தாம் ஏற்றுப் பிறந்த காரியத்துக்குத் தடையாக இல்லாமல், உற்ற துணையாகவே எப்போதும் இருப்பாளோ என்பதை உறுதிப் படுத்திக் கொள்ள இவ்வாறு பரீட்சித்தார் போலும்! அதற்கு மனைவியான அன்னை சாரதை என்ன சொன்னாள்! தான் அன்னை சாரதையே என்பதையும், மனைவி யல்லள் என்பதையும் காட்டி விட்டாள்! "உம்மைத் தெய்விகத் தன்மையிலிருந்து கீழே தள்ள நான் இங்கே வரவில்லை; கூடுமானால் உமக்குத் துணையாக இருந்து சேவை செய்யவே யல்லவா நான் உம்மைத் தேடிக் கொண்டு வந்தேன்!" என்று அன்னை கண்களில் நீர் ததும்ப ஆதுரத்துடன் பதில் உரைத்தாள்.

* * *

பெண் தன்மையில் தாய்மையே தலை சிறந்த குணமென்பதும், தாய்மைக் குணத்தாலேயே தண்ணருள் சுரக்கின்ற தென்பதையும் அன்னையின் பிற்கால வாழ்க்கையிலிருந்து இன்னும் அதிகமாய்க் கண்டறிகின்றோம். எண்ணில் அடங்காத உலக மக்கள், தீய ஒழுக்கமே குடி கொண்ட இழிப்பட்டவர்கள், ஒன்றுமறியாத எளியோர், பாபியர் ஆகிய எல்லா வகையோரும் ஸ்ரீ சாரதா தேவியால் சிஷ்யர்களாக ஏற்றுக் கொள்ளப் பட்டுக் காப்பாற்றப் பட்டிருக்கிறார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஸ்திரீ சிஷ்யையான யோகினிமா ஒரு நாள் அன்னையிடம் வேடிக்கையாய்ப் பேசிப் பரிகாசம் செய்கிறாள்: "பார், அம்மா! உனது கணவன் குருவாகி, எப்படிப் பட்ட மேலான சிஷ்யர்களைப் பொறுக்கி எடுத்துத் தயாராக்கி விட்டிருக்கிறார். விவேகானந்தர், பிரமானந்தர் முதலான மணிப் பிள்ளைகளை யல்லவா அவர் கண்டு பிடித்தார்! அம்மம்மா நீ எப்படிப் பட்டவர்களை யெல்லாம் சிஷ்யர்களாக்குகிறாய்! மிகக் கேவலமானவர்கள்தான் உன்னிடம் வருகிறார்கள். உனது கணவனுக்குக் கிடைத்தமாதிரி உனக்கு எங்கே சிஷ்யர்கள் கிடைக்கப் போகிறார்கள்!" என்று சொல்லலானாள். அதற்கு, "ஆம், அம்மா! நல்லதை எல்லாம் அவர் பொறுக்கி யெடுத்துக் கொண்டு மற்றதை யெல்லாம் என்னிடம் ஒப்படைத்து விட்டுப் போய் விட்டார். ஆனால் அவருடைய காரியந்தானே நான் செய்வது! தம்முடைய காரியத்தை இவ்வண்ணம் நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தானே என்னையும் அவர் ஆட்கொண்டார்! இதற்காகவல்லவா என்னை இவ்வுலகில் இருக்கச் செய்து அவர் முந்திக் கொண்டு விட்டார்!" என்று கூறி அவர்களை அன்னை மகிழ்வித்தாள். அக்காலத்தில் ஐந்து வயதுப் பெண்ணாகிய சாரதாமணியைக் குருதேவர் தமக்கெனச் சுட்டிக் காட்டிய ரகசியம் இதில் ஒருவாறு வெளியாகின்றது.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் உடல் நீத்த காலத்தில் அன்னைக்கு வயது முப்பத்து மூன்று. சன்னியாசி சிஷ்யர்கள் சிறு வாலிபர்களாய் இருந்தனர். சிறுவர்கள் சோக மிகுதியால் தங்களைத் தேற்றிக் கொள்ளச் சக்தியற்றவர்களாகி, அங்குமிங்குமாகச் சிதறி விட்டார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் வந்த

காரியம் நிறைவேறுவது எப்படி! இது இங்ஙனமாக, விதவைகளாகும் ஸ்திரீகள் வழக்கமாய் அனுஷ்டிப்பதைப் போல, அன்னை சாரதா தேவி, உலக ஆசாரத்தை அனுசரித்துத் தமது கை வளையல்களை நீக்கிவிட யத்தனித்தனர். ஆனால், என்ன ஆச்சரியம்! தக்ஷணமே இராமகிருஷ்ணர் அன்னையின் முன் தோன்றி, அன்னையின் கையைப் பற்றியவராய், "என்ன! நான் இறந்து விட்டேன் என்று நினைக்கிறாய்!" என்று கூறிப் புன்முறுவல் பூத்த முகத்துடன் மறைந்தனர். அது முதல் தேவி தாம் நித்ய சுமங்கலியே என்பதையும், தாமும் ஸ்ரீ ராமகிருஷ்ணரும் ஒன்றே என்பதையும், சக்தியும் சிவமும் ஒரே வஸ்துவானதே என்பதையும் நிலையாகக் களங்கமறக் கண்டுணர்ந்து வந்தனர். அதனால், உலக ஆசாரத்தையும் மீறி, அது முதல் கடைசி வரையிலும், கை வளையை நீக்காமலும், கரையில் சிவந்த மெல்லிய கோடிட்ட வஸ்திரத்தையே புடவையாக உடுத்தியும் வந்தார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் பின் சிஷ்யர்கள் ஒன்று கூடி மடத்தை ஸ்தாபித்ததும், அவரது சேவா காரியங்களை நடத்தியதும், பிரசார வேலைகளைப் புரிந்ததும் ஆகிய இவை யாவும் தேவியின் அருளாலும், அன்பினாலும், ஆக்ஞையினாலும், பராமரிப்பினாலுமே என்பதை எல்லோரும் அறியார். இதனை விளக்க சுவாமி விவேகானந்தர் தேவியைப் பற்றி இவ்வண்ணம் கூறுகிறார்:

"எங்கள் அன்னையை யார் அறிவார்! பெரிய யோகீசுவரர்களாலும் அவளை அறிய முடியாது. மற்றவர்களைப் பற்றிப் பேசுவானேன்! ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் போன்ற ஓர் அவதார புருஷரால் பூஜிக்கப்படுவதான தொழுகையை ஒரு சாமானிய ஜீவனால் ஏற்றுத் தாங்க முடியுமோ! இதிலிருந்தே எவ்வளவு மகத்தான சக்தியை உள்ளே நிறைத்து வைத்த பாத்திரம் ஆனாள் எமது அன்னை என்பதை ஒருவாறு ஊகித்தறிய வேண்டும்."

இவையும், இவை போன்ற இன்னும் பல மொழிகளும் சுவாமி விவேகானந்தரால் அருளிச் செய்யப்பட்டவை. மற்றவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதை நாம் ஏன் ஆராய வேண்டும்! எல்லோரும், "அம்மா, அம்மா!" என்றே தான் பல்லவி பாடுகின்றார்கள். நாமும் "அம்மா அம்மா!" என்றே பாடி வணங்குவோம்.

மலரும் மணமும்

"அண்ணா"

அன்னை ஸ்ரீ சாரதாமணி தேவியின் நூற்றாண்டு விழா நாடெங்கும் கொண்டாடப்படுகிறது.

நல்ல பூவின் வாசனை காற்றில் மிதந்து வருவது போல் புண்ணிய வாழ்க்கையின் வாசனை கால தேசங்களைக் கடந்து வந்து நமது உள்ளத்தைக் கவர்கின்றது என உபநிடதம் கூறுகின்றது. இப்புண்ணியவதியின் வாழ்க்கைமணம் அத்தகையது. செல்வமும், கல்வியும், மக்கட்பேறும் இல்லாத இவருடைய தூய வாழ்க்கை இவரைக் கண்டும் கேட்டுமிராத ஆயிரக்கணக்கான மாந்தர்களைக் கவர்ந்து இன்றும் அவர்கள் வாழ்க்கையை நல்ல வழியில் திருப்பும் வலியுடையதாயிருக்கிறது.

ஆன்ம வாழ்க்கையின் சக்தியைப் பற்றிக் கூறும் போது அச் சக்தியைப் பெற்றவர்கள் தாங்கள் இறைவனை நோக்கிச் செல்வதன்றித் தம்மைப் பின் தொடரும் பல பேர்களையும், நீராவி இயந்திரம் வண்டித் தொடரை இழுத்துச் செல்வது போல், அழைத்துச் செல்கிறார்கள் என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறியது, தேவியாரிடமும் தெளிவாகக் காணப்படுகின்றது. ஆன்ம வாழ்க்கையால் உண்டாகும் சக்தி அளவு கடந்தது. இராமகிருஷ்ணரும் சாரதா தேவியும் கண்ணால் காணாத இடங்களிலும், கனவிலும் கருதாத இடங்களிலும் இன்று கல்வி நிலையங்களும், சேவா கிராமங்களும், ஆஸ்பத்திரிகளும், மடாலயங்களும் அவர்களின் அடியார்கள் அவர்கள் பெயரால் நடத்துவதை நாம் காண்கிறோம். அவைகளுக் கெல்லாம் ஆதாரம் அவ்விருவரின் தவப் பயனே.

உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

என்று திருவள்ளுவர் கூறியது இவர்களிடம் முற்றும் உண்மையாயிற்று.

கல்கத்தாவுக்கு அறுபது மைல் மேற்கில் உள்ள ஜயராம்பாடி என்னும் கிராமத்தில் ஸ்ரீ சாரதா தேவி 1853-ம் வருடம் பிறந்தார்.

ஆறு வயதில் இவருக்கு இராம கிருஷ்ணருடன் விவாகமாயிற்று. விவாகமான எட்டாண்டுகளுக்குப் பின், இவர்கள் கமார்ப்புக்கூரில் மறுமுறை சந்தித்தனர். அது வரை தட்சிணேசுவரத்தில் கடுந் தவம் புரிந்து, அதனால் உடல் நலம் குன்றித் தாயார் வற்புறுத்தலின் பேரில் இராமகிருஷ்ணர் பிறந்தவூருக்கு வந்திருந்த சமயம். சாரதா வயதில் சிறியவராயினும், விசாலமான மனப்பான்மை இயற்கையாகவே உடையவராயிருந்தார். தம் கணவர் சாதாரண மனிதரன்று என்பதைக் கண்டு கொண்டார். அவரைச் சந்தித்த மாத்திரத்தில் அவரிடமிருந்து ஒரு தெய்வீக சக்தி தன்னிடம் பாய்ந்து தன்னைப் பரிபூர்ணமாக்கியதென்று சாரதாதேவி கூறியுள்ளார்.


இதற்குப் பின், மீண்டும் இராமகிருஷ்ணர் உலகை முற்றும் மறந்து தவநிலையில் தட்சிணேசுவரத்தில் நிலைத்து விட்டதால் சாரதா தேவியாருக்கு அவருடன் பழகும் வாய்ப்பே வெகு நாள் வரை கிட்டவில்லை. இராமகிருஷ்ணருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று பலர் கூறியது சாரதா தேவியின் செவிக்கும் எட்டியது. எப்படியிருப்பினும் குலமகட்குக் கொழுநனே தெய்வம் என்று அவர் திருவடி நிழலில் போய்த் தங்கிவிட வேண்டும் என்ற ஆசையின் மிகுதியால், தந்தையைத் துணை கொண்டு சாரதா தேவி தமது பத்தொன்பதாவது வயதில் தட்சிணேசுவரம் காளி கோயிலுக்கு வந்து சேர்ந்தார். இராமகிருஷ்ணரை உலக வாழ்க்கைக்கு இழுக்காமல், தாம் அவருடைய சிஷ்யையாக வாழ வேண்டும் என்ற தீர்மானத்துடனேயே வந்து அவ்வாறே நடந்து கொண்டார். அந் நாட்களைப் பற்றி இராமகிருஷ்ணர் "சாரதாதேவிக்கு அவ்வளவு தூய எண்ணம் இல்லாதிருப்பின், நான் நிலைதவறாது நின்றிருக்க முடியுமா என்று என்னைப் பற்றியே நான் சந்தேகித்ததுண்டு. 'தாயே! என் மனைவியின் மனத்தில் காம வாசனை யிருப்பின் அதை அறவே அகற்றிவிடு' என்று நான் பிரார்த்திப்பேன். அன்னை அப் பிரார்த்தனையைப் பூர்த்தி செய்வித்தாள் என்பதைப் பின்னர் கண்டு கொண்டேன்" என்று கூறியிருக்கிறார்.

1873-வது ஆண்டில் காளி பூஜையின் போது இராம கிருஷ்ணர் மனைவியையே நடமாடும் தெய்வமாகக் கொண்டு பரதேவதையின் பீடத்தில் எழுந்தருளச் செய்து ஷோடசி பூஜைசெய்து, பின் வருமாறு பிரார்த்தித்தார். "அன்னை பராசக்தியே! கன்னியென மறை பேசும் ஆனந்த ஸ்வரூபிணியே! பரிசுத்தமான இப் பெண்ணின் உடலில் நீ நித்தியவாசம் செய்து அதன் மூலம் அழியாத நன்மையை அனைவர்க்கும் அருள்வாய்." இராமகிருஷ்ணர் பல ஆண்டுகள் தாம் செய்த தவத்தின் பயனை அவர் பாதங்களில் அன்று சமர்ப்பணம் செய்து வணங்கினர். அன்று முதல் சாரதா தேவியார் தமக்கெனத் தனி வாழ்க்கை யில்லாதவராய், உலகை உய்விக்க வந்த அன்னையாகவே ஆகி விட்டார். இராமகிருஷ்ணர் சித்தி பெற்றிருந்த மந்திரங்களையெல்லாம் அவருக் குணர்த்தி உரியவர்க்கு உரிய காலத்தில் உபதேசிக்கும்படி உத்தரவிட்டார்.

அதனால் பேச்செல்லாம் ஆண்டவனுடைய துதியாகவும், செயலெல்லாம் பூஜையாகவும் நிகழ்ந்தது. உலகெல்லாம் அவருக்கு ஒரே குடும்பமாயிற்று. பழமைக்கும் புதுமைக்கும், மானிடத்துக்கும் தெய்வீகத்துக்கும் போட்ட ஒரு பாலம் போன்றிருந்தது அவர் தவ வாழ்க்கை.

விவேகானந்தருடைய சிஷ்யையான ஆங்கில மாது சகோதரி நிவேதிதையம்மையார் கூறுகின்றார்: "அன்னையே! நீர் இராமகிருஷ்ணரின் அன்பை ஏந்தி எங்களுக்குக் கொண்டு வந்து ஊட்டும் தெய்வீகக் கிண்ணம். அவர் உலகை உய்விக்க வைத்துச் சென்ற அன்பின் அறிகுறி. பகலவனது ஒளியும், மலரின் மணமும், கங்கையின் புனிதமும் போல் சந்தடியின்றி எங்கள் மனத்தைக் கொள்ளை கொள்ளுகிறது உமது வாழ்க்கை."


குருதேவருக்குப் பின் முப்பத்திநான்கு வருடங்கள் சாரதா தேவியார் இராமகிருஷ்ணரின் திருவடியார் கூட்டத்துக்கு வழி காட்டும் விளக்காக இவ்வுலகில் வாழ்ந்தார். பெற்ற தாயினும் மிக்க பரிவுடன் தான் பெற்ற ஞானப் புதல்வர்களை வளர்த்து உலகை உய்விக்க அளித்தார். இவ்வுலகின் கலி தீர்க்க வந்த அவதார புருஷரான இராமகிருஷ்ணர் தேர்ந்தெடுத்த துணைவியாகவும் முதல் சிஷ்யையாகவும், பணிப்பெண்ணாகவும், பரதேவதையாகவும் அவருக்குப் பின் அவர் பீடத்தில் குருவாகவும் விளங்கிய அன்னை சாரதா தேவியை மனத்தினால் சிந்தித்தால், "போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்."


பாரதத்தாய் தந்த
சாரதத்தாய்!



வெயிலை எதிர்பார்த்திருக்க வேண்டியதில்லை

துரிதமான f/6.3 லென்ஸ் இருப்பதால் எச்சமயத்திலும், எக்காலமும், வெளியில் ஸ்னாப்புகள் எடுக்க முடிகிறது. உங்கள் படவிஷயம் ஜன்னலருகில் இருந்தால், வீட்டிற்குள்ளிருந்தும் ஸ்னாப்புகள் எடுக்க இயலும்.




படங்கள் இரவிலும் கூட

இரவான பிறகு, அல்லது ஒளி மிகக்குறைவான அறைக்குள் படம் பிடிப்பதற்கு ஒரு 'கோடக்' ப்ளாஷ் ஹோல்டரை பொருத்திக்கொள்ளுங்கள். அவுட்-டோர் ஸ்னாப்புகள் போலவே, மிக எளிதில் ப்ளாஷ் ஸ்னாப்ஸ் எடுக்கமுடியும். அத்துடன், சிறந்த படங்கள் கிடைக்குமென்பதில் இன்னும் அதிக உறுதிகொள்ளலாம்!

ஒரு இணையற்ற காமரா-உங்களால் கொடுக்க இயலும் விலைக்கு!

அதை வைத்திருப்பதால் கிடைக்கும் முழுப் பெருமையும் உங்களுடையதே!

ஸிக்ஸ்-20 போல்டிங் 'ப்ரௌனீ' காமரா





இரண்டு 'ஸ்னாப் ஷாட் ஸ்பீட்'கள்


விருப்பத்துக்குத் தகுந்த ஷட்டர் ஸ்பீடுகள் உங்களுக்கு அதிக சௌகரியமளிக்கிறது. 1/25 செகண்டு அதிகமான படங்களுக்கும் போதுமானது. அசையும் பொருள்களை படம் பிடிப்பதற்கு 1/50 செகண்டு வேண்டும். எளிதில், தந்திரத்துடன், துரிதமான செயல் காட்சிகளை படம் பிடிக்கலாம். ப்ரீப் டைம் எக்ஸ்போஷர்களும் கூட.



f/6.3 லென்ஸ். விருப்பத்துக்கு தகுந்த ஷட்டர் ஸ்பீடுகள் இவைகளுடன்.

பெரிதான படங்கள்

எட்டு ஸ்னாப்ஸ், ஒரே ரோல் பிலிமிலிருந்து உங்களுக்கு பிடித்தமான 2¼ × 3¼ அங்குலம் ஸைஸில் கிடைக்கும். உங்கள் ஆல்பத்திற்கு மிகமிக சிறந்தது!



இணையற்ற சித்திரங்கள்

எல்லோரும் மெச்சும்படியான, உண்மைத் தோற்றமளிக்கக்கூடிய சித்திரங்கள், திறமையாக, நுட்பமான போகஸிங்குடன் 4 அடியிலிருந்து எந்த மேலான தூரத்திலிருந்தும் உங்கள் நண்பர்களுடையவும் உங்கள் குடும்பத்தினருடையவும் சித்திரங்கள் எடுங்கள்.



ஸிக்ஸ் - 20 போல்டிங் 'ப்ரௌனீ' காமரா (மெனிஸ்கஸ் லென்ஸ் மாடல்) தூக்கிக்கொண்டு போவதற்கு வசதியான போல்டிங் வகைத, பாக்ஸ் காமரா. போகஸிங் வேண்டியதில்லை. எதையும் ஒழுங்கு படுத்திக் கொள்ளவேண்டிய அவசியமுமில்லை. காமராவைத் திறந்து உங்கள் விருப்பம்போல் படங்கள் பிடித்துக்கொள்ளலாம ஒரே ரோல் பிலிமுக்கு எட்டு ஸ்னாப்ஸ். ரூ. 68/-

லெதர் கேஸ் ரூ. 8/12/-

இன்னும் ஏராளமானவை! யாருக்கும் இயன்ற விலைகளில், ஏராள மாடல்களில், 'கோடக்' காமராக்கள் இருக்கின்றன. ரூ. 17/8/- லிருந்து மேல். உங்கள் கோடக் வியாபாரியிடம் சென்று காண்பிக்கச் சொல்லுங்கள்.

மேன்மையான பொருள்	ரூ. 105/-க்கு
'கோடக்'டைப் FB ப்ளாஷ் ஹோல்டர்	ரூ. 22/12/-
லெதர் கேஸ்	ரூ. 8/12/-

மேல்கொடுத்திருக்கும் விலைகளில் விற்பனை வரி சேராது.

கோடக் லிமிடெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

பம்பாய் – கல்கத்தா – டில்லி – மதராஸ்

K. 9012

★ அமெரிக்காவில் உள்ள ராமகிருஷ்ண சங்கத்தைச் சேர்ந்தவர் ஸ்ரீமதி உர்சுலா பாண்ட். அமெரிக்க நாட்டில் உள்ள ஹாலிவுட் அவர் சொந்த ஊர். 'கல்கி' சாரதாமணி மலருக்காக அவர் எழுதியனுப்பிய விசேஷ கட்டுரை.

நான் அறிந்த அன்னை

ஸ்ரீமதி உர்சுலா பாண்ட்

அன்னை ஸ்ரீ சாரதாமணி தேவியாரைப் பற்றி உணர்வதை எடுத்துக் கூறுவது மிகவும் கடினமானது என்பதை நான் ஆரம்பத்திலேயே ஒப்புக் கொள்ளுகிறேன். அவரை நான் படங்கள் மூலமே பார்த்திருக்கிறேன். அவர் வாழ்வு பற்றியும் உபதேசங்கள் பற்றியும் நான் அறிந்தவையெல்லாம் புத்தகங்கள் மூலமாகத்தான். அவர் பாதங்களை வணங்கும் பாக்கியம் பெற்றோர் வாய் மூலமாகத்தான் அடைந்தேன். அவரைப் பற்றி நான் உணர்வதையெல்லாம் கூறும் ஆற்றல் பெற்றாலும் நான் கூறுவது காலத்தினாலும் சூழ்நிலையாலும் கட்டுப்பட்டவையேயாகும்.

அன்னையின் வாழ்வில் ஒன்றோடொன்று மாறுபட்ட தன்மைகள் அநுபவமாகவும் கற்பனையையும் மயக்கும் இலட்சியமாகவும் கூடிக் கலப்பதால் அவர் என்னைக் கவர்கின்றார்.

மேலோட்டமாகப் பார்க்கும் போது, அவர் வாழ்வு எவ்விதமான சம்பவங்களுமின்றி அமைதியாக ஒதுங்கியுள்ள நாட்டுப்புறப் பெண்ணின் வாழ்க்கையாகவே தோன்றும். தக்ஷிணேஸ்வரத்தில் தங்கியிருந்த காலத்தில் பல ஆண்டுகள், காலை மூன்று மணிக்கு எழுந்து கங்கையில் குளிப்பதும், பல மணி நேரம் பூஜையிலும் தியானத்திலும் ஆழ்ந்திருப்பதும் மிகுந்த நேரத்தில் தமது தெய்விகக் கணவரான ஸ்ரீ ராமகிருஷ்ணர், அவருடைய சீடர்கள், பக்தர்கள் ஆகியோருக்குச் சேவை செய்வதும் ஆகிய செயல் முறையில் ஈடுபட்டிருந்தார். கணவரை இழந்த பின் ஓராண்டு காலம் உப்புக்கூட இல்லாமல் உண்ணும் அளவுக்கு வறுமை அவரைப் பற்றிக் கொண்டது. பிற்காலத்தில் தம் சொந்தக் கிராமமான ஜயராம் பாடியிலும், கல்கத்தாவிலும் மாறி மாறி வசிக்கத் தலைப்பட்டார். தன்னை நாடி வருவோருக்கு ஆத்மீக வழி காட்டுவதிலும் பூஜையிலும் தியானத்தில் தம் காலத்தைக் கடத்தினார். ஜயராம் பாடியில் தங்கும் காலத்தில் எல்லாம் நெல் குத்துவது முதல் சமைப்பது வரை எல்லாக் குடும்பப் பொறுப்பையும் தாமே ஏற்றுக் கொள்வார். உறவினர்களுக்குப் பொருளுதவியும் செய்வார். மன நிலை கெட்டிருந்த அவர் அண்ணியாரும் மருமகளான ராதுவும் அன்னையையே முழுதும் நம்பி வாழ்ந்தனர். சாதாரணமாகப் பார்க்கும் போது வாழ்வின் சோதனைகளைப் பொறுமையுடன் தாங்கி நல்வாழ்வு வாழ்ந்த பெண்ணாகவே ஸ்ரீ சாரதா மணி தேவியார் நமக்குத் தோன்றுவார். ஆயினும் உலக குருவான சுவாமி விவேகானந்தர் அவரைப் பற்றிக் கூறியுள்ளதைப் பாருங்கள்.

சாதாரண மனிதரைப் போலவே வாழ்ந்த அன்னையார் இடைவிடாது ஆத்மீக ஈடுபாட்டில் மனம் மூழ்கிக் கிடந்தார் என்று அவர் குறிப்பிடுகிறார். அன்னையின் மகிமை அளவிடற்கரியது. அதைப் பூரணமாக அறிய முயல்வது கடல் ஆழத்தை அளப்பது போலாகும்.

ஸ்ரீ சாரதாமணி தேவியாரை இல்லற துறவற வாழ்வின் இலட்சியங்களின் உருவமென்றே பல மக்கள் கருதுகின்றனர். தம் கணவரிடம் கொண்ட பக்தியையும் அவருக்குச் செய்த தன்னலமற்ற சேவையையும் கருதினால் அவர் இலட்சிய வாழ்க்கைத் துணைநலமாக விளங்குகிறார். அவருடைய பற்றற்ற நிலையையும் பரிசுத்தத் தன்மையையும் கருதினால் சிறந்த சந்நியாசினி. நவயுகத்தின் அவதார புருஷராகக் கருதப்பட்ட ஒரு மகானை மணந்தவராக இருப்பினும் அவர் அடக்கத்தின் உருவமாகவே இருந்தார். அவர் செய்த செயல் யாவும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பொருட்டே. தம்மை அவருடைய கருவியாகவே கருதினார். அவர் பெற்ற குழந்தைகள் இல்லையென்றாலும் அவரைக் கண்டவர்கள் எல்லாரும் தங்கள் தாயின் அம்சம் அவரிடம் இருக்கக் கண்டனர். சிறந்த தாயிடம் காணப்படும் மென்மையும் அன்பும் கொண்டு அன்னை சாரதாமணி யாவரையும் எளிதாகவும் இயற்கையாகவும் நடத்தினார்.



ஆன்ம அறிவு பெறவும் உபதேசம் கொள்ளவும் உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் மக்கள் அன்னையை நாடி வந்தனர். மகா ஞானியாகிய சுவாமி பிரேமானந்தர், "நாங்கள் ஜீரணிக்க முடியாத ஆல கால விஷங்களை அன்னைக்கு அனுப்புகிறோம்; எல்லோருடைய பாவங்களையும் அவர் ஏற்றுக் கொண்டு யாவருக்கும் அடைக்கலம் தருகிறார்" என்று ஒரு சமயம் குறிப்பிட்டார். தம் சீடர்கள் பொருட்டு அவர் மிக வருந்தினார். "மற்றவர்களுடைய பாவங்களையும் துன்பங்களையும் நாம் ஏற்காவிட்டால் பின் வேறு யார் தான் ஏற்பார்கள்!" என்று அன்னை ஒரு சமயம் கூறினார். உடல் நிலை குன்றிய போதிலும் பெரும் பொழுதை ஜபத்திலேயே செலவிடுவார்.

விஞ்ஞானமும் நாமும்

ஒளியின் வேகம், ஒலியின் வேகம், ஒலித் தெளிவு, எரிமலைகள், வைரங்கள், தாவர செல், உடம்பும் உஷ்ணமும், தற்செயலாகக் கண்டு பிடிக்கப்பட்டவைகள்—முதலிய தலைப்புகளில் விஞ்ஞான சம்பந்தமான பல விஷயங்களைத் தெள்ளிய நடையில் கூறியிருக்கிறார் ஆசிரியர்.

எழுதியவர் : கு. ராஜாராம் பி. எஸ்ஸி., பி. எல்.; கிடைக்குமிடம் : ஸ்டார் பிரசுரம், திருவல்லிக்கேணி, சென்னை-5 ; விலை : ரூ. 1—4—0.

சாதனை செய்ய வேண்டிய அவசியம் அவருக் கேது என்று கேட்ட போது தம்மை அடைந் தோருக்காகச் சாதனை செய்வதாகக் கூறினார்.

அவருடைய எல்லையற்ற அன்பே அவருடைய மேன்மைக்கு அறிகுறி. பாவி, புண்ணியவான் என்ற பேதம் அவ்வன்புக்கு இல்லை.

அன்னையிடம் காணப்பட்ட மற்றொரு தன்மை அது. மேனாட்டில் பிறந்தவர்களுக்கு முக்கிய மானது—சுவாமி விவேகானந்தரின் மேனாட்டுச் சீடர்களை அன்னை மனதார வரவேற்றது ஆகும். சகோதரி நிவேதிதாவை அன்னை தம் அறையிலே தங்கச் செய்தார். அவர்கள் உண்ணுங்கால் அவருடனிருந்து தட்டிலிருந்து அன்னையும் உண்டார். இவ்வாறு செய்தது ஸ்ரீ ராமகிருஷ்ணரது சீடர்களில் சிலரைத் திடுக்கிட வைத்தது. அவர்கள் யாவருமே அன்னைக்குச் சொந்த மகளிரே.

அன்னையின் உபதேசங்கள் எளிமை வாய்ந்தவை; ஆற்றல் நிரம்பியவை. துறவும் பற்றற்ற நிலையுமே ஆத்மீக வாழ்வின் சாரம் என்று கூறினார். பரிசுத்த பக்தியும் தெய்விக ஞானமும் பெற ஜபமும் தியானமுமே சிறந்த மார்க்கம் என அன்னை வற்புறுத்திக் கூறினார். அவ்வாறான ஒழுக்கத்தாலும், தன்னலமற்ற சேவையாலும், ஆத்ம சமர்ப்பணத்தாலும் எல்லாப் பந்தங்களும் அறும், ஆண்டவன் அருள் வெளிப்படும் என்று அவர் அடிக்கடி கூறிவந்தார்.

ஆத்மீக உலகில் ஸ்ரீ சாரதாமணி தேவியாரின் ஸ்தானத்தை யாரே எடுத்துக் கூற முடியும்! அவரை இலட்சியத்தாயாகவோ, மனைவியாகவோ, குருவாகவோ, மகாத்மாவாகவோ கூறுவது அவரைக் குறைவாக மதிப்பிடுவது ஆகும். ஆத்மீகத் துறையில் மகான்களாக விளங்குவோர் காட்டும் பெருமதிப்பால் அன்னையின் பெருமையை நாம் குறிப்பாக உள்ளத்தில் உணரலாம்.


தம் இஷ்ட இலட்சிய தெய்வ மாதாவாக ஸ்ரீ ராமகிருஷ்ணரே அவரை வணங்கினார். அவருடைய முக்கிய சீடர்கள் எல்லாம், அன்னையைக் குருபத்தினி என்று மாத்திரம் கருதாமல் அன்னையின் அவதாரமாகவே எண்ணிப் போற்றினர். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஆத்மீக புத்திரரும் ஸ்ரீ ராமகிருஷ்ண சங்க முதல் தலைவருமான சுவாமி பிரம்மானந்தர் அன்னையை நெருங்கும் போதெல்லாம் உணர்ச்சிப் பெருக்காக மாறிவிடுவார். முக்த ஜீவரான சுவாமி விவேகானந்தரோ அன்னையின் சந்நிதியை அடைவதற்கு முன் கங்கையில் பன்முறை மூழ்குவாராம்.

ஆனால் அன்னையோ தம் கிராமத்தில் காய்கறி நறுக்குங்கால் எந்த மன நிலையில் இருப்பாரோ அதே நிலையில்தான் பூவாலும் சந்தனக் குழம்பாலும் பூஜிக்கப்பட்டபோதும் இருந்தார். தெய்வத் தன்மையை நிரூபிக்க முடியுமாயின் இம் மனநிலை ஒன்றே அவருடைய தெய்வத் தன்மையை நிரூபிக்கப் போதுமானது.

ஞானநிறைந்த புனித அன்னையைப் பற்றிப் பூரணமாகக் கூற முடியவில்லை என்று உணர்ந்தே இம் மொழிகளை எழுதுகிறேன். "அன்னை தம்மை வெளிப்படுத்தா விட்டால் யார்தான் அவரை அறிய முடியும்" என்று சுவாமி பிரம்மானந்தர் கூறுவது வழக்கம். அமைதியையும் ஆறுதலையும் தேடி நான் அன்னையை நாடுகிறேன் என்பதை நன்கு உணர்கின்றேன். அவர் அருளே அவ்வாறு நாடத் துணையாகிறது என்றும் நம்புகிறேன்.

ஒரு சமயம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கணக்கற்ற மக்கள் ஸ்ரீ சாரதாமணி தேவியாரை அம்மா என அழைப்பார்கள் என்று கூறினார். அன்னை மண்ணில் வாழ்ந்த நாளிலேயே அவ்வாக்குப் பலித்து விட்டது. ஒரு சமயம் அன்னை, மேனாட்டு மக்கள் பலர் தம் படத்தை அன்போடு தாங்கி ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸரின் அருகில் வைத்தது போன்ற காட்சியைக் கண்டாராம்.

ஹாலிவுட்டிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கக் கோவிலில் அன்னையைப் பூக்கொண்டும் நறும் புகை எடுத்தும் வணங்குகின்றோம். அவரை அன்னை என்று அழைக்கும் குழந்தைகள் கூட்டமும் நாள்தோறும் பெருகி வருகின்றது.



சென்னை ராஜ்யத்துக்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: ஸ்ரீ சி. ரெங்கராஜு நாயுடு
9/1, இராஸ்கட் ரோடு, கோயமுத்தூர்

காங்கிரஸ் பொருட்காட்சி

ஆவடி காங்கிரஸ்

வரவேற்புக் கமிட்டியால் நடத்தப்படுவது

★

முப்பது ஏக்கர் விஸ்தீர்ணம் உள்ள நிலப்பரப்பில் நடைபெறும் இந்த தேசியக் கண் காட்சி,

தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில்

1955 ஜனவரி மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகிறது

இதற்கு முந்திய வருஷங்களில் இருந்ததைக் காட்டிலும் இவ் வருஷம் இந்தக் கண் காட்சி மூன்று மடங்கு பெரிதாக இருப்பதுடன், சுதந்திரம் பெற்ற பின் பாரதநாடு அடைந்துள்ள மகத்தான முன்னேற்றத்தை கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டுவதாக இருக்கும்.

இந்தக் காட்சியில் இந்திய யூனியன் சர்க்கார், பல ராஜ்ய சர்க்கார்கள், பாரதநாடெங்குமுள்ள முக்கியமான கைத்தொழில், வர்த்தக ஸ்தாபனங்கள் முதலியவை கலந்து கொள்ளுகின்றன.

தேசியப் புனருத்தாரணத்திற்கான சர்வோதயத் திட்டம் இந்தக் காட்சியிலேயே மிகவும் முக்கிய அம்சமாக விளங்கும்.

உற்சாகமான பொழுது போக்காக இருப்பதுடன், அறிவு புகட்டக்கூடிய முறையிலும் அமைக்கப்படும் இந்தக் காட்சி புது வருஷத்தின் மகோன்னதக் காட்சியாகத் திகழும் என்பதில் சந்தேகமில்லை.

★

கண்காட்சியில் ஸ்டால்களுக்கும் மற்ற விவரங்களுக்கும் 1954 டிசம்பர் 18-ந் தேதிக்குமுன் கீழ்க்கண்ட விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும் :

கன்வீனர் :

காங்கிரஸ் எக்ஸிபிஷன்

போன் : 86294 | **மதராஸ் - 6** | தந்தி : "எக்ஸிபிஷன"

ரிஷி பத்தினி

எம். எல். சபரிராஜன்



அன்னை சாரதாமணி பிறந்த ஊராகிய ஜயராம்பாடியில் அன்னையின் ஆலயம்

சதி கஸ்தூரி பா, கொந்தளிப்பும் குழப்பமும் சண்டமாருதமும் நிறைந்த அரசியல் உலகிலே தம் கணவரைப் பின்பற்றிச் சென்று, பற்பல கஷ்டங்களை அனுபவித்தார். மற்றொருவரோ, சாந்திமயமான ஆண்டவனின் சந்நிதானத்திலே, கணவரருகே இருந்து தவமியற்றி அழியாப் புகழ்பெற்றார்.—ஆனால், மறைமுகமாக அன்னை ஸ்ரீ சாரதாமணி தேவியார் செய்த தியாகம் இருக்கிறதே, அதைப் பற்றி என்னவென்று சொல்வது!

உத்தமப் பெண்ணுக்கு மனு கூறும் இலக்கணமாவது: "அவளுக்கு மாதா, பிதா, குரு, தெய்வம்-அனைவரும் அவள் கணவனே யாவான். நீங்காத நிழல் போல அவனைப் பின் தொடர்ந்து செல்ல வேண்டும். அவன் செய்யும் எல்லாக் கர்மங்களிலும் அவனுடன் ஒத்துழைக்க வேண்டும்."

இதன்படி பார்க்கப் போனால், எத்தனையோ மாதரசிகள் பெயர் நம் நினைவுக்கு வரும். — சீதை, நளாயினி, வாசுகி, அநஸூயை போன்றோர் பலர் இருந்திருக்கிறார்கள்; — எல்லாம் பண்டைக் காலத்திலே! ஆனால், இந்தக் காலத்திலோ, — கணவன் குறட்டை விட்டுத் தூங்குகிறான் என்பதற்காக அவனுடன் விவாக ரத்துக் கோரி நிற்கும் மேல் நாட்டு நாகரிகம் பரவத் தொடங்கிய பிறகு, — அத்தகைய லட்சியப் பெண்மணிகளை நம் நாட்டில் காண்பது அரிதாகி விட்டது. ஆயினும், நம் பாக்கிய வசத்தால் இருவர் இந் நாட்டில் தோன்றக் கொடுத்து வைத்தோம். அவர்களில் ஒருவர் அன்னை கஸ்தூரி பா; மற்றொருவர் அன்னை சாரதாமணி தேவியார்.

இவர்கள் எந்தக் கல்லூரியிலும் படிக்கவில்லை; ஒரு சட்ட சபைத் தேர்தலுக்குக்கூட நிற்கவில்லை; சமூக சேவா சங்கங்களில் தலைவியாகவோ, காரியதரிசியாகவோ இருந்து, ரோஜாப் பூ மாலை வாங்கிப் போட்டுப் பெரும் புகழும் அடையவில்லை. பின் எப்படிப் பெருமை யடைந்தார்கள்?—கண்ணை மூடிக் கொண்டு கணவனைப் பின்பற்றினார்கள்; பர்த்தாவுக் கேற்ற பதிவிரதைகளாக விளங்கினார்கள், — அவ்வளவு தான். இப்படி நடந்து கொண்டதன் மூலம், தங்களுக்குப் பெருமை தேடிக் கொண்டதுமல்லாமல், நம் நாட்டுக்கும் பெருமை தேடிக் கொடுத்திருக்கிறார்கள்.

பால் மணம் மாறாப் பருவத்திலே, — ஆறு வயதிலே, சிறுமி சாரதைக்குத் திருமணம் நடந்தது. பிறந்தகத்திலேயே இருந்தார். கணவரோ, தொலை தூரத்துக்கு அப்பாலிருந்த தக்ஷிணேசுவரத்தில், ஒரு காளி கோவிலில் அர்ச்சகராக இருந்து வந்தார்.

வருடங்கள் ஒன்றன்பின்னொன்றாய் ஓடி மறைந்தன. இப்போது சாரதா பதினெட்டு வயது யுவதியாகி விட்டார். ஊர் முழுவதும் ஒரு செய்தி பரவியது. ஒரு தோழி சாரதாவிடம் சென்று, "என்ன! உன் புருஷன் பைத்தியமாகி விட்டானாமே! வேட்டிகூடக் கட்டிக் கொள்ளாமல் புலம்பிக் கொண்டு திரிகிறானாமே!" என்றாள். திடுக்கிட்டார் சாரதாமணி. கணவரைக் காண்பதற்காகப் புறப்பட்டார். பல மைல் தூரம் கால்நடையாக நடந்து தக்ஷிணேசுவரத்துக்குப் போனார். மனைவியைக் கண்டார், இராமகிருஷ்ணர். "ஆ, வந்து விட்டாயா, **தாயே!**" என்றார். நொடிப் பொழுதில், எல்லாம் விளங்கி விட்டது சாரதாவுக்கு. — ஆம், தம் கணவருக்குப் பைத்தியமே பிடித்து விட்டது. சந்தேகமே இல்லை. ஆனால், அது வேறு விதமான பைத்தியம்; தெய்வப் பைத்தியம். எதை அடைந்து விட்டால், அப்புறம் வேறு எதையுமே அடைய வேண்டியதில்லையோ, அத்தகைய பொருள்-பரம் பொருள்-சச்சிதானந்தமாக எங்கும் நிறைந்திருக்கும் நித்திய வஸ்து மீது அவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது!

மங்கை சாரதையின் இளமை உள்ளத்திலே சாந்தி கலந்த ஓர் இன்பம் நிலவியது.

அன்றே. அப்பொழுதே. கணவன்-மனைவி என்ற தேகதத்துவ உறவு அகன்றது. இராமகிருஷ்ணர் குருவாகவும், யுவதி சாரதை உத்தம சிடராகவும் ஆகி விட்டார்கள்.

இது எளிதல்ல: எல்லோரும் செய்யக் கூடியதுமல்ல. சற்று நினைத்துப் பார்ப்போம். ஓர் இளம் பெண்; கணவனுடன் வாழ்க்கை நடத்தப் போகும் ஒரு பருவ மங்கை-அவளுடைய மனத்திலே என்னென்ன ஆசைகள் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தனவோ; எத்தனை எத்தனை இன்ப நினைவுகள் அலை மோதிக் கொண்டிருந்தனவோ; எப்படி எப்படியெல்லாம் இன்பத்தை நுகரலாமென்று எண்ணிக் கொண்டிருந்தாளோ?—

அத்தனையையும் இப்போது கணவனுக்காகத் தியாகம் செய்ய வேண்டியதாயிற்று. எதற்கு? கணவன் செல்லும் சத்திய மார்க்கத்துக்கு உதவியாயிருப்பதற்காக! இந்த இடத்திலே, அவர் சிறப்பு இராம கிருஷ்ணரைக் காட்டிலுங் கூட ஒருபடி மேலே போய்விட்டதோ என்று நினைக்கவே தோன்றுகிறது.

உலகில் தோன்றிய பல மகான்களுக்கு இத்தகைய பேறு-அதாவது, மனைவியின் ஒத்துழைப்பு-கிடைக்கவில்லை. இதனால் அவர்கள் ரொம்பக் கஷ்டப்பட வேண்டியதாக ஆயிற்று. உதாரணமாக ஞானி டால்ஸ்டாயைக் கூறலாம். பெரும் பிரபுவாக விளங்கி, சுகபோகத்தில் ஆழ்ந்திருந்த அவர், பிற்காலத்தில் ரொம்பவும் மாறி விட்டார். செல்வத்தையும் ஆடம்பரத்தையும் வெறுத்தார். ஆகையால், எளிய வாழ்க்கை வாழ விரும்பினார். இதற்கு அவர் மனைவி இடங் கொடுக்கவில்லை. கணவனுக்கும் மனைவிக்கும் சதாசச்சரவு ஏற்பட்டுக் கொண்டே வந்தது. நாளாக ஆக, டால்ஸ்டாயின் வாழ்வு மிகத் துன்பம் உள்ளதாக ஆகி விட்டது. கடைசியில், அவர் தம் மனைவியின் இம்சையைத் தாங்க முடியாமல், எண்பத்திரண்டாம் வயதில் வீட்டை விட்டே ஓடிப் போய், எங்கோ ஒரு ரயில்வே ஸ்டேஷனில் அனாதை போலச் செத்தார். ரொம்பப் பரிதாபம்!



ஆனால் இராம கிருஷ்ணருக்கு அத்தகைய கஷ்டம் எதுவும் வைக்கவில்லை அன்னை சாரதா; அவர் தம் கணவருடன், அவருடைய ஆன்மீகத் துறையில் பூரணமாக ஒத்துழைத்தார். அவருக்குப் பதில் வேறொரு பெண் இராம கிருஷ்ணருக்கு மனைவியாக வாய்த்திருந்தால், இராமகிருஷ்ணர் வெறும் கதாதரராகவே இருந்திருப்பார்; அவர் பரமஹம்ஸராக ஆகியிருக்க முடியாது.

இதை இராமகிருஷ்ணரே ஒப்புக் கொள்கிறார். அவர் கூறுவதாவது;

"அவள் பரிசுத்தமே வடிவெடுத்தவளாயிராமல் என்னை மோக வலையில் பிடித்து இழுத்திருந்தால், நான் எப்படித் தப்பிப் பிழைத்திருக்க முடியும்?"

மனைவியுடன் கூடி இல்வாழ்க்கை நடத்தாமல், அவரைச் சன்னியாசினியைப் போல வைத்திருந்தது பற்றி, சிலர் இராமகிருஷ்ணர் மீது குறை கூறினார்கள். இது அம் முனிவர் காதில் பட்டது. அவர் யோசித்தார். உடனே அவர் அன்னையை அழைத்துக் கூறியதாவது: "என் உள்ளத்தை நான் ஜகன்மாதாவுக்கு அர்ப்பணம் செய்து விட்டேன். ஆகையால் அது உடலின்பத்தை விரும்பவில்லை. ஆயினும், வேத விதிப்படி, நான் உன்னைக் கைப் பிடித்தேனாகையால், உன் இச்சாவுரிமையை நிறைவேற்றக் கடமைப் பட்டிருக்கிறேன். உன் கருத்தைக் கூறு" என்றாராம்.

அன்னை நினைத்திருந்தால், இராமகிருஷ்ணருடைய வாழ்க்கையின் போக்கையே மாற்றியிருக்கலாம். விஷயானுபவ சுகங்களுக்காக இவ்வுலகில். வாழ்ந்து மடிந்த கோடானுகோடி மக்களில் அவரையும் ஒருவராய்ச் செய்திருக்கலாம். ஆனால், அவர் அப்படிச் செய்வாரா?— அப்போது அந்த அம்மையார் கூறியதாவது:— "தங்களுக்குத் தொண்டு செய்து தங்கள் பேருளுக்கு உரியவளாக ஆவதற்காக இங்கு வந்தேனே தவிர, தங்களைப் பந்தத்தில் தள்ளுவதற்காக வரவில்லை"—


என்ன அற்புதமான திருவாக்கு! மைத்ரேயி போன்ற ரிஷி பத்தினிகளுடைய திருவாயிலிருந்துதான் இத்தகைய ஞானச் செல்வமான வார்த்தைகள்வரக்கூடும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஆண்டவனுக்குத் தம்மை அர்ப்பணம் செய்தார்; அன்னை சாரதா தேவியோ, தம் கணவருக்கே தம்மை அர்ப்பணம் செய்து விட்டார்.

பெண்ணுக்குக் கண்கண்ட தெய்வம் அவள் கரம் பற்றிய கணவன்தானே?

உத்தமப் பெண்மணிகளின் வரிசையிலே அன்னை சாரதாமணி தேவியாரின் பெயர் என்றும் அழியாப் புகழுடன் விளங்கும்.

இத்தகைய ஓர் உத்தம மங்கை நல்லாள் மீது இராமகிருஷ்ணருக்கு மேலான அபிப்பிராயம் ஏற்பட்டதில் வியப்பில்லை அல்லவா?


·SANFORIZED·
REGD TD MK
SHRUNK
'சான்பொரைஸ்ட்' துணியில்
தைக்கப்படும் உடைகள்
உடம்புக்குப்
பொருந்தாதபடி
சுருங்கவே செய்யாது
–எத்தனை முறை
சலவை செய்தாலும்
முக்கிய கவனிப்பு
உங்கள் தையல்காரரிடம் சொல்லுங்கள் :
"இது 'சான்பொரைஸ்ட்' துணி
–உடை தைப்பதற்குமுன்
நனைக்க வேண்டாம்"

சக்கரவர்த்தித் திருமகன்



41. பரதன் திரும்பினான்.

நான்கு அரச குமாரர்களும் மூன்று பட்டமகிஷிகளும் ஓர் இடத்தில் மறுபடியும் கூடிவிட்டார்கள் என்ற செய்தி அறிந்த உடனே தூரத்தில் மரியாதைக்காக நின்று கொண்டிருந்த படையினரும், ஜனங்களும் உடனே அந்தச் சந்தோஷக் காட்சியைப் பார்க்க ஓடி வந்துவிட்டார்கள். ஒரே மகிழ்ச்சி ஆரவாரம். இனி ராமன் அயோத்தியைக்குத் திரும்பி விடுவான் என்றே நிச்சயித்துக் கொண்டு குதூகலப்பட்டார்கள். ஒருவரை யொருவர் ஆலிங்கனம் செய்து கொண்டு மங்களம் கொண்டாடினார்கள்.

மகாராஜாவும் தந்தையுமான தசரதன் இவ்வுலகம் துறந்து விட்டானே என்று சீதையும் ராம—லக்ஷ்மணர்களும் துக்கக் கடலில் மூழ்கி யிருந்தார்கள். ஆனால் ஜனக்கூட்டத்தில் ராம தெரிசனத்தினால் பெருத்த மகிழ்ச்சி பொங்கிற்று.

* * *

வசிஷ்ட முனிவர் தேவிமார்களைப் பர்ணசாலைக்கு அழைத்துச் சென்றார். வழியில் மந்தாகினி நதியைப் பார்த்தார்கள். இந்தத் துறையில் இறங்கித்தான் ராஜகுமாரர்கள் தங்களுக்கு வேண்டிய தண்ணீர் எடுத்துப் போவார்கள் என்று ஒரு இடத்தைக் காட்டியதும் கௌசல்யா தேவியும் சுமித்திரையும் 'ஐயோ'வென்று அழுதார்கள்.

“சுமித்திரையே, என் மகனுக்காக இந்தத் துறையில் தினமும் உன் மகன் ஆற்றில் இறங்கிச் சுத்தமான ஜலம் ஆசிரமத்துக்கு எடுத்துப் போய் வைக்கிறான் பார்த்தாயா? அண்ணனுக்காக எந்த வேலையும் சந்தோஷமாகச் செய்வான் உன் மகன். குடத்தில் ஜலத்தை நிரப்பித் தோளின்மேல் வைத்து எடுத்துப் போவது அவனுக்குக் கஷ்டமாகத் தோன்றாது” என்றாள்.

ராஜாஜி

ஆற்றங்கரையில் ராமலக்ஷ்மணர்கள் தந்தைக்காக ஜலக்கிரியை செய்த இடத்தைப் பார்த்தார்கள். தர்ப்பைப் புல் நுனி தெற்கு நோக்கி வைத்திருப்பதைக் கண்டார்கள். பித்ருக்களுக்காக அங்கே எள்ளுப் பிண்ணாக்கு வைத்திருப்பதையும் கண்டார்கள்.

“மகாராஜாவின் பசி தீர்ப்பதற்காகப் பிண்ணாக்கு வைத்திருப்பதைப் பார்த்தாயா? ஆகா, இறந்த பின், உலகம் ஆண்ட ராஜாக்களின் போஜனம் இதுவே! என் இதயம் வெடிக்க வில்லையே!” என்று சுமித்திரையை அணைத்துக் கொண்டு அழுதாள் கௌசல்யா தேவி.

பர்ணசாலைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே முகத்தில் தெய்வீக ஒளி வீசும் ராஜகுமாரர்கள் ஓலைக் குடிசையில் உட்கார்ந்திருப்பதைக் கண்டார்கள். அந்தக் காட்சியைப் பார்த்து நிற்கச் சக்தி யிழந்து கீழே விழுந்தார்கள்.

இரு ராஜகுமாரர்களும் எழுந்து, தாய்மார்களைத் தூக்கி எடுத்தார்கள். தன்னுடைய தாமரைக் கைகளால் கோசலை ராமனைத் தடவிக் கொடுத்து, இது துக்கமோ, ஆனந்தமோ என்பதை அறியாமல் மயக்கத்தில் மூழ்கினாள். பிறகு சீதையைத் தழுவி, “மகளே, ஜனகனுக்கு மகளாய்ப் பிறந்து அயோத்தி மன்னனுக்கு மருமகளாக என் வீட்டில் புகுந்த நீ, இந்தக் காட்டில், இந்தக் குடிசையில் வசித்து வருகிறாயா? வாடிய தாமரை மலரே! தூசி படிந்த தங்க விக்கிரகமே! உன்னைப் பார்த்து நான் படும் துக்கத்தை எப்படிச் சொல்வேன்? நெருப்பில் எரியும் விறகுபோல் என் மனம் எரிகிறது, குழந்தாய்!” என்றாள்.


மண்ணின் மேல் நின்ற பிருகஸ்பதியைப் போல் விளங்கும் வசிஷ்டருடைய பாதங்களில் சக்கரவர்த்தித் திருமகன் விழுந்து வணங்கி, அவருக்கு அருகில் அன்புடன் உட்கார்ந்தான். பரதனும் அடக்கமே வடிவமெடுத்து வந்தது

போல் ராமசந்திரன் எதிரில் உட்கார்ந்தான். பல பெரியோர்களும் சுற்றி உட்கார்ந்தார்கள். ராமனுடைய மனம் மாறுமா, பரதன் என்ன பேசப் போகிறான் என்றெல்லாம் ஆவலோடு எதிர் பார்த்து உட்கார்ந்தார்கள்.

“பரதனே! எதற்காக இந்த உடை தரித்துக் கொண்டு வனத்துக்கு வந்தாய், சொல்! ராஜ்ய பரிபாலன காரியங்களை விட்டு விட்டு மான்தோலும் சடையுமாக ஏன் இங்கே வந்து சேர்ந்தாய்? இதை எனக்குச் சரியாகச் சொல், தம்பி!” என்றான்.

“அண்ணா!” என்று பரதன் பல தடவை சொல்ல ஆரம்பித்து, மேலே பேச்சு வராமல் திக்கித் திணறினான். பிறகு தைரியம் செய்து கொண்டு மெள்ளப் பேச ஆரம்பித்தான்:

“உன்னைக் காட்டுக்கு அனுப்பி விட்டு, ‘யாரும் செய்யத் துணியாத காரியத்தைச் செய்து விட்டேனே’ என்ற துக்கத்தில் வெந்து, மேலுலகம் போய் விட்டார் தந்தை. என்னைப் பெற்றவளும் தான் விரும்பிய சந்தோஷத்தைப் பெற முடியாமல், மகா பாவம் செய்தவளாகி, விதவையுமாகி, சோகத்தில் மூழ்கி நிற்கிறாள். உலகத்தால் பழிக்கப் பட்டு உயிருடன் நரக வேதனை யடைந்திருக்கிறாள். எங்களை நீ காப்பாற்ற வேண்டும். இன்றே நீ பட்டாபிஷேகத்துக்குச் சம்மதித்து, உனக்குரிய ராஜ்யத்தை அடைய வேண்டும். இதற்காகவே ராஜ்யத்துப் பொதுமக்களும், சேனையும், சுவர்க்கம் எய்திய அரசனுடைய தேவிமார்களும் எல்லோரும் இங்கே வந்து காத்திருக்கிறார்கள். நீ இதை அருள வேண்டும்—மறுக்கக் கூடாது. இதுவே அனைவருடைய துக்கத்தையும் தீர்த்து, குலதருமத்தையும் கெடாமல் காப்பாற்றும். உரிய அரசனில்லாமல் ராஜ்யம் ஒரு விதவையின் நிலையிலிருக்கிறது. அதை அகற்றி, மங்களகரமாக்கக் கடவாய்! பூரண சந்திரனைப் போல் இருட்டை அகற்றி நாட்டை ஜொலிக்கச் செய்வாய். இதோ மந்திரிகள் இருக்கிறார்கள், அவர்களும்



நானும் உன் பாதங்களில் விழுந்து வணங்கிக் கேட்டுக் கொள்கிறோம். அண்ணா! இந்தப் பிரார்த்தனையை மறுத்துத் தள்ளி விடாதே!"

இப்படிச் சொல்லி ராமசந்திரனுடைய காலைப் பிடித்துக் கொண்டான்—தீரனான பரதன் கண்களில் நீர் ததும்ப.

பரதனைத் தழுவி யெடுத்து ராமன் சொல்லுகிறான்.

" அப்பனே! நாம் நற் குலத்தில் பிறந்தோம். நல்ல முறையில் வளர்க்கப் பட்டோம். நீயும் நானும் ஒரு நாளும் தவறு செய்ய மாட்டோம். உன்னிடத்தில் எள்ளளவேனும் நான் குற்றங் காணவில்லை. நீ துக்கப்பட வேண்டாம். பெற்ற தாயையும் நீ குற்றம் கூற வேண்டாம். நம்முடைய பண்பாட்டுக்கு இது தகாது. நம்மைப் பெற்ற தந்தை நமக்கு எந்த ஆணையும் இடலாம். அது அவருடைய உரிமை. வனத்துக்கு அனுப்புவதும், ராஜ்யாபிஷேகம் செய்வதும் இரண்டும் அவருடைய உரிமை. தாயையும் தந்தையையும் கௌரவிப்பது புதல்வர்களாகிய நம்முடைய கடமை. அவர்கள் இருவரும் எனக்கு இட்ட ஆணையை நான் ஒப்புக் கொள்ளாமலிருக்க முடியுமா? 'வனம் போ!' என்று தந்தை சொன்னதை நான் மறுப்பது தகுமா? உனக்கு ராஜ்யப் பொறுப்பைத் தந்தார். எனக்கு வனவாசம் தந்தார். இப்படி நம்மிருவருக்கும் வாழ்க்கையை வகுத்துக் கொடுத்து மரண மடைந்தார். அதை நாம் புறக்கணிக்கலாகாது. நீ ராஜ்ய பரிபாலனம் செய்து அவர் ஆணையை நிறைவேற்றுவதில் ஒரு குற்றமுமில்லை. அது உன் கடமையு மாகும். நானும் பதினான்கு வருஷங்கள் தண்டகாரண்யத்தில் தந்தையின் அந்திமக் கட்டளையை நிறைவேற்றுவேன். அதுவே தருமம். தேவராஜனுக்குச் சமமாக இருந்த நம்முடைய தந்தை சொன்னதை நாம் பக்தியுடன் செய்து தீர்க்க வேண்டும். தகப்பனார் ஆணையை நிறைவேற்ற இயலாமல், அதற்குப் பதில் உலக மெல்லாம் எனக்குக் கிடைப்பதானாலும் அதைப் பெற்றுக் கொண்டு நான் திருப்தியடைய முடியாது" என்றான் ராமன்.

இதைக் கேட்ட பிறகும் பரதன் மீண்டும் மீண்டும் ராமனைக் கேட்டுக் கொண்டான். தன்னைக் குறித்து வந்த அனர்த்தம், அது திருத்தப்படாமல் போனால் தன்னுடைய பாவம் தீராமல் நின்று போகும் என்று பரதன் வருத்தப் படுகிறான் என்பதைக் கண்டு ராமன்,

" நீ உன்னை நிந்தித்துக் கொள்ள வேண்டாம். உன் பொருட்டு இது நடந்து விட்டது என்று எண்ண வேண்டாம். அனைத்துக்கும் விதியே காரணம். துக்கத்தை விடு. அயோத்தியைக்குத் திரும்பிப் போய் ராஜ்ய பரிபாலனம் செய். நம்முடைய தந்தை சொன்னபடி நாம் இருவரும் நடக்க வேண்டும். அவருடைய கட்டளையை நாம் நிராகரித்தல் தகாது. உன்னிடத்தில் ஒப்புவித்த ராஜ்ய பாரத்தை நீ தாங்கியே தீர வேண்டும்" என்றான்.

பரதனுடன் வந்த அயோத்தி நகரத்து மக்களுக்குச் சக்கரவர்த்தித் திருமகனுடைய உறுதியைப் பார்த்து ஒரு பக்கம் மகிழ்ச்சியும் ஒரு பக்கம் துக்கமும் உண்டாயிற்று. பரதனுடைய அன்பையும் பக்தியையும் களங்கமற்ற உள்ளத்தையும் பார்த்துப் பார்த்து, 'இத்தகைய ராஜ குமாரர்களைப் பெற்றோமே நாம்!' என்று மகிழ்ந்தார்கள்.

* * *

" தந்தையின் சொல்லை நான் புறக்கணிக்க முடியாது. வீணாக முயற்சி செய்யாதே! உனக்கு உதவியாகச் சிறந்த தம்பி சத்ருக்னன் இருக்கிறான். எனக்கும் இங்கே ஒரு தம்பியிருக்கிறான். லக்ஷ்மணன் இருக்க எனக்கு என்ன குறை? நான்கு புத்திரர்களாகிய நாம் நம் தந்தையின் ஆணையைச் சரிவர நிறைவேற்றுவோம்" என்று ராமன் முடிவாக பரதனுக்குச் சொன்னான்.

பரதனுடன் வந்த புரோகிதக் கூட்டத்தில் ஒருவரா யிருந்த மகா வித்துவான் ஜாபாலர் இந்தச் சமயத்தில் நடுவில் புகுந்து ராமசந்திரனுக்கு லோகாயதம் உபதேசித்தார். "தந்தையின் ஆணை என்று திரும்பத் திரும்ப ஏதோ சொல்லுகிறாய். தசரதன் என்பது ஓர் உடல். அது பஞ்சத்துவம் அடைந்து விட்டது. ஐம்பெரும் பூதங்களோடு கலந்து போய் விட்டது. முடிந்துபோன அந்த உருவத்துக்கும் உனக்கும் இப்போது ஏதோ சம்பந்தம் இருப்பது போல் பேசுகிறாய். இது அறியாமை. கண்ணெதிரிலுள்ள சுகங்களை விட்டு விட்டுத் தருமம் என்றும் பரலோகம் என்றும் மூடர்களுடைய பேச்சை நீயும் பேசுகிறாய். துயரத்தில் மூழ்கிக் கூந்தலை வாரி எடுத்துக் கட்டாமலிருக்கும் ஒரு ஸ்திரீயைப் போல் அயோத்தி நகரம்

துக்கத்தில் கிடக்கிறது; உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. போய்ப் பட்டாபிஷேகம் செய்து கொண்டு சுகங்களை யனுபவித்துச் சந்தோஷமாய் இருப்பாய். பரதன் சொல்லுவதைக் கேள்! தந்தையின் கட்டளை என்று சொல்லிக் கொண்டு செய்ய வேண்டியதைச் செய்யாமலிருக்கிறாய்" என்று கூறினார்.

ராமனுக்கு ஜாபாலி சொன்னது மிகுந்த அதிருப்தியை உண்டாக்கிற்று. "சத்தியத்தை நீர் ஒரு பொருளாக மதிக்கவில்லை போலும். நீர் சொல்வது சரியாக இல்லை. நாஸ்திகம் பேசுகிறீர். சத்தியத்தைவிட மேலான ஒரு பொருள் உலகத்தில் இல்லை" என்றான் ராமன்.

வசிஷ்டர் அப்போது சமாதானப்படுத்தினார். "ராம! ஜாபாலி நாஸ்திகரல்ல. உன்னை எப்படியாவது அயோத்திக்குத் திரும்பிப் போகச் செய்ய வேண்டும் என்பதும் பரதனுடைய துக்கத்தை அகற்ற வேண்டும் என்பதும் அவருடைய கருத்து. உனக்குரிய ராஜ்யத்தை நீ பெற்றுக் கொண்டு மக்களைப் பரிபாலிக்க வேண்டும் என்கிற பெரு நோக்குடன் அவர் அவ்வாறு பேசினார். அவர் மேல் கோபிக்க வேண்டாம். ராஜ்ய பாரத்தை ஏற்றுக் கொள்ளுவது உன் குல தருமம். அதைப் பற்றிச் சந்தேகம் இல்லை. அது ஒரு புறமிருக்க மற்றொருபுறம் தந்தையின் ஆணை என்கிற பெரிய விஷயம் இருக்கிறது. இதைப் பெரிதாக நீ கருதுவதும் சரியே. ஆனால் பரிதாப நிலையிலுள்ள தம்பி பரதன் பழிக்கு அஞ்சி உன்னைத் தஞ்சமடைந்திருக்கிறான். அதை எப்படி நீ மறுக்கலாம். உன் பிராணனைப் போல் அவனிடம் நீ வைத்துள்ள அன்பு எங்கள் அனைவருக்கும் தெரியும். அண்டியவர்களைக் கைவிடுவது உன் சுபாவம் அல்ல. பரதனுடைய விண்ணப்பத்தை எப்படி நீ மறுக்கலாம்? தஞ்சமடைந்தவர்களைக் கைவிடுவதில்லை என்பதும் உன் விரதம் அல்லவா?"

ராமன் இசைவதாகக் காணவில்லை. அச்சமயம் பரதன் சுமந்திரனைப் பார்த்து, "அண்ணன் என் பேரில் இரக்கம் கொள்ள மறுக்கிறான். சுமந்திரரே, தர்ப்பை கொண்டு வந்து பரப்புவீர். நான் இங்கே உபவாச மிருந்து உயிர் விடுவேன்" என்றான்.

சுமந்திரன் தயங்கி ராமசந்திரனைப் பார்த்தான். பரதன் தானே தர்ப்பைப் புல் எடுத்துப் பரப்பி அதன்மேல் அமர்ந்தான்.

"குழந்தாய், இது தகாது. எழுந்திரு. அயோத்திக்குப் போய் உன் கடமையைச் செய். க்ஷத்திரிய தருமத்துக்கு விரோதமான செயலைச் செய்யாதே!" என்றான் ராமன்.

பரதன் எழுந்து நின்று, "அயோத்தி நகரத்து ஜனங்களே! ஏன் பார்த்துக் கொண் டிருக்கிறீர்கள்? ராமசந்திரன் உங்களுக்கு வேண்டாமா? ஏன் பேசாமலிருக்கிறீர்கள்?" என்றான்.

ஜனங்கள், "ராமசந்திரன் சத்தியம் தவறமாட்டான். பிதுர் வாக்கியம் என்ற ஒன்றையே பிடித்து அசையாமல் நிற்கிறான். அவன் குணம் நமக்குத் தெரியும். அவன் அயோத்திக்கு வரமாட்டான். அவனை வற்புறுத்துவதில் என்ன பயன்?" என்றார்கள்.

"தம்பி, இவர்கள் பேச்சைக் கேள். இவர்கள் நம் இருவருடைய ஹிதத்தையும் விரும்புகிறவர்கள், தரும புத்தி கொண்டவர்கள்" என்றான் ராமன்.

பரதன் எழுந்து நின்று, "நான் ஒரு பாவமும் அறியாதவன். மகாராஜாவினுடைய ஆணையை நடத்தியே தீரவேண்டுமென்றால் நான் வனத்தில் ராமனுக்குப் பதிலாக இருப்பேன். எனக்குப்பதிலாக அண்ணன் அயோத்தியையில் ராஜ்ய பரிபாலனம் செய்யட்டும்" என்றான்.

ராமன் இதைக் கேட்டுச் சிரித்து, "இந்த 'வினிமய பரிவர்த்தன' முறை இந்த விஷயத்தில் பொருந்துமா? இது கடை வியாபாரம் அல்லவே? ஒருவன் கடமையை மற்றொருவன் ஆபத்துக் காலங்களில் செய்வதுண்டு. செய்ய வேண்டிய விரதத்துக்கு வேண்டிய தேக சக்தி யில்லாத காரணத்தினால் செய்யலாம். அண்ணன் இருக்க வேண்டிய நியமத்தைத் தம்பி எடுத்துக் கொள்ளலாம். ஆனால் எப்போது? அண்ணனுக்கு விரதத்தை நிறைவேற்றும் சக்தியில்லாமலிருந்தால் அப்படிச் செய்யலாம். என் விஷயத்தில் அது பொருந்தாது. வனவாசத்துக்குப் போதிய சக்தி எனக்கு இல்லை என்றும், பரதனுக்கு உண்டு என்றும் நீங்கள் யாராவது சொல்லுவீர்களா?" என்று கேட்டான்.

அப்போது வசிஷ்டர் பரதனைப் பார்த்து, "ராமனுடைய அதிகாரத்தைக் கொண்டு சக்கரவர்த்தித் திருமகனுக்காக நீ ராஜ்ய பரிபாலனம் செய். அப்படிச் செய்தால் பழியுமில்லை; சத்தியமும் காக்கப் படும்" என்றார்.

பரதனைத் தன் மடிமேல் உட்கார வைத்து ராமன், "தம்பி, நான் தந்த ராஜ்யமாகவே எண்ணி நீ ஒப்புக் கொண்டு தந்தை சொற்படி நட" என்று தன் அன்பின் சக்தியை யெல்லாம் செலுத்திக் கேட்டுக் கொண்டான்.

அந்தச் சமயம் ராமன், பரதன், இருவர் திருமேனிகளும் இரு சூரிய பிம்பங்களைப் போல் ஒளி வீசி விளங்கின.

* * *

"அண்ணா, நீயே என் தந்தை, என் தெய்வம். நீ சொல்லுகிறபடியே செய்கிறேன். உன் மிதியடியை எனக்குத் தந்தாயானால் உனக்குப் பதிலாக அதை வைத்துக் கொண்டு நான் பதினான்கு ஆண்டுகள் முடியும் வரையில் நகரத்துக்கு வெளியி லிருந்துகொண்டு உனக்காக ராஜ்ய பரிபாலன காரியங்களைச் செய்து, உன் பாதுகைக்கு என் பணியைச் சமர்ப்பிப்பேன். பதினைந்தாவது வருஷம் நீ நகரத்துக்கு வந்து ராஜ்யத்தை ஒப்புக் கொள்வாயாக" என்று கூறிப் பரதன் முடித்தான்.

"அப்படியே!" என்றான் சக்கரவர்த்தித் திருமகன்; தன் கால்களை அன்புடன் பாதுகை மேல் வைத்து எடுத்து பரதனிடம் தந்தான். அவனும் வணங்கிப் பெற்றுக் கொண்டு தன் தலைமேல் வைத்துக் கொண்டான்.

* * *

பரதனும் பரிவாரமும் அயோத்தியை நோக்கிச் சென்றார்கள். வழியில் பரத்வாஜ முனிவரைக் கண்டு நடந்த விஷயங்களை அவரிடம் சொன்னார்கள். அவரும் பரதனுடைய குணத்தையும் முயற்சியையும் பாராட்டி, "உன் சீலமும் உன் குணமும் என்றென்றும் விளங்கும். தசரதன் மகன் அல்லவோ நீ? தண்ணீர் எப்படிப் பள்ளத்தை நோக்கி ஓடுகிறதோ அப்படி நெறி தவறாமல் உன் குலத்தின் சீலம் உன்னை அடைந்திருக்கிறது. உன்னைப் பெற்ற தசரதன் பாக்கியவான். அவன் இறக்கவில்லை. உயிருடனே உன் சொரூபத்தில் அமர்ந்து வாழ்கிறான்" என்று சொல்லி ஆசிர்வதித்தார்.

அவ்விட மிருந்து குகனுடைய இருப்பிடத்திற்குச் சென்று கங்கையைத் தாண்டி அயோத்தியை அடைந்தார்கள். பரதனும் பரிவாரமும் நகரத்துக்குள் நுழைந்தார்கள். தந்தையும் தமயனுமில்லாத நகரத்தை நெருங்கி வந்ததும், "சாரதியே, பாழாய்க் கிடக்கிறதே, ஊர்!" என்றான் பரதன்.

அவன் கண்ணுக்கு நகரம் அமாவாசை இருள் சூழ்ந்து துக்கத்தில் ஆழ்ந்து கிடப்பதாகத் தோன்றியது. முந்தி கேகய தேசத்திலிருந்து வேகமாக வந்து நகரப் பிரவேசம் செய்த பொழுது, 'என்ன நடந்ததோ' என்று திகிலுடன் பிரவேசித்தான். இப்போது எல்லாம் நன்றாகத் தெரிந்த நிலையில் பிரவேசித்தான். ஒவ்வொன்றையும் எண்ணி எண்ணித் துக்கப் பட்டான்.

அரச மாளிகைக்குள் சென்றான். தந்தை இல்லாத சூன்யமான அந்த மாளிகையில் தாய்மார்களை இறக்கி விட்டு, விடை பெற்றுக் கொண்டு, சபா மண்டபத்தில் வசிஷ்டர் முதலானவர்களுக்குச் சொன்னான்.

"என் துக்கம் மிகப் பெரிது, அதை நந்திக் கிராமத்திலிருந்து சகித்துக் கொண்டு, நான் ராமனிடம் வாக்குக் கொடுத்தபடி காரியங்களை அங்கிருந்து கொண்டே பார்ப்பேன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள்" என்றான்.

அவ்வாறே செய்யப்பட்டு, சபை கூட்டி, "இந்த ராஜ்யம் ராமனுடையது. தாற்காலிகமாக என்னிடம் ஒப்புவித்திருக்கிறான். அண்ணனுக்குப் பதிலாக அவன் மிதியடியை ஆசனத்தில் அமர்த்தியிருக்கிறேன். அதன் அடிமையாக நான் அரசாங்கம் நடத்தி வருகிறேன்" என்று பரதன் ராஜ சபையில் பிரதிக்ஞை செய்தான்.

* * *

அப்படியே ராஜ்ய பாரத்தை மந்திரிகளுடைய உதவியைக் கொண்டு நல்ல முறையில் நந்திக் கிராமத்திலிருந்து கொண்டு ராமனுடைய வனவாசம் முடிந்து, சீதா சமேதமாக சக்கரவர்த்தித் திருமகன் திரும்பி வரும் வரையில் ஒரு தவமாகக் கருதி நடத்தி வந்தான்.

தனக்கென்றல்லாமலும், வேறு எவ்விதப் பற்றும் கொள்ளாமலும் பகவானுடைய சரணங்களில் பலனைச் சமர்ப்பித்து லோகோபகாரத்தை முன்னிட்டுக் கடமைகளைச் சரிவரச் செய்வது தவமே யல்லவா? ராமன் காட்டில் தவமிருந்த பதினான்கு வருஷ காலம் பரதன் அயோத்தியையில் நந்திக் கிராம வாசி

யாகத் தவம் செய்து வந்தான் என்பது பெரியோர்களுடைய விளக்கம்.

* * *

சித்திரகூடப் பிரதேசத்தில் கொடிய ராக்ஷசர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தலைவன் ராவணனுடைய தம்பி கரன். இவனுக்கு ராமன் பேரில் வெகு துவேஷம். இந்தக் காரணத்தால் கரனும் அவனைச் சேர்ந்தவர்களும் சித்திரகூட வனத்துக்குள் அடிக்கடி பிரவேசித்துத் தங்களை இம்சை செய்து வருவதால், ரிஷிகள் அவ்விடத்தை விட்டு வேறு இடத்துக்குப் போக நிச்சயித்திருப்பதாக ராமனிடம் அவர்கள் தெரிவித்தார்கள். ராமன் எவ்வளவு தைரியம் சொல்லியும் அவர்கள் கேட்காமல், அவ்வாறே அந்த இடத்தை விட்டு வேறிடம் போய் விட்டார்கள்.

பரதன் திரும்பிப் போனது முதல் ராமனுக்குச் சித்திரகூடத்தில் மன நிம்மதியில்லை. தாய்மார்களும் தம்பியும் வந்து தன்னைச் சந்தித்துப் பேசியது அவனுக்குச் சதா நினைவிலிருந்து வந்தது. ஸ்மாரக சந்நிதியில் ஆற்றாமை இரட்டிக்கும். அந்த இடத்தை விட்டு வேறிடம் செல்வது நலம் என்று அவனுக்கும் தோன்றிற்று. ரிஷிகள் போய்விட்ட பிறகு ராம லக்ஷ்மணர்கள் சீதையுடன் சித்திரகூடத்தை விட்டு, தண்டகாரண்யத்தில் வேறு இடம் பார்த்துக் கொள்ள நிச்சயித்தார்கள்.

இவ்வாறு தீர்மானித்தபின் ராமலக்ஷ்மணர்கள் சீதையுடன் அத்திரி மகரிஷியின் ஆசிரமத்துக்குச் சென்று அவரை வணங்கித் தங்கள் யோசனையைத் தெரிவித்தார்கள். அத்திரி மகரிஷியின் மனைவி மகா தபஸ்வியான அனசூயை. சீதை அவளை வணங்கி அவளுடைய ஆசியைப் பெற்றாள். "வனம் சென்ற புருஷனுடன் நீ கஷ்டங்களை அனுபவித்து எல்லோருக்கும் வழிகாட்டி வருகிறாய்" என்று சீதையை மிகவும் பாராட்டித் தன் அன்புக்கு அடையாளமாக வஸ்திரமும், மங்கள ஆபரணங்களும், மஞ்சள் குங்குமமும், பரிமளப் பொடியும் கொடுத்தாள். அனசூயை மகா பாக்கியவதி. அவள் கொடுத்த வஸ்திராபரணம் சீதைக்கு அழியாத அழகும் ஆன்ம சக்தியும் தந்தன.

அவற்றைச் சீதை பெற்றுக் கொண்டு, "என் கணவர் சக்கரவர்த்தித் திருமகன் என் மேல் பெற்ற தாயின் அன்பையும் தந்தையின் அன்பையும் ஒன்று சேர்த்துச் செலுத்தி வருகிறார். எனக்கு என்ன குறை?" என்றாள்.

பிறகு போகவேண்டிய வழி கேட்டுத் தெரிந்து கொண்டு மூவரும் சென்றார்கள்.

அன்னையின் சிந்தனை

ஒரு நாள் பிற்பகல் அன்னை தனியாக உலகை இன்னல்களைப் பற்றி யோசித்த வண்ணம் இருந்தார். மக்கள் படும் துன்பங்களை நீக்குவதற்காக பகவான் (ராமகிருஷ்ணர்) எத்தனை எத்தனை பிறவிகள் எடுக்கவேண்டியிருக்கிறது என்றெல்லாம் எண்ணிக் கொண்டே இருந்தார். அந்தச் சமயம் அவ்விடத்தை மேற்பார்த்து வந்த ஆள் அங்கு வந்து சேர்ந்தான். அன்னை எதைப் பற்றி இவ்வளவு தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கக் கூடும் என்பது புரியாமல் நின்று கொண்டிருந்தான். உடனே அன்னை அவனிடம், "ஒரே சந்திரன்தான் ஒவ்வொரு நாள் இரவும் உதிக்கவேண்டியிருக்கிறது அல்லவா? அதுபோல் பகவானுக்கும் மீண்டும் மீண்டும் பிறவி எடுக்க வேண்டியதாகத்தான் இருக்கிறது. தப்ப வேறு வழி இல்லை. பிறவி எடுக்க எடுக்கக் கஷ்டத்துக்கு மேல் கஷ்டம்தான் வருகிறது. எத்தனை நாள் இந்தத் துன்பங்களை ஏற்றுப் பொறுப்பது? மக்களின் கதி இதுதானா?—இல்லை—பகவானுடைய கதியும் இதுதான். இதைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். இதற்கு ஒரு முடிவே இல்லை. பகவான் ராமகிருஷ்ணருக்குத்தான் எவ்வளவு கஷ்டம்! இதை யார் உணரப்போகிறார்கள்!" என்று மிகவும் வருத்தப்பட்டுக் கூறினார்.

அங்கு மேற்பார்த்துக் கொண்டிருந்தவன், "ஏன் பகவான் ராமகிருஷ்ணர் மட்டும் துன்பப் படுவதாகக் கூறுகிறீர்கள்? அவர் படும் கஷ்டங்கள் உங்களுடையவையும் கூடத்தான். பகவானும் தாங்களும் உண்மையில் ஒருவரே அல்லவா?" என்றான்.

"அசட்டுப் பயலே! என்ன உளறல் உளறுகிறாய்! நான் எங்கே, அவர் எங்கே? நான் அவருடைய வேலைக்காரிதானே? நீ இதைப் படித்ததில்லையா: 'நீயே இயந்திரம் இயக்குபவன், நான் இயந்திரம்; நீதான் வீட்டுக்காரி, நான் வீடு! நீ எவ்விதம் என்னை வேலை செய்யச் சொல்லுகிறாயோ, அவ்விதம் நான் வேலை செய்கிறேன்.' ஆகவே, பகவான்தான் யாவும், அவரைத் தவிர அண்டத்தில் வேறு ஒன்றும் இல்லை."



ஹமாமை நான் இவ்வளவு விரும்புவது—



அது எனக்கு மிகுந்த —புத்துணர்ச்சி— கொடுப்பதுதான்



TATA PRODUCT

(ஒவ்வொரு கட்டியும் நெடுநாள் வருவதால் அது சிக்கன முடையதென்றும் உங்களுக்குத் தெரியவரும்!)

அது சிறந்ததென்பதை நீங்கள் நிச்சயமாக அறிவீர்கள்—
ஏனெனில் அது டாடா தயாரிப்பு

இந்திய மூலதனத்தைக் கொண்டு, இந்திய நிர்வாகத்தில்,
இந்தியாவிலேயே தயாரிக்கப்படுவது.

ஸ்ரீ ஏ.எப்.எஸ். தல்யார்க்கானின் டாடா ஸ்போர்ட்ஸ் ரீவியூவை
செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் இரவு 9 மணிக்கு
ரேடியோ சிலோனில் கேளுங்கள்.

TS. 9771

5,00,000
கதிர்கள்

பருத்தி நூல்கள்

நெ. 80 வரை
நூல்கள்

மதுரை மில்ஸ் கம்பெனி லிட்., மதுரை

மில்கள் : மதுரை, தூத்துக்குடி, அம்பாசமுத்திரம்

○●○

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கான
சகலவிதமான நூல்கள்

○●○

விசேஷ ரகங்கள் :

கயிறுகள், விழுதுகள், கித்தான்கள், நாடாக்கள் முதலியவைகளுக்கான
விசேஷ நூல்கள்-தையல் நூல்-முறுக்கேற்றிய திரித்த சரடுகள் முதலியன

○●○

மானேஜர்கள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

பாண்டியன் பில்டிங்

போன் : 420 (4 லைன்) மதுரை *தந்தி :* "ஹார்வி"



'பிராங்கைடிஸினுல் என் சுவாசப்பைகள் நெருப்பைப்போல் தகித்தன'

ஆனல் **பெப்ஸ்**

அடைப்பைப்போக்கி, எரிச்சலையும் உடனே தணித்தது.



பெப்ஸ் தொண்டை மற்றும் மார்புவலி நிவாரண மாத்திரைகளில் சமன மூட்டி குணப்படுத்தும் ரசங்கள் அடங்கியுள்ளன. பெப்ஸை சுவைக்கும் போதே, இந்த ரசங்கள் ஆவியாக மாறி, உங்கள் சுவாசத்துடன் தொண்டை, சுவாசக் குழாய் மூலமாக சுவாசப்பைக்குச் செல்லும். ஆகவே கோளாறின் ஆரம்பஸ்தானத்திற்கே சென்று வேலை செய்கின்றன. அதனால்தான் பெப்ஸ் கைகண்ட ஔஷதமாயும், உலக பிரசித்தி பெற்றும் விளங்குகிறது. பெப்ஸ் இருமலை நிறுத்தி தொண்டை ரணத்தை சமனமாக்கி, கபத்தை உடைத்து, அடைப்பை நீக்குவதுடன் இன்புளுயன்ஸா மற்றும் பிராங்கைடிஸ் சிகிச்சையில் இன்றியமையாததாயுமுள்ளது.

பெப்ஸ் தொண்டை, மார்பு வலி நிவாரண மாத்திரைகள்
எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

PEPS

FPY-28-TAM

மதராஸிற்கு ஸோல் ஏஜெண்டுகள் : தாதா & கம்பெனி, பார்க் டவுன்



10. மந்திர ஜாலம்

பிரபாகரனும் உமாவும் வெகு வேகமாக நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

"அண்ணா, இப்படியே நாம் போய்க் கொண்டிருந்தால் என்ன பிரயோஜனம்? நாம் போய்க் கொண்டிருப்பது கல்லறைத் தீவுக்குப் போகும் வழிதானா என்று யாரையாவது கேள், அண்ணா!" என்றாள் உமா.

"நீ சொல்லுவது சரிதான், உமா. வழியைத் தெரிந்து கொண்டுதான் போக வேண்டும்" என்றான் பிரபாகரன்.

அப்பொழுது அவர்களுக்கெதிரே ஒரு தபால்காரன் வந்து கொண்டிருந்தான்.

பிரபாகரன் அவனைப் பார்த்ததும் மிகவும் சந்தோஷத்துடன், "ஐயா, தபால்காரரே! கல்லறைத் தீவுக்கு எந்த வழியாகப் போவது? அந்தத் தீவுக்குக் கடிதம் வந்தால் நீங்கள்தானே கொண்டு போய்க் கொடுப்பீர்கள்?" என்று கேட்டான்.

இதைக் கேட்டவுடன் "ஹி, ஹி, ஹி" என்று சிரித்தான் தபால்காரன்.

"ஏன் ஐயா, சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டான் பிரபாகரன்.

"நீங்கள் இருவரும் இந்த ஊருக்குப் புதிதோ? அதனால்தான் இப்படிக் கேட்கிறீர்கள்! கல்லறைத் தீவின் சமாசாரம் உங்களுக்குத் தெரியாதாக்கும்!" என்றான் தபால்காரன்.

"என்ன சமாசாரம்? சொல்லுங்களேன்" என்றான் பிரபாகரன்.

"அந்தக் கல்லறைத் தீவில் யார் வசிக்கிறார்கள், அங்கே போய்க் கடிதம் கொடுப்பதற்கு? உயிர் உள்ளவர் எவருமே அங்கிருக்க முடியாது. அந்த இடத்தைப் பற்றிப் பேசினாலே ராஜ தண்டனை கிடைக்கும் என்று வதந்தி உலாவுகிறது. அந்தத் தீவு வெகு தூரத்தில் இருக்கிறது. மாயா மகேந்திரபுரத்தைக் கடந்துதான் கல்லறைத் தீவுக்குச் செல்ல வேண்டும். மாயா மகேந்திரபுரத்துக்குப் போய்க் கேட்டால் யாரும் வழி சொல்லுவார்கள்."

"மாயா மகேந்திரபுரத்துக்கு எப்படிப் போவது?" என்றான் பிரபாகரன்.

"நீங்கள் இப்பொழுது போகிறபடி தெற்கு நோக்கியே செல்லுங்கள். இரண்டு மைல்களுக்கப்பால் ஒரு பெரிய மைதானம் குறுக்கிடும். அந்த மைதானமே ஒரு மைல் தூரம் இருக்கும். கோட்டைக்குப் பக்கத்தில் அந்த மைதானம் இருக்கிறது. முன் காலத்தில் விரோதிகள் கோட்டைக்குள் சீக்கிரம் வராமல் தடுப்பதற்காக அந்த மைதானத்தில் நிறைய மணல் கொட்டி வைத்திருந்தார்கள். இப்பொழுது அவ்வளவு மணல் இல்லா விட்டாலும் சீக்கிரம் மைதானத்தில் நடந்து செல்ல முடியாது. அதுவும் நல்ல வெய்யிலில் அதைக் கடப்பது மிகவும் சிரமம். அந்த மைதானத்தைக் கடந்து சென்றால் சீக்கிரமே மாயா மகேந்திரபுரத்தை அடையலாம்" என்று சொல்லி விட்டுத் தபால்காரன் போய் விட்டான்.

பிரபாகரனும் உமாவும் சற்று வேகமாக நடந்து சென்றார்கள். தபால்காரன் சொல்லிய மைதானமே வந்த பாடு இல்லை. நடக்க முடியாமல் ஓர் மரத்தடியில் சற்று தங்கினார்கள். சற்று இளைப்பாறியவுடன் மறுபடியும் தெற்கு நோக்கி நடந்தார்கள். கொஞ்ச தூரம் சென்றவுடன் ஒரே வெளிச்சமாக இருந்தது "இதுதான் தபால்காரன் குறிப்பிட்ட மைதானமாக இருக்கும் போல இருக்கிறது. பார், நம் கண்களுக்கு எட்டிய மட்டும் ஓர் மரம் கூடத் தெரியவில்லையே. அதோ பார்! ஒரே ஒரு பனை மரம்தான் தெரிகிறது" என்றான் பிரபாகரன்.

அப்பொழுது நடுப்பகல் பன்னிரண்டு அல்லது ஒரு மணி இருக்கும். மெதுவாக நடக்க முடியாமல் உமா நடந்து கொண்டே பிரபாகரனைப் பின் பற்றினாள்.

சற்று நேரம் பேசிக் கொண்டு நடந்து வந்த உமா, "அண்ணா, அண்ணா! எனக்கு மிகவும் தாகமாக இருக்கிறது. மண் கூஜாவில் உள்ள தண்ணீரையும் வழியிலேயே குடித்து விட்டேனே! கொஞ்சமாவது தண்ணீர் குடித்தால்தான் என்னால் மேலே நடக்க முடியும், அண்ணா" என்று சொல்லி விட்டு மிகவும் பரிதாபமான முகத்துடன் பிரபாகரனின் முகத்தை நோக்கினாள்.

பாவம், பிரபாகரன் என்ன செய்வான்? அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. மைதானத்தை ஒருமுறை சுற்றிப் பார்த்தான். ஒன்றும் புலப்படவில்லை. அப்



பொழுது அங்கு இருந்த ஒரு பனை மரத்தில் ஒரு காகம் உட்கார்ந்திருந்தது. அது தன் உடம்பை இரண்டு மூன்று முறை சிலிர்த்துக் கொண்டது.

"உமா, உமா! அதோ பார்த்தாயா, அந்தக் காகத்தை? எங்கேயோ குளித்து விட்டு உடம்பெல்லாம் சிலிர்த்துக் கொள்ளுகிறது. சமீபத்தில் ஏதோ குளமோ, ஆறோ இருக்கிறது என்று தெரிகிறது!" என்றான்.

பனை மரத்தில் உட்கார்ந்திருந்த காகம் பறந்து ஓர் சிறிய மேட்டின் மீது உட்கார்ந்தது. பிரபாகரனும் உமாவும் அந்த மேட்டின் அருகில் சென்றார்கள். அப்பொழுது உட்கார்ந்திருந்த காகம் திடீரென்று மறைந்தது. பிறகு மறுபடியும் மேட்டில் உட்கார்ந்து உடம்பைச் சிலிர்த்துக் கொண்டது. உமாவும் பிரபாகரனும் வேகமாக ஆர்வத்தோடு சென்றார்கள். மேட்டுக்கு மேல் பக்கத்தில் ஓர் சிறிய கிணறு இருந்தது. அந்தக் கிணறு மிகவும் ஆழமாக இருந்தது. ராட்டினம் அமைக்கப்பட்டு ஒரு பழைய சங்கிலியும், ஓர் நசுங்கிப் போன ஓட்டை வாளியும் அதில் பொருத்தப்பட்டு இருந்தன. பிரபாகரன் கிணற்றை எட்டிப் பார்த்தான். அந்தக் கிணற்றில் ஓர் செம்புக்கு மேல் தண்ணீர் இருப்பதாக அவனுக்குத் தெரியவில்லை. வாளியைக் கிணற்றுக்குள் விட்டான். அதை வெளியே இழுத்தபோது கொஞ்சம் தண்ணீர்தான் கிடைத்தது.

"உமா, உமா! அவசரப்படாதே. முதலில் இந்த மண் கூஜாவை நிரப்புகிறேன். பிறகு நாம் இருவரும் தண்ணீர் குடிக்கலாம்" என்று பிரபாகரன் சொல்லிவிட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக மண் கூஜாவை நிரப்பிக் கொண்டிருந்தான்.



"அதோ பறந்து போகிறதே அந்தக் காக்கைக்கு என்ன தைரியம்! இக்கிணற்றுக்குள் சென்று குளித்து விட்டு அல்லவா அது போகிறது? கிணற்றுக்குள் சென்று குளித்துவிட்டுப் போன காக்கைகளை நான் இதுவரையிலும் பார்த்ததே இல்லை. எனக்குச் சுமார் வயது எண்பது ஆகிறது" என்று ஒரு வயது முதிர்ந்த குடியானவன் தன் நண்பனிடம் சொல்லிக் கொண்டே கிணற்றுப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தான்.

சிறிய மண் கூஜாவை நிரப்புவதற்கு ஏறக்குறைய ஒரு மணி நேரம் ஆயிற்று. உமா குடிப்பதற்காக அவசரமாக மண் கூஜாவைக் கையில் எடுத்தாள்.

"உமா, உமா! அவசரப்படாதே. அந்தக் குடியானவர்கள் சொல்லிக் கொண்டு போனதைக் கேட்டாயா? அவர்கள் சொல்லுவது உண்மைதான். காக்கை கிணற்றுக்குள் சென்று குளிக்கவே குளிக்காது. அந்தக் காக்கை மாயக் காக்கையாக இருக்குமோ! அந்தக் காக்கையின் செய்கையும் அது பார்த்த பார்வையும் நம்மை இந்தக் கிணற்றண்டை வேண்டும் என்றே அழைத்து வந்தது போல அல்லவா தோன்றுகிறது? அது அப்படிச் செய்யா விட்டால் இந்த மேட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் கிணறு நம் கண்களுக்கு எப்படிப் புலப்பட்டிருக்கும்?" என்றான் பிரபாகரன்.

அங்கு உட்கார்ந்திருந்த காகம் உண்மையான காகம் அல்ல. வயற் காட்டுக் கிழவிதான் அந்த ரூபமாகக் கிணற்று ஜலத்தை மந்திர ஜலமாக மாற்றிப் பிரபாகரனையும் உமாவையும் ஏமாற்ற ஏற்பாடு செய்தாள்.

"உமா, கூஜா நிறையத் தண்ணீர் நிரம்பி விட்டது. அதை எடுத்துக் கொள். எதற்கும் யாராவது இங்கு வருபவர்களைக் கேட்கலாம். பிறகு குடிக்கலாம்" என்றான்.


பிரபாகரனும் உமாவும் கொஞ்ச தூரம் போயிருப்பார்கள். அப்பொழுது யாரோ குதிரைகளில் வரும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான் பிரபாகரன். உமாவும் பார்த்தாள்.

"ஐயோ, அண்ணா! நம்மை இரும்புக் கூண்டில் அடைத்த போது இருந்த ஆசாமிகள் அல்லவா இவர்கள்!" என்று கத்திப் பயத்தினால் பிரபாகரனைக் கட்டிக் கொண்டாள்.

குதிரைச் சேவகர்கள் பிரபாகரனையும், உமாவையும் நெருங்கினார்கள். அந்த மைதானத்தில் நிறைய மணல் இருந்ததனாலும் குதிரைச் சேவகர்கள் வெகு வேகமாக வந்ததனாலும் மைதானம் முழுவதும் சற்று நேரம் ஒரே புழுதிமயமாக இருந்தது.

"நில் அங்கே! மேலே போகாதீர்கள்" என்று உரக்கக் கத்தினான் ஓர் குதிரைச் சேவகன்.

"உங்களை நாங்கள் என்ன செய்தோம்? எங்களுக்கு வழி விடுங்கள்.



நீங்கள் இன்று உங்கள் பற்களை மக்ளீன் செய்தீர்களா?



ஆம், அதன் இரகசியம் இதுதான் . . .

பற்களைத் தவறாமல் சுத்தம் செய்து வருவதால் அவை நெடு நாளைக்கு ஆரோக்யமாக இருக்கின்றன என்பதைத் தெளிவாக்கி விடுவோம். பிரதி தினமும், இருவேளையும் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை உபயோகிப்பதால், அதிக வெண்மையான பற்களும், உறுதியான ஈறுகளும் நறுமணமுள்ள சுவாசமும் நிச்சயமாக உண்டாகின்றன. இவ்வித்தியாசத்தை நீங்களே காணலாம். மக்ளீன்ஸிலுள்ள ஒரு ப்ரத்யேகமான பொருள் பற்களின் மேல் படிந்துள்ள மங்கலான பூச்சை மாற்றி பற்களின் மேல் இயற்கையாக ஒளிரும் வெண்மையை வெளிக்கொணர்கிறது.

"... என்னைப் போலவே தங்களது பற்களைப் பற்றிப் பெருமைப்படுபவர்களுக்கு மக்ளீன்ஸ் பற்பசையையே சிபார்சு செய்கிறேன்"



க்ளோரோபில் சேர்ந்தும் கிடைக்கும்.

MTY-38-TAM.



நாங்கள் எங்கள் வழியே போகிறோம்! வா, உமா! போகலாம்!'' என்று பிரபாகரன் உமாவின் கையைப் பற்றிக் கொண்டான்.

"எங்கே போகப் போகிறாய்? இதோ, உனக்குச் சரியான பாடம் கற்பிக்கிறேன். இனிமேல் என்னை எப்பொழுதும் நீ மறக்க மாட்டாய்'' என்று சொல்லிக் கொண்டே கீழே இறங்கினான் ஒரு குதிரைச் சேவகன்.

மற்றொரு குதிரைச் சேவகன், 'இந்தா அண்ணே கயிறு' என்று சொல்லிக் கொண்டே குதிரையினின்று இறங்கித் தனது தோளின்மீது மாட்டியிருந்த பையிலிருந்து வெகு நீளமான இரண்டு வெள்ளைக் கயிறுகளை அவனிடம் கொடுத்தான்.

"நில், அங்கே! இப்பொழுது உன்னை என்ன செய்கிறேன், பார்!'' என்று பிரபாகரனின் அருகில் சென்று அவனைப் பிடித்துக் கொண்டான். பிரபாகரன் திமிறி அவன் கையினின்று வெளிவந்தான்.

"அண்ணே, நீயும் இங்கே வா. இந்தப் பயல் மிகவும் துள்ளுகிறான்'' என்றான். உடனே மற்றொரு குதிரைச் சேவகனும் பிரபாகரனிடம் வந்தான். இரண்டு குதிரைச் சேவகர்களும் மிகவும் சிரமப்பட்டுப் பிரபாகரன் கைகளை முதுகுப்புறம் வைத்துக் கட்டி விட்டார்கள். பிரபாகரன் 'தொப்'பென்று கொதிக்கும்மணலில் விழுந்தான். அவன் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வந்து கொண்டிருந்தது. உமா ஒன்றுமே பேசவில்லை. பயத்தினால் அவள் உடம்பெல்லாம் வெளுத்து இருந்தது. அவள் பேச யத்தனித்தாலும் அவள் வாயினின்று ஒருவார்த்தைகூட வரவில்லை.

ஒரு குதிரைச் சேவகன் தன்னிடமிருந்த இன்னொரு கயிற்றை எடுத்து உமாவையும் கட்டுவதற்காக அவளிடம் நெருங்கினான். உடனே மற்றொரு குதிரைச் சேவகன், "அண்ணே, இவளைக் கட்ட வேண்டாம் இந்தப் பெண் எங்கே ஓடிவிடப் போகிறாள்? விட்டுவிடு. இப்பொழுதுதான் நாம் குதிரையின்மீது வைத்துக் கொண்டு போய் விடப் போகிறோமே!'' என்றான்.

கட்டுப்பட்டுக் கிடந்த பிரபாகரன், அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான். உமாவையும் கட்டாமல் விட்டது பற்றி அவனுக்கு ஒரு விதத்தில் சந்தோஷம். ஆனால் அவன் மனசில் இப்பொழுது இருந்த கவலையெல்லாம் தன்னையும் உமாவையும் எங்கேயாவது பிரித்துப் பாதுகாப்பில் வைத்து விடுவார்களோ என்பதில்தான் இருந்தது. உமாவுக்குப் பயத்தினால் ஒன்றும் தோன்றவில்லை. பிரபாகரனையே பார்த்துக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள் உமா.

"ஏன் அண்ணே, இவர்கள் இரண்டு பேரையும் தூக்கிக் குதிரையில் வைத்துக் கொண்டு புறப்பட வேண்டியதுதானே? இன்னும் ஏதாவது வேலையிருக்கிறதா?'' என்று கேட்டான் ஒரு சேவகன்.

"என்ன அண்ணே, புறப்படும் போது நீ சொன்னதை மறந்து விட்டாயா? நான் ரொம்பப் பசியாக இருக்கிறது என்று சொன்னதற்கு 'மைதானத்துக்குப் போய்ச் சாப்பிடலாம். என் பெண்சாதி நிறையத் தோசை பண்ணிக் கொடுத்திருக்கிறாள்' என்றாயே!" என்று தோசையைப் பற்றி நினைவூட்டினான் மற்றவன்.

"ஆமாம், உண்மைதான்! இவர்களைக் கண்டு பிடித்த சந்தோஷத்தில் அதைப் பற்றி மறந்து விட்டேன். வீரப்ப தேவர் கொடுக்கப் போகும் சன்மானம் வேறு நினைவுக்கு வந்தது. எல்லாம் மறந்து விட்டது. சரி, வா! ஒருபுறமாக உட்கார்ந்து இங்கேயே சாப்பிடலாம்" என்று கூறி மூட்டையை எடுத்துக் கொண்டு ஒரு புறமாகப் போனான்.

இருவரும் உற்சாகமாகத் தோசையைத் தின்ன ஆரம்பித்தார்கள்.

அந்தச் சமயத்தில் ஒரு சேவகன் "அண்ணே, ரொம்பத் தாகமாக இருக்கிறதே, குடிக்கத் தண்ணீர் வேண்டுமே! ஆகா! அதோ ஒரு மண்கூஜா இருக்கிறதே! அதில் ஜலம் இருக்கும் போலிருக்கிறது!" என்று கூறி மண் கூஜாவை எடுத்து வந்தான். தானும் ஜலம் குடித்து விட்டு மற்றவனுக்கும் கொடுத்தான்.

கிழவியின் மந்திர ஜால சக்தியைப் பற்றி ஏற்கெனவே உங்களுக்குத் தெரியுமல்லவா? தண்ணீரைக்குடித்தசேவகர்களின்பார்வை முதலில் தோசைத் துண்டுகளைப் பொறுக்க வந்த காகங்களின் மீது சென்றது. அவ்வளவுதான். "காகாகா! நான் ஒரு காக்கா" என்று இரண்டு கைகளையும் மேலும் கீழுமாகக் காகம் பறப்பது போல ஆட்ட ஆரம்பித்தான். கா கா என்று கத்திக் கொண்டும் கைகளை இறக்கைகள் மாதிரி ஆட்டிக் கொண்டும் இங்குமங்கும் போய் வந்தான்.

அடுத்த குதிரைச் சேவகன் மீதியுள்ள கூஜா ஜலத்தையும் குடித்துவிட்டுத் தடால் என்று மண் கூஜாவைப் பிரபாகரனின் மேல் விட்டெறிந்தான். நல்ல வேளையாகப் பிரபாகரனின் மேல் அது படவில்லை. கீழே விழுந்து சுக்குநூறாக உடைந்து விட்டது.

கூஜாவை உடைத்த குதிரைச் சேவகனுடைய பார்வை முதலில் பக்கத்தில் நின்று கொண்டிருந்த குதிரையின் மீது சென்றது. அடுத்த கணம் "ஹி ஹி ஹி! நான் ஒரு குதிரை. என் முதுகின்மீது ஏறிக் கொள்ளுங்கள். நான் இதோ ஓடப் போகிறேன்!" என்று குதிரையைப் போல இரண்டு கால்களையும் மண்டியிட்டு முன் கைகளையும் கீழே வைத்து நடந்து கொண்டே குதிரையின் பக்கத்தில் போனான். குதிரை தன் பின் கால்களினால் அவன் முகத்தில் உதைக்கவே அவன் முகத்தில் காயம்பட்டு ரத்தம் வர ஆரம்பித்தது. ஆனால் அந்தச் சேவகன் அதை லட்சியம் செய்யவில்லை.

அவன்தான் தன்னைக் குதிரை என்று நினைத்துக் கொண்டிருக்கிறானே!

உடனே பிரபாகரன் "உமா, உமா! நாம் தப்பினோம். நாம் நினைத்தபடி அந்தக் கிணற்றிலிருந்து எடுத்த ஜலம் மந்திர ஜலம். நல்ல வேளை நாம் குடிக்காமல் இருந்தோமே! சரி, உமா! என் கட்டுகளை அவிழ்த்து விடு. உடனே நாம் தப்பவேண்டும்" என்றான்.

உமா நடுங்கிய கைகளுடன் பிரபாகரனின் கட்டுகளை அவிழ்த்து விட்டாள்.

"வா, வா! உமா, தாமதிக்காதே. இந்த இடத்தை விட்டுச் சீக்கிரம் ஓடிப் போய் விடலாம்" என்றான் பிரபாகரன்.

"அண்ணா, என்னால் இந்த மணலில் வேகமாக நடக்க முடியாது. அவர்கள்தான் தங்கள் சுயநினைவே இல்லாமல் இருக்கிறார்களே! ஏன் நாம் கொஞ்ச தூரம் அவர்களுடைய குதிரையின் மீது ஏறிச் சவாரி செய்யக் கூடாது? அப்படிச் செய்தால் சீக்கிரமாக இந்த இடத்தை விட்டுப் போய் விடலாமே!" என்றாள் உமா.

"உமா, நீ பலே கெட்டிக்காரி. நான் என்ன நினைத்தேனோ அதையேதான் நீயும் சொல்லுகிறாய். சரி, வா, போகலாம்" என்று கூறி உமாவை முதலில் ஒரு குதிரையின்மீது ஏற்றி உட்கார வைத்தான். பிரபாகரனும் அதே குதிரையின் மீது உமாவுக்குப் பின் உட்கார்ந்து கொண்டான். லகானை இழுத்தான். குதிரையும் புறப்பட்டு விட்டது. இரு சேவகர்களும் ஆளுக்கு ஒரு குதிரையோடு வந்தார்கள் அல்லவா? அந்த மற்றொரு குதிரையும் அவர்களைத் தொடர்ந்தது. (தொடரும்)

அன்னையின் பெருமை

நீங்கள் யாரும் இன்னும் அன்னையின் வாழ்க்கை விசேஷத்தைச் சரியாக உணரவில்லை—ஆம், ஒருவருமே உணரவில்லை. ஆனால் காலடைவில் நீங்கள் உணருவீர்கள். சக்தியின்றி உலகில் புத்துயிர் கிடையாது. நமது நாடு ஏன் பலஹீனமாகவும், மற்ற நாடுகளை விடப் பிற்போக்கான நிலையிலுமிருக்கிறது, தெரியுமா? ஏனெனில், சக்தி அங்கு அவமானப்படுத்தப்படுகிறாள். இந்தியாவில் அந்த ஆச்சரியமான சக்தியைப் புதுப்பிக்க, புத்துயிர் ஊட்ட அன்னை தோன்றியிருக்கிறார்.

அன்னையை மையமாகக் கொண்டு மீண்டும் உலகில், வேதகாலத்து உத்தமப் பெண்களான கார்க்கியைப் போலவும், மைத்ரேயியைப் போலவும் பெண்கள் தோன்றப் போகிறார்கள். அன்பார்ந்த சகோதரா, இப்பொழுது நான் சொல்வது உனக்கு ஒன்றுமே புரியாமல் இருக்கலாம். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக, நாளாக நாளாக நான் சொல்வது யாவும் உனக்கு விளங்கும். அதனால்தான் நான் முதலில் அன்னைக்கு ஒரு மடத்தைக் கட்ட விரும்புகிறேன்......அன்னையின் அருளின்றி ஒரு காரியமும் செய்ய முடியாது. நான் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் என்ன காண்கிறேன்—சக்தியின் ஆராதனைதான்! எங்கும் அந்தப் பூஜைதான்! ஆனால் அவர்கள் அறிவில்லாமல் ஐம்பொறிகளின் நுகர்ச்சிக்காக வழிபடுகிறார்கள். அவளைப் பரிசுத்தமான உள்ளத்தோடு, சாத்விக உணர்ச்சியுடன், தங்கள் அன்னை என்ற பேருணர்ச்சியுடன் வழிபடுபவர்கள் இன்னும் எத்தகைய பெரும் பயனையடைவார்கள் என்பதைச் சற்றுக் கற்பனை செய்து பார்!

நாளாக நாளாக நான் பல விஷயங்களை மிகவும் தெளிவாக உணர்ந்து வருகிறேன். எனது அறிவுப் பார்வை மேலும் மேலும் விரிந்து வருகிறது. அதனால்தான் முதலில் அன்னைக்கு நாம் ஒரு மடம் எழுப்ப வேண்டும் என்கிறேன். முதலில் அன்னை, அன்னையின் புதல்விகள்; பிறகுதான் தந்தை, தந்தையின் புதல்வர்கள்!—இதை உங்களால் புரிந்து கொள்ள முடியுமா? எனக்கு, தந்தையின் அருளைவிட, தாயின் அருளே நூறாயிரம் மடங்கு உயர்ந்ததாகத் தோன்றுகிறது. அன்னையின் அருள், அன்னையின் ஆசிகள் யாவும் எனக்கு மிக மிக உயர்வானவை......இப்படிச் சொல்லுவதற்கு என்னை மன்னித்து விடுங்கள். அன்னை சம்பந்தப்பட்ட மட்டில் நான் சற்று மூடபக்தி கொண்டவன்தான். அன்னை மட்டும் கட்டளையிட்டு விட்டால், அவளுடைய பேய்க்கணங்கள் என்ன வேண்டுமானாலும் சாதித்து விடும். சகோதரா, நான் அமெரிக்காவுக்குப் புறப்படு முன் அன்னைக்குக் கடிதம் எழுதி ஆசி கோரினேன். அவருடைய ஆசி வந்தது; ஒரு தாவில் நான் கடலைக் கடந்து விட்டேன். இங்கே, இந்தக் குளிர் காலத்தில் நான் ஒவ்வொரு இடமாகப் பிரசங்கம் புரிந்து கொண்டு போகிறேன்; எத்தனையோ இன்னல்களை எதிர்த்துப் போராடுகிறேன். எதற்கு? அன்னையின் மடத்தை எழுப்ப நிதி திரட்டுவதற்குத்தான்! ★ ★ ★ ★

[சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவிலிருந்தபோது எழுதிய கடிதத்திலிருந்து ஒரு பகுதி]



வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

உங்களுக்கு அதிகப்படி சக்தியை... துரிதமாக அளிக்கிறது!



உங்களுடைய சிறு பிள்ளைகளுக்கு அவர்களுடைய வாழ்நாளில் ஏற்படும் சங்கடங்களைச் சமாளிக்க உதவிபுரியுங்கள். "ருஜு"வான ஆரோக்கிய டானிக், வாட்டர்பரீஸ் காம்பவுண்டின் மூலம் அவர்களை தேக சௌக்யமுள்ளவர்களாக இருக்கச் செய்யுங்கள்.

தினசரி உட்கொண்டால், நாவிற்கினிய வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் கடுமையான வேலையிலிருந்தும், விளையாட்டிலிருந்தும் அடைந்த சிறுவர்களுடைய அதிக களைப்பை அகற்ற அதிகப்படிச் சக்தியை அளிக்கிறது. மேலும் அது அவர்களை இருமலிலிருந்தும் ஜலதோஷத்திலிருந்தும் காப்பாற்றுகிறது. அதிகப்படி ஆகாரமாக உட்கொள்ளப்படும் இம் மருந்து திடமான வளர்ச்சிக்குத் தேவையான ஜீவாதார போஷணையை அவர்களுக்கு அளிக்கிறது. தினசரி வேலைக்கும் விளையாட்டுக்கும் அது உரமான வீரியத்தை அளிக்கிறது.

வாட்டர்பரீஸ காம்பவுண்டிலிருந்து உங்களுடைய சிறு பிள்ளைகள் அதிகப்படிச் சக்தியைப் பெறுவர்... உங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் ஒரு ருஜு"வான ஆரோக்கிய டானிக் அதுவே!



ஆரோக்கியத்தைத் தரும் வாட்டர்பரீஸ் காம்பவுண்டை உங்களை சௌக்யமாகவைக்க உட்கொள்ளுங்கள்

NAS 268



இன்பக் கனவு

அநுத்தமா

கமலா அப்படியே பிரமித்துப் போய் நின்று விட்டாள். துக்கம் அவள் தொண்டையை அடைத்தது. பயத்தினால் அவள் கால்கள் நடுங்கின. நெற்றியில் வியர்வை துளித்து நிற்க, கண்கள் பீதியுடன் மிரள மிரள விழிக்க, பனிக்கட்டிகள் போன்ற விரல்கள் தடுமாறக் கைகூப்பி, வந்தவர்களை அழைத்தாள் அவள். அவள் கணவன் நவநீத கிருஷ்ணன் அவளை முறைத்துப் பார்த்தான், சமயம் கிடைத்தபோதெல்லாம்.

விருந்தினர்கள் வந்து உட்கார்ந்ததும் கமலா சிறு மேஜை ஒன்றை நகர்த்தப் போய் அது முக்கிய விருந்தினரான கோவிந்தன் கால்களில் விழுந்து விட்டது. கமலாவின் முகம் ரத்தமென மாறி விட்டது. விரல்களைக் கடித்துக் கொண்டாள் அவள். ஆயினும் உடனே நினைவு பெற்று, சமாளித்துக்கொள்ளப் போனாள். அருகே வந்த நவநீத கிருஷ்ணன் அவள் செவி மட்டும் கேட்கும் படியாகப் பல்லை நெறநெறவென்று கடித்து விட்டுக் 'கர்மம்!' என்ற பட்டத்தையும் அளித்தான். கமலா எப்படித்தான் சமையலறைக்கு ஓடினாளோ அவளுக்கே தெரியாது. பின்னால் கூடத்தில் எல்லோரும் ஏதோ பேசிச் சிரிப்பது காதில் நன்றாக விழுந்தது.

நவநீத கிருஷ்ணன் அவளைப் பின்தொடர்ந்து வந்தான். "மூடம்! உனக்கு என்ன ஒன்றும் சரியான நிலவரத்தில் இல்லை போலிருக்கிறது!" என்று அவன் கோபித்துக் கொண்டிருக்கையிலேயே, அன்று முக்கியமாக அழைக்கப்பட்டிருந்த கோவிந்தனின் மனைவி மஞ்சுளா தேவி அங்கு வந்து விட்டாள்.

"நீங்கள் அங்கே போய்க் கவனித்துக் கொள்ளுங்கள். நானும் அவளும் பலகாரங்களைக் கொண்டு வந்து விடுகிறோம்" என்றாள் மஞ்சுளா.

நவநீத கிருஷ்ணன் தன் முகத்தைப் புன்சிரிப்பாக மாற்றிக் கொண்டான். "பரவாயில்லை, நீங்கள் அங்கே போய் உட்காருங்கள். நன்றாக இருக்கிறது—நீங்கள் வேலை செய்வதாவது!" என்றான். அவன்.

"இல்லை, இல்லை. பெண்கள் செய்வது போல ஆண்கள் செய்ய முடியாது" என்று சொல்லி அவன் அவ்வறையை விட்டு வெளியேறுவதற்காகக் காத்திருப்பது போல் நின்றாள் மஞ்சுளா தேவி. நவநீதகிருஷ்ணன் வேறு வழியின்றி அவ்விடத்தை விட்டு வெளியே சென்றான்.

மஞ்சுளா தேவி கமலாவைப் பார்த்து இலேசாகச் சிரித்தாள்.

"மாமி, என்னை மன்னியுங்கள்" என்று கூறி முடிப்பதற்குள் பேச முடியாமல் அழ ஆரம்பித்து விட்டாள் கமலா.

"அசடு!" என்று செல்லமாகக் கடிந்து விட்டு அவளை அணைத்துக் கொண்டாள் மஞ்சுளாதேவி.

* * *

கமலா வாசலுக்கும் உள்ளுக்குமாகத் தவித்துக் கொண்டிருந்தாள். ஆள் ஒருவன் வந்து அவளிடம் சீட்டை நீட்டினான்.

"நீதானா......!" என்று அவள் ஆவலுடன் கேட்பதற்குள் அந்த ஆளை முந்திக் கொண்டான். "என்னை இந்தச் சீட்டை உங்களிடம் கொடுத்து விட்டு வரச் சொன்னார்கள்" என்று கூறிக் கொண்டே கடிதத்தை அவள் கையில் கொடுத்து விட்டு அவன் விடுவிடென்று நடந்து போய் விட்டான்.

கடிதத்தைப் பிரித்துப் படித்தாள் கமலா.

நான் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. சமையல்காரன் வேறு எங்கேயோ போய் விட்டானாம். நீயேதான் எல்லாம் செய்தாக வேண்டும். வேறு வழியே காணோம். எல்லோரையும் அழைத்து விட்டேன். கோவிந்தன் தம்பதிகளைத் தவிர இருபது பேர்கள் இருப்பார்கள்—எல்லோரும் ஆண் பிள்ளைகள். இருபது வயதுப் பெண்ணுக்கு இது ஒன்றும் பிரமாதம் என்று தோன்றவில்லை. இரண்டு தித்திப்பு, இரண்டு காரம் செய்தால் போதும். டீயும், காப்பியும் இருக்கட்டும். சில பேர் காப்பியைக் குடிப்பார்கள். சிலர் டீயைக் கேட்பார்கள். நன்றாக இருக்க வேண்டும். கவனமாகச் செய். நம் பிற்கால வாழ்க்கையே இன்றைய விருந்தில் தான் இருக்கிறது என்பது நினைவிருக்கட்டும். நவநீதம்

குறிப்பு :- உனக்குச் சிரமம் தானோ என்னவோ? வேறு வழியில்லை, பார்.

கமலா கடிதத்தை மீண்டும் படித்தாள். கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைப் புறங்கையால் துடைத்து விட்டு மறுபடியும் ஒரு முறை படித்தாள். அவளையும் மீறித் தன் கணவன் மீது ஆத்திரமாக வந்தது அவளுக்கு.

'இரண்டு காரம், இரண்டு தித்திப்பாம்! போதுமாம்! அதிலுள்ள சிரமம் என்ன என்று என்னமோ தெரியவில்லை,' என்று முணுமுணுத்துக் கொண்டே அவள் உள்ளே போனாள். கடிதத்தைக் கசக்கிக் கீழே எறிந்து விட்டுப் போனாள். அப்பொழுது கொஞ்சம் ஆத்திரம் அடங்கியது போலத் தோன்றியது.

'என்ன தித்திப்பு, என்ன காரம் செய்யலாம்?' என்று யோசித்துக் கொண்டே இருந்தாள் அவள். ஒன்றும் புரியவில்லை. கடிகாரத்தில் மணி ஏறிக் கொண்டே இருந்தது.

'சரி, மைசூர்ப்பாகு செய்வோம்' என்று எண்ணி அவள் ஆரம்பித்தாள்.

இருவருக்கு மட்டுமே செய்து பழக்கப்பட்ட அவள் இடைரென்று இருபத்தைந்து பேர்களுக்குச் செய்வதென்றால் திட்டம் தெரியாமல் தவித்தாள். நாழிகையாக, ஆக அவள் குழப்பமும் ஏறிக் கொண்டே போயிற்று. கடைசியில் ஒரு வகையும் தெரியாமல் அவள் அழ ஆரம்பித்து விட்டாள்.

எதிலும் அவரே !

ஒருமுறை சாரதாமணி தேவியாரின் புகைப்படம் ஒன்று ஐரோப்பிய கம்பெனியார் எடுத்தனர். அதைச் சாரதாமணி தேவியாரிடம் பார்வைக்குக் கொடுத்தேன். அதைச் சாரதாமணி தேவியார் தம் இரு கைகளாலும் வாங்கிக் கொண்டு, தலையைத் தொட்டு வணங்கி விட்டுப் பார்க்கலானார். இதைப் பார்த்தவுடன் சிரிப்பு வந்து விட்டது. மிகச் சிரமப்பட்டு அந்தச் சிரிப்பை அடக்கிக் கொண்டு, "தாயே இது யாருடைய புகைப்படம் ?" என்று கேட்டேன்.

"ஏன், என்னுடைய புகைப்படந்தான் !" என்று சின்னஞ்சிறு பெண் போல் பதில் கூறினார் சாரதாமணி. ஆயினும் என் சிரிப்பு அடங்கவில்லை. தேவியார் "ஏன் சிரிக்கிறாய்?" என்று என்னைக் கேட்டார்.

"தாயே, இது உங்களுடைய புகைப்படந்தான். இதற்குப் போய் வணங்குகிறீர்களே?" என்று சொல்லி விட்டு மீண்டும் சிரித்தேன்.

அன்னையார் என்னுடன் சேர்ந்து சிரித்துக் கொண்டே சொன்னார்: "ஆமாம், இதில் கூட பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் இருக்கத்தான் செய்கிறார்."

—ஒரு சிஷ்யர்

அழக் கூடாது என்றுதான் நினைத்தாள் அவள். ஆனாலும் எங்கோ அடிவயிற்றிலிருந்து துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. நேரமாகிறதே என்ற பயம் வேறு அவளை அலட்டியது. சிறு குழந்தை போல விக்கி அழலானாள்.

யாரோ காலடி ஓசை கேட்டு அவள் திரும்பினாள். ஒரு ஸ்திரீ கதவின் அருகில் நின்று கொண்டிருந்தாள். சுமார் நாற்பது வயது இருக்கும். சற்று பூசினாற் போன்ற சரீரம். மாநிறமாக இருந்தாள். தலையை இழுத்து முடித்திருந்தாள். நெற்றியில் பெரிய குங்குமம், செவிகளில் கெம்பு தோடுகள், இடுப்பில் பாக்குக் கலரில் பச்சைக் கரை போட்ட நூல் புடவை. மலிவாக ஐந்து ரூபாயில் கடைகளில் வந்திருப்பதாக யாரோ சொன்ன நினைவு வந்தது கமலாவுக்கு.

"யார் அது !" என்று வியப்புடன், மெதுவாகக் கேட்டாள் கமலா.

அந்தப் பெண்மணி சிரித்தாள். "ஏதாவது சகாயம் வேண்டுமா ! என்னால் முடிந்ததைச் செய்கிறேன்" என்றாள்.

பழைய காலத்தில் பக்தர்களின் நிலைமையைச் சமாளித்து அவர்களுக்கு உதவி செய்த தேவதைகளின் ஞாபகம் வந்தது கமலாவுக்கு. தன் உண்மையான அபல நிலைமையை அறிந்து தேவியே கடாட்சம் புரிகிறாளா என்று ஐயுற்றாள் கமலா, ஒரு கணம். அவ்வாறாக இருந்தால் அவளை வணங்க வேண்டுமே என்று சம்சயப்பட்டவாறே அவள் எழுந்து நிற்பதற்குள் அந்த அம்மாள் மீண்டும் வெற்றிலைக் காவி படிந்த பற்கள் தெரியச் சிரித்தாள். குலை நடுங்கிற்று கமலாவுக்கு.

"ஏனம்மா கஷ்டப்படுகிறாய்! நான் செய்கிறேன். இந்த அத்துவானக் காட்டில் குடும்பமில்லாமல் இருப்பவர்களுக்குத் தீபாவளி……"

"நீங்கள் யார் !"

"யாராக இருந்தால் என்ன !—சொல்" என்று கூறி விட்டு அந்த அம்மாள் கமலாவைத் தாண்டி உள்ளே வந்து அடுப்பைக் கவனிக்க ஆரம்பித்தாள். கமலா வேறு வழியின்றி அவளுக்கு உதவியாகச் சாமான்களை எடுத்துக் கொடுத்து ஒத்தாசை புரிந்தாள்.

மைசூர்ப்பாகு, பாதாம் ஹல்வா, ஓமப்பொடி யாவும் தயாராகி விட்டன, வடைக்கு உளுத்தம் பருப்பைக் களைந்து கொண்டு, ஆட்டுக் கல்லின் அருகில் அமர்ந்து கொண்டாள் அந்த அம்மாள். கமலா அவளைத் தள்ளியிருக்கச் சொல்லி விட்டுத் தானே அரைத்து எடுத்தாள்.

"இன்றைக்கு என்ன நடந்தது ! ஏன் அழுது கொண்டிருந்தாய் ! தீபாவளியன்றைக்கு அழுவார்களா ! கணவனுக்கும் உனக்கும் மனஸ்தாபமா!" என்று விசாரித்தாள் அந்த அம்மாள்.

கமலாவுக்கு அவள் கேள்வி இதயத்தைத் தொட்டு விட்டது. அவள் தன் கதையைச் சவிஸ்தாரமாக ஆரம்பித்து விட்டாள்.

"அதை ஏன் கேட்கிறீர்கள் ! என் எஜமானர் தான் வீட்டுக்குப் பெரிய பிள்ளை. இவருக்குக் கீழே மூன்று பெண்களும் இரண்டு தம்பிகளும் இருக்கிறார்கள். என் நாத்தனார் ஒருத்தி பிரசவித்திருக்கிறாள். அவளைக் கணவன் வீட்டுக்குக் கொண்டு விட வேண்டும். என் மாமனாருக்கு உடம்பு சரியாக இல்லை. படுக்கையில் இருக்கிறார். வீட்டில் பண முடை சொல்லி முடியாது. இங்கிருந்து அனுப்பும் பணத்தை வைத்துக் கொண்டு கஷ்ட ஜீவனம்தான் செய்கிறார்கள்.

"நாங்கள் இங்கே வந்து நான்கு வருஷமாகிறது. இந்தப் பொட்டல் காட்டில் இருந்து அவர் வேலையைக் கவனமாக நடத்தி வந்து நல்ல பெயர் வாங்கியதற்கும் அந்த வறுமைதான் காரணம். பெரிய எஜமானர் வந்திருக்கிறார் இப்பொழுது. அவர் தயை கூர்ந்து வேலையை உயர்த்தினால் எங்கள் கஷ்டம் கொஞ்சம் தளரும். இல்லா விட்டால் அதோ கதிதான்.

"இந்த அழகில் அந்த அதிகாரி ஒரு தினுசான பேர்வழியாம். அவர் மனிதனின் வேலைத் திறமை ஒன்றைப் பார்த்தே மேலே தூக்கிவிட மாட்டாராம். அவர் மனைவி ஒருத்தியாம். அவள் வந்து சொன்னால்தான் கொடுப்பாராம்.

"இந்த மனிதரில்லாத காட்டில் குடியும் குடித்தனமுமாக இருக்கும் நாங்கள் தானே வந்தவர்களுக்கு உபசரணை செய்ய வேண்டும் ! வந்தவர்களுக்குக் கம்பெனிச் செலவில் சமையல்காரன் வைத்துச் சமைத்துக் கொட்டியாயிற்று. இன்று மாலை இங்கே விருந்தாம் ! அந்தப் பரதேவதை வந்து எங்களை எடை போட்டுச் சொல்லித் தீர்ப்பு ஆக வேண்டுமாம் ! தலைவிதி, எனக்கோ ஒரு வகையும் தெரியவில்லை. சமையல்காரனை இங்கே வரச் சொல்லியிருந்தது, அவன் பட்டணத்துக்கு ஓடிவிட்டிருக்கிறான். அதனால்தான் நான் அழுதேன். கடன் வாங்கிக் கனவில் கூடக் காணாத சாமான்களைச் சேகரித்து, கடைசியில் என் கையிலாகாத் தனத்தினால் எங்கள் வாழ்வே கெட்டு விடுமோ என்று நினைத்து அழுதேன்…"

"அழுதால் காரியமாகுமா ! எழுந்திரு, அடுப்பைக் கவனி." கமலா அந்த அம்மாள் சொன்ன

படியெல்லாம் செய்தாள். எல்லா வேலைகளும் வெகு சீக்கிரத்தில் முடிந்து விட்டன.

"நான் போய் விட்டு வருகிறேன், அம்மா. நாழிகையாகிறது" என்று கூறிவிட்டுக் கமலாவின் தேவதை எழுந்து போய் விட்டாள்.

"மாமி, இந்தாருங்கள். யார் என்றே சொல்ல வில்லையே! உங்கள் வீட்டுக்குக் கொஞ்சம் பட்சண மாவது எடுத்துக் கொண்டு..."

"வருகிறவர்களைத் திருப்தி செய்."

"நீங்கள் ரூபாயாவது..."

"நீ ஆயிரம் கஷ்டப்பட்டுக் கொண்டு எனக்கு எவ்வளவு கொடுத்து விடுவாய்!" என்று வெடுக் கென்று கூறிவிட்டு அந்த அம்மாள் மடமட வென்று போய்விட்டாள்.

கமலா தன்னைச் சமாளித்துக் கொண்டு, காப்பி யும், டீயும் தயாரிக்கக் கிளம்பினாள்.

விருந்தினர்கள் வந்தார்கள். ஸ்ரீமதி மஞ்சுளா தேவி என்று வந்த பெண்மணி பகலில் தனக்குச் சகாயம் செய்ய வந்தவள்தான் என்று அறிந்ததும் வெலவெலத்துப் போய் விட்டது கமலாவுக்கு.

கண்களிலிருந்து பிரவாகமெடுத்த நீரைத் துடைத்துக் கொண்டும், மூக்கைச் சிந்திக் கொண் டும் ஆசுவாசப் படுத்தினாள் கமலா.

"நன்றாக அழுதாய்—இருபது வயதுப் பெண்! வேலையைப் பார்ப்பதை விட்டு விட்டு அழுதா ளாம்!" என்று மஞ்சுளா தேவி கடிந்து கொண்ட பிறகு தான் கமலா நிறுத்தினாள்.

முகத்தை அலம்பிப் பொட்டிட்டுக் கொண்டு கமலா எல்லோருக்கும் பரிமாறுவதில் முனைந்தாள்.

"மஞ்சு! இவர்களுக்கு அதைச் சொல்லிக் கொண்டிருந்தேன்..."

"எதை!" என்று கேட்டு விட்டு மஞ்சுளா தேவி தட்டுப் பலகாரத்தைக் கையில் ஏந்திய படியே முகத்தில் புன்சிரிப்புத் தவழ வந்து கண வனின் அருகில் ஒரு நாற்காலியில் அமர்ந்தாள்.

"புதிதாய்க் குடித்தனம் செய்தோமே — அப் பொழுது ஒரு நாள் நீ ஈயச் செம்புத் தயிரையும் என் மேலே கொட்டி விடவில்லை!" என்று கேட்டு விட்டுப் பலமாகச் சிரித்தார் கோவிந்தன்.


"இன்றைக்குக்கூட நினைவிருக்கிறது. ஈயச் செம்பு கையிலிருந்து வழுக்கி உங்கள் இலையில் விழுந்து விட்டது. வீடு, வாசல் எல்லாம் எச்சில். வீட்டில் உள்ள மற்றவர்களுக்கும் அன்று மோர் இல்லை. எனக்கு அவமானம் தலைதூக்க முடிய வில்லை" என்று கூறிவிட்டு மஞ்சுளா அம்மாளும் சேர்ந்து சிரித்தாள்.

நவநீதகிருஷ்ணன் மனைவியின் பக்கம் பார்த் தான். கமலா முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். இன்னமும் அவளுக்கு நடுக்கம் நீங்கவில்லை. கணவனின் நோக்கைக் கண்டால் தனக்குள்ள தைரியம் போய்விடும் என்று எண் ணியவள் போல் அவள் முகத்தை வேறு பக்க மாகவே வைத்துக் கொண்டிருந்தாள்.

எல்லோரும் உண்டு, பேசி, சிரித்து விட்டுத் தத்தம் வீடுகளுக்குப் போய் விட்டனர். நவநீத கிருஷ்ணனும் அவர்களோடு போய் விட்டு வெகு நேரம் கழித்துத்தான் திரும்பி வந்தான்.

கமலா தன் வேலைகள் எல்லாம் முடிந்து வாச லில் காத்துக் கொண்டிருந்தாள். அவளைப் பார்க் காதது போல வில்லிலிருந்து பாய்ந்த அம்பென உள்ளே பாய்ந்தான் நவநீதகிருஷ்ணன். கமலா ஒன்றும் புரியாமல் அவன் பின்னால் உள்ளே வந்தாள்.

"நான் என்ன மூட்டிக் கொண்டு என்ன! கடைசியில் படுதோல்வி! அதற்கெல்லாம்........ அதற்கெல்லாம் கொடுத்து வைத்திருக்க வேண் டும்" என்று நவநீதகிருஷ்ணன் கூடத்துச் சுவ



தியாக சிகரம்

ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸரைத் தியாகமலை என்று வைத்துக் கொண்டால், சாரதாமணி தேவியாரை அந்தத் தியாகத்தின் சிகரம் என்று கொள்ள வேண்டும்.

யாரோ ஒரு அன்பர் பகவான் ராமகிருஷ்ணரின் முதுமைப் பருவத்தை உத்தேசித்துப் பத்தாயிரம் ரூபாய் நிதி உதவி செய்ய முன் வந்தார். ராமகிருஷ்ணர் நிதி உதவியை மறுத்து விட்டு, வேண்டுமானால் நிதிவிஷயமாகச் சாரதாமணி தேவியாரைக் கேட்டுப் பார்க்கும்படி சொல்லியனுப்பினார். ராமகிருஷ்ணர் என்ன சொன்னார் என்பதையறிந்த அன்னையார், "நான் இந்தப் பணத்தை எடுத்துக் கொள்வது, ஸ்ரீ ராமகிருஷ்ணர் இந்த நிதி உதவியை அங்கீகரிப்பதாகி விடும். அதனால் வேண்டாம்" என்று மறுத்துக் கூறி விட்டார்!

ரைப் பார்த்து உரக்க உரைத்து விட்டு, விம்மி எழுந்த மார்பை இரு கைகளாலும் தட்டிக் கொண்டான். கமலா ஒன்றும் பேசவில்லை. அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

"வகையில்லை. துப்பில்லை. அதைக் காட்டிக் கொள்கிறோமே என்ற அவமானமில்லை. சேச்சே!"

"வகையில்லை என்ற பிறகு மற்றவை என்ன!" என்றாள் கமலா துக்கம் தொண்டையை அடைக்க.

'சீ, அழாதே! என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளாதே. ஒரு மனிதனுக்கு உயிர் போய்க் கொண்டு இருக்கிறது. இருபது பேர்களுக்கு இரண்டு கடலை மாவை எண்ணெயில் வறுத்துக் கொடுக்க வகையில்லை. துப்புக் கெட்டவன் பேச வந்து விட்டான்!"

''என்னை, என்ன செய்யச் சொல்லுகிறீர்களோ, எனக்குத் தெரியவில்லை."

"செய்யச் சொன்னார்கள் பானையையும் சட்டியையும்! வந்த பெரிய மனிதன் காலில் மேஜையைப் போட்டு......நாம் மட்டும் நகரத்தில் தலைமை ஆபீசில் வேலையாக இருந்தோம் என்று வைத்துக் கொள்—இந்த மனிதனைக் கண்ணால் கூடக் காண முடியாது. அந்த அம்மாளை முதலில் நினைவால் கூட நினைக்க முடியாது. அவர்களே நம் வீடேறி வந்தால் எல்லாம் குழப்பமடித்து, மரியாதையில்லாமல் மனிதன் மீது அடக்கமற்று மேஜையைப் போட்டு, வந்தவர்களை வெறித்துப் பார்த்து, பிறகு கண்ணீர் விட்டு, முகம் சிவந்து......ஐயோ, இதைவிட அவமானம் எனக்கென்ன வேண்டும்!" என்று ஓரே அடியாகக் கத்திவிட்டுத் தலைமேல் கையை வைத்துக் கொண்டு சோர்ந்து போய் உட்கார்ந்தான் கணவன்.

திடீரென்று புயற்காற்றில் அகப்பட்ட இளங் கொடி போல் நடுங்கினாள் கமலா.

"யாராவது ஏதாவது சொன்னார்களா!" என்று மெதுவாகக் கேட்டான் அவன்.

"சேகரன்தான் என்னிடம் மட்டும் அந்தரங்கமாகச் சொன்னான். 'காரியம் கெட்டு விட்டதேடா!' என்றான். போதாதா!"

"நடந்தது நடந்து விட்டது. கெட்டது இனியும் கெடப் போவதில்லை. நான் எனக்கு நடந்ததையும் சொல்லி விடுகிறேன். பிறகு நீங்கள் என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்க நான் தயார்" என்று ஆரம்பித்து, அழுகையை அடக்கி நடந்ததை யனைத்தும் மெதுவாகச் சொல்லி முடித்தாள் கமலா.

அதைக் கேட்டு நவநீதகிருஷ்ணன் அப்படியே கல்லாகச் சமைந்து விட்டான். மனைவியைக் கோபிக்கக்கூட அவனுக்குத் தோன்றவில்லை. "விட்டுத் தள்ளு கமலா. நம்மையும் மீறி விதி வேலை செய்கிறது" என்றுரைத்துவிட்டு அவன் எழுந்து மனைவியின் அருகில் சென்று அவள் கன்னத்தைத் தடவினான்.

கமலா தன் முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். அவள் இதயம் இரும்புக் கட்டி போலக் கனத்து இறுகியது.

அவர்கள் இதே நிலையில் அமர்ந்திருந்தார்கள். கூடத்தில் காலடி ஓசை கேட்டு நிமிர்ந்து பார்த்த போது கோவிந்தன் தம்பதிகள் நிற்பதைக் கண்டனர். ஆனால் இருவருக்கும் பேசத் தெரியவில்லை.

"என்ன, அப்படிக் கண் கொட்டாமல் பார்க்கிறீர்கள்! நாங்கள் அள்ளி அள்ளிப் பருகும்படியான அழகு வாய்ந்தவர்களாகவா இருக்கிறோம்!" என்று கேட்டுவிட்டுக் கலகலவென்று சிரித்தாள் மஞ்சுளா தேவி.

"உட்காருங்கள்...இந்த இருட்டில்!..." என்று நவநீதகிருஷ்ணன் மெதுவாக ஆரம்பித்தான்.

கமலா ஒரு நாற்காலியை இழுக்கப் போனாள்.

"கால்! கால் பத்திரம்!" என்றார் கோவிந்தன். கமலா நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

"உங்கள் காலில் மட்டும் அடிபட, என் காலில் மட்டும் அடிபடாமல் இருப்பானேன் என்று அவளுக்கு எண்ணம் போலும்!" என்று கேட்டு விட்டுச் சிரித்தாள் மஞ்சுளா தேவி.

நவநீதகிருஷ்ணனும் கமலாவும் பேசாமல் இருக்கவே கோவிந்தன் பேச ஆரம்பித்தார். "நவநீதா, இந்தா, இந்த நாற்காலியில் உட்கார்" என்றார்.

நவநீத கிருஷ்ணன் தயக்கத்துடன் அமர்ந்தான்,

"நீயும் இங்கே வா" என்று கமலாவைத் தன் அருகில் அழைத்துச் சோபாவில் அமர்த்தினாள் மஞ்சுளா தேவி. கமலா பின்னிட்ட கால் கைகளுடன் சொன்னபடி செய்தாள்.

"பழைய குமாஸ்தா, மேஸ்திரி மனோபாவத்தை விட்டுவிட வேண்டும். ஒரு பெரிய ஆலைக்கு முக்கிய காரியஸ்தனாக உன்னை நியமித்த பிறகு இன்னமும் நீ குழைந்து கொண்டும் தவித்துக் கொண்டும் பேசினால் அழகாக இராது" என்று கூறினார் கோவிந்தன்.

மஞ்சுளா தேவி கமலாவின் நனைந்த கரத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்டு வருடினாள்.

கோவிந்தன் மேலும் சொன்னார். "ஆமாம், நவநீதா, மஞ்சுளா எல்லாம் விவரமாகச் சொன்னாள். வேலையிலும் ஊக்கமாக இருந்திருக்கிறாய், குணத்திலும் சிலாக்கியமாகவே படுகிறது. தேவையும் உனக்கு அதிகம் என்று அப்பொழுது முதல் மஞ்சுளா சொல்லிக் கொண்டிருக்கிறாள்."

"மாமி!" என்று ஆரம்பித்தாள் கமலா; அதற்கு மேல் பேச முடியாமல் தொண்டையை அடைத்தது அவளுக்கு.

நவநீதகிருஷ்ணன் எழுந்து கோவிந்தனை வணங்கினான். உணர்ச்சி உருண்டையாக அவன் தொண்


சூப்பர்
இந்தியா
டயர்களையே
கேட்டு
வாங்குங்கள்
"டயர்களில் மிகச் சிறந்தவை"

டையில் மேலும் மேலும் பாய்வது அருகில் இருப்பவர்களுக்கு நன்றாய்த் தெரிந்தது.

"உட்கார், உட்கார். அதெல்லாம் வேண்டாம். உன் குடும்பக் கவலைகள் தீர்ந்து நீங்கள் சௌக்கியமாக இருப்பதை எங்களுக்குத் தெரியப்படுத்து. அதுதான் முக்கியம். உனக்கு மிகவும் பொறுப்பான பதவி வந்து விட்டது. கீழ் இருப்பவர்களைச் சரியாகக் கவனித்துக் கொள்" என்று சொன்னார் கோவிந்தன்.

"அது விஷயத்தில் தங்களைவிட குரு வேறு இல்லை, சார்" என்றான் நவநீத கிருஷ்ணன்.

"அம்மா, நீயும் மஞ்சுளாவைப் போல அவர்கள் வீடுகளுக்குப் போய்ச் சமையல் வேலை செய்து விட்டு அவர்களைத் திணற வைத்துக் கொண்டிரு. அவர்கள் உங்கள் காலில் நாற்காலிகளைப் போடட்டும்!" என்றார் கோவிந்தன், கமலாவைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே.

கமலா நாணத்துடன் தலை குனிந்தாள். நன்றி குனிந்த தலையை உடனே நிமிர்த்தியது. "இன்றைய தினத்தை நான் ஒரு நாளும் மறக்கவே மாட்டேன்" என்றாள் அவள்.

"கமலா, அதிருக்கட்டும். எங்கே எனக்குச் சேரவேண்டிய கூலி!" என்று கேட்டாள் மஞ்சுளா தேவி.

"மனிதர்களுக்குத் தான் கூலி கொடுப்பது வழக்கம். கடவுளுக்குக் கொடுப்பது இல்லையே!" என்றாள் கமலா, நீர் மல்கிய கண்களுடன்.

*

"எத்தனை அருமையான கதை!" என்று அதிசயித்தாள் மீனாக்ஷி.

"கதை இல்லை அது" என்றாள். அவளுடன் பேசிக் கொண்டிருந்த பெரிய அம்மாள்.

"அப்படியானால் அந்தக் கமலா......! தங்களுக்குப் பெயர் வேறு ஏதோ அல்லவா!" என்று கேட்டாள் மீனாக்ஷி.

"அந்தக் கமலா நானேதான். எவ்வளவு மதியற்று இருந்திருக்கிறேன், பார்! வீடு தேடி வரவே அந்த அம்மாளின் மகிமை எனக்குத் தெரியவில்லை. அவளிடமே வாய் அடக்கமின்றி ஏதோ சொல்லி விட்டேன். இன்றும் எனக்கு அவமானம் தாங்கவில்லை."

"தெரியாமல் தானே செய்தீர்கள்! மேலும் விளைவும் சௌகரியமாகவே ஏற்பட்டு விட்டது. தவிர, தங்களுடைய கஷ்ட நிலைமையை......"

"ஆயிரம் கஷ்டம் இருந்தாலும் வார்த்தைகளைக் கொட்டிவிடக் கூடாது, அம்மா. அன்று மஞ்சுளா தேவி மட்டும் நல்லதைச் செய்யாமல் வேறு விதமாகச் செய்து விட்டிருந்தால் எங்கள் கதி என்னவாகியிருக்கும் சொல். அப்படிச் செய்திருந்தால் கூட என் மனம் நிம்மதியுற்றிருக்கும்."

"நான் வீட்டுக்குப் போய் விட்டு வருகிறேன். போகிற வழியில் சேதுராமன் தாயாரைப் பார்த்து விட்டுப் போக வேண்டும்."

மீனாக்ஷி போய் விட்டாள்.

"நீ எதற்காக அந்தப் பழைய கதையைக் கிளறி விட்டுக் கொண்டாய், கமலா!" என்ற ஒரு குரலைக் கேட்டு அந்த ஸ்திரீ திரும்பினாள்.

அவள் கணவன் நவநீதகிருஷ்ணன் அருகே நின்று கொண்டிருந்தார்.

"இன்று காலை மீனாக்ஷி வீட்டில் குழந்தைக்கு ஆயுஷ்ஹோமம் செய்தார்கள். அதற்கு டைப்பிஸ்டு சேதுராமனின் தாயார் இந்தப் பெண்ணுக்கு ஒத்தாசையாக வேலை செய்திருக்கிறாள். தான் ஹெட்கிளார்க் மனைவி என்ற ஹோதாவில் மீனாக்ஷி அந்த அம்மாளை விரட்டு விரட்டு என்று விரட்டி இருக்கிறாள். அந்த அம்மாள் இங்கே டைபிஸ்டு தாயார்தான்; அவர்கள் வீட்டில் அவள் பெரிய மிராசுதாரின் மனைவி!"

"அந்த அம்மாள் ஏதாவது தவறாக நினைத்துக் கொண்டுவிட்டாளா!"

"இல்லை, அவள் பண்பு மிக்கவள். எனக்கு எப்படியோ தெரிய வந்தது. மீனாக்ஷியைக் கூப்பிட்டு அனுப்பினேன். நேராகப் புத்தி சொன்னால் மனசில் ஏறாது. கணவனிடம் தாறுமாறாக உளறுவாள்; அந்த அம்மாள் என்னிடம் கோள் சொன்னதாக நினைப்பாள். அதனால் வீண் மனஸ்தாபம், தகராறு எல்லாம் வரும்" என்றாள் கமலா.

"நல்ல வேலை செய்தாய்!"

"பின்னே என்ன செய்வது! நம் குழந்தைகளுக்குள்ளேயே விளக்கெண்ணெய் கொடுப்பதானால் மணிக்குப் பாலில் கொடுக்க வேண்டியிருக்கிறது. மீனுவுக்குக் காப்பியில், கணேசுக்குக் கஷாயத்தில் கொடுக்கிறோம். அவரவர்கள் உடல், அவர்கள் ருசிபார்த்துத்தானே செய்யவேண்டியிருக்கிறது!"

"இந்தப் பெண்ணுக்குக் கதையில் ருசியாக்கும்" என்றார் அவர். கமலா சிரித்தாள்.

"விளக்கெண்ணெயின் ருசி தெரியாமலே இருக்குமா உன் கதையில்!" என்று புன்சிரிப்புடன் கேட்டார் நவநீதகிருஷ்ணன்.

"அது தான் உறைத்து விட்டதே—மீனாக்ஷி தான் முதலில் சேதுராமன் வீட்டுக்குப் போகப் போகிறேன் என்றாளே!"

"மஞ்சுளா தேவியை நீ அப்படியா விரட்டினாய்!" என்றார் நவநீதகிருஷ்ணன்.

"விரட்டுவதற்கு மனசில் தெம்பு இல்லை. இருந்திருந்தால் என்ன செய்திருப்பேனோ! அன்று நல்ல பாடம் கற்றுக் கொண்டேன். வெளித் தோற்றத்திலிருந்து, தாற்காலிகமாகக் காட்சி அளிக்கும் கோலத்திலிருந்து மனிதர்களை மதிப்பிடக் கூடாது என்று அன்று தீர்மானம் செய்து கொண்டேன். அதுதான் என்னை இதுவரை காப்பாற்றி யிருக்கிறது. அந்த அம்மாள் இருந்து எனக்குத் தெய்வமாக இருந்ததுபோல், இறந்தும் அவள்தான் என் தெய்வம்" என்றாள் கமலா.

அப்பொழுது தெருவில் குழந்தைகள் கொளுத்தும் மத்தாப்பு ஒளி ஒரு கணம் வீடு முழுவதும் நிரம்பியது.

"மஞ்சுளா தேவி எப்பொழுதும் பிரகாசிக்கும் ஒரு வர்ண மத்தாப்பு. அவள் சென்ற இடமெல்லாம் ஒளி பரவியதே!" என்றார் நவநீதகிருஷ்ணன்.

தெருவில் பட்சண வண்டி ஒன்றில் மணி கிணுகிணுத்துக் கொண்டே சென்றது. மஞ்சுளா தேவியின் சிரிப்பொலியை நினைவூட்டியது அது.

உலகம் உங்களுடையது!

"உள்ளத்திலே அமைதி உண்டாக வேண்டுமானால் மற்றவர்களிடம் குற்றம் குறை காணாதீர்கள்; உங்கள் குற்றங்களைக் காண்பது தான் மேல். அகில உலகையும் உங்களுடையதாக ஆக்கிக் கொள்ளக் கற்றுக் கொள்ளுங்கள்.- குழந்தைகாள், இங்கு அந்நியர் யாருமே இல்லை. இந்த உலகம் முழுவதும் உங்களுடையதுதான்."

—அன்னை சாரதாதேவி.


டிசம்பர்
9 உ
முதல்
சென்னை
சித்ரா
பிராட்வே
காமதேனு
பாரத்
லக்ஷ்மி (பெரம்பூர்)
மற்றும் தென்னாடெங்கும்...
கதை வசனம்
ஸ்ரீதர்
சரவணபவா & யூனிட்டி பிக்சர்ஸ்
எதிர்பாராதது
ஸ்டுடியோ
நெப்ட்யூன்
டைரக்ஷன்
CH. நாராயணமூர்த்தி



29. இருளில் தோன்றிய உருவம்

அன்றும் விஜயலக்ஷ்மி தினம் போல் வெளியே உலாவப் போவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தாள். அப்பொழுது ஜகதீஷ் அவள் வீட்டு வாசலைத் தாண்டி வெகு வேகமாக எங்கோ வெளியே போய்க் கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் இனம் தெரியாததொரு இன்ப உணர்ச்சி விஜயலக்ஷ்மியை உந்தித் தள்ளியது. எனவே, அவசரம் அவசரமாக வெளியே வந்து மோட்டாரில் ஏறி உட்கார்ந்து கொண்டு, தன் டிரைவருக்கும் அவனைப் பின் தொடருமாறு உத்தரவிட்டாள். கார் கனவேகமாகப் புறப்பட்டு அவன் அருகில் போய் நின்றது. விஜயலக்ஷ்மி அவனைத் தன்னுடன் காரில் வருமாறு அழைத்தாள். ஜகதீஷும் சீக்கிரமாக எங்கேயாவது ஓடினால் சரியென்று எண்ணிக் கொண்டிருந்தான். அதனால் விஜயலக்ஷ்மியின் அழைப்பை மறுமொழி யொன்றும் சொல்லாமல் ஏற்றுக் கொண்டான்.

விஜயலக்ஷ்மியின் திருப்தி காணாத இன்ப வேதனைக்கு ஒரு பற்றுக் கோடு கிடைத்து விட்டது. தனக்கு இன்பம் தரக்கூடியவன் தன் பக்கத்தில் அமர்ந்திருக்கிறான் என்ற எண்ணம் எழவே, அவள் மகிழ்ச்சி வெறியில் மெய் சிலிர்த்தாள். இன்பம் காண வேண்டும் என்ற எண்ணம் காட்டாற்று வெள்ளமாக அவள் இருதயத்தில் கரை புரண்டு ஓடத் தொடங்கியது; கட்டுத் தறித்துக்கொண்ட கன்றாகத் துள்ளித் திரியத் தொடங்கியது. ரசிக உள்ளம் படைத்தவர்களும் ரச சாஸ்திரத்தில் தேர்ந்த பண்டிதர்களும் ரசப்பெருக்கைப் பற்றிப் பற்பல ஆராய்ச்சிகள் நிகழ்த்தியே ரச சாஸ்திரங்களை இயற்றியிருக்கின்றனர். பிறன் மனைவி, தன் மனைவி, பொது மகள் போன்ற பாகுபாடுகளைச் செய்யவும் அவர்கள் மறக்கவில்லை. ஏனெனில் அவற்றின் மூலமாகத்தானே மனிதத் தன்மையின் பெருமையைத் தெரிந்து கொள்ள முடிகிறது! ரசப்பெருக்கு என்பது எந்தக் குறிப்பிட்ட அல்லது குறிப்பிடப்படாத பாத்திரங்களிடத்திலும் ஏற்படக் கூடும். அதற்கு இங்குதான் ஏற்பட வேண்டும், இங்கு ஏற்படக் கூடாது என்ற வித்தியாச உணர்ச்சி கிடையாது. ஆனால் மனிதத் தன்மையைப் பிரதிபலிக்கச் செய்யும் ரசம் பிரேமை ஆகியவற்றின் உண்மை நிலைமை எதுவாக இருக்கக் கூடும்? இதுதானே பெருங் கேள்வி?

அவர்கள் ஆற்றங்கரையை அடைந்த பொழுது சூர்யாஸ்தமனம் ஆகிக் கொண்டிருந்தது. ஜகதீஷும் விஜயலக்ஷ்மியும் காரை விட்டுக் கீழே இறங்கினார்கள். அப்பொழுது ஆதவன் இந்தப் பூமண்டலத்தின் மற்றொரு பாதிக்குப் பிரகாசம் அளிக்க வேண்டித் தன் ஒளிக் கதிர்களைச் சுருட்டி எடுத்துக் கொண்டு மலை வாயில் இறங்கிக் கொண்டிருந்தான். வானத்தின் மேல் திசையில் நீந்திக் கொண்டிருந்த மேகக் கூட்டங்கள் மாலைக் கதிரவனின் மஞ்சள் நிறக் கிரணங்கள் பட்டுப் பகட்டான பீதாம்பரத்தைப்போல் காட்சி அளித்துக் கொண்டிருந்தன. அவற்றின் சாயை நதியின் நீர்ப்பரப்பில் விழுந்து நீருக்குப் பொன்னிற மேற்றிக் கொண்டிருந்தது. பல நாட்கள் கழித்துக் காதலியைச் சந்திக்கும் காதலனைப் போல் காற்று நதியின் நீர்ப்பரப்பில் கனஜோராக வீசி, மலரை மொய்க்கும் வண்டாக வளைய வளைய வந்துகொண்டிருந்தது. ரசிக உள்ளம் படைத்த காதலனின் காதல் சேஷ்டைகளைக் கண்டு மகிழ்ச்சியுறும் காதலியைப் போல் ஆறும் அந்தக் காற்றுக் கேற்றவாறு ஆடி அலைகளை எழுப்பித் தன் ஆனந்தத்தைத் தெரிவித்துக் கொண்டிருந்தது. கரையில் உள்ள மரஞ் செடி கொடிகளும் மனத்தைக் கிளுகிளுக்கச் செய்யும் மனோன்மத்தமான அந்தச் சூழ்நிலையை ஆமோதிப்பவை போல், இருள் கவ்வும் இரவைச் சிறிதும் பொருட்படுத்தாமல் ஹோ வென்ற பேரிரைச்சலுடன் ஆனந்தமாக அசைந்தாடிக் கொண்டிருந்தன.

நீர்ப் பெருக்கை நெருங்குவதற்கு முன்னால் குன்றுகளுக் கொப்பான அநேக மணல் திட்டுகளை ஏறி இறங்கிக் கடந்தாக வேண்டும். ஒரு திட்டிலிருந்து இறங்கிக் கொண்டிருக்கும்பொழுது விஜயலக்ஷ்மியின் கால்கள் கொஞ்சம் வழுக்கி விட்டன. சட்டென்று அவள் அருகில் வந்து கொண்டிருந்த ஜகதீஷின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

கீழே விழாமல் தன்னைச் சமாளித்துக் கொண்ட பின்னரும் அவள், தான் பிடித்திருந்த ஜகதீஷின் கரத்தை விடவில்லை. சமதளமான பூமி வந்ததும் அவள் தன் கையில் இருந்த ஒரு வளையலைச் சுட்டிக் காட்டி, "ஏன் ஜகதீஷ்! இந்த வளையலைப் பார்த்தீர்களா? இது எப்படி இருக்கிறது?" என்று கேட்டாள்.

"வெகு நன்றாயிருக்கிறது!"

"பார்க்காமலே புகழாதீர்கள். இது உங்களுக்குப் பிடித்திருக்கிறதா, பார்த்துச் சொல்லுங்கள்!"

"நான் பார்த்த பின்தான் சொல்கிறேன். எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது!" என்றான் ஜகதீஷ்.

"அப்படியானால் இந்த வளையலைக் கோகிலாவுக்குக் கொண்டு போய்க் கொடுங்கள்! நான் இதை உங்களுக்கு அன்பளிப்பாகத் தந்துவிடுகிறேன்!" என்றாள் விஜயலக்ஷ்மி.

அதைச் சொன்னவள் அவன் பதிலுக்குக் கூடக் காத்திராமல் அந்த வைர வளையலைத் தன் கரத்திலிருந்து கழற்றத் தொடங்கினாள்.

"வேண்டாம், வேண்டாம்! நீங்கள் என்னதான் அன்பளிப்பாகக் கொடுத்தாலும் நான் வாங்கிக் கொள்ள மாட்டேன். அவளுக்கு வளையல் வேண்டுமென்றால் நானே வாங்கிக் கொடுத்துக் கொள்கிறேன்!" என்றான் ஜகதீஷ்.

"அது இருக்கட்டும். முதலில் இதோ பாருங்கள்! கோகிலாவின் வளையலை நான் போட்டுக் கொண்டிருக்கிறேன். அப்படியிருக்கும் பொழுது என் வளையலை அவள் போட்டுக் கொள்ளக் கூடாதா?" என்று கேட்ட விஜயலக்ஷ்மி தன் கையிலிருந்த வேறு ஒரு சாதாரண வளையலைக் காட்டி ஜகதீஷின் கவனம் முழுவதையும் தன்னிடம் திருப்ப முயன்றாள்.

அந்தச் சாதாரண வளையல் கோகிலாவினுடையது என்பதை ஜகதீஷ் பார்த்த மாத்திரத்திலேயே புரிந்து கொண்டான். பணம் தேவைப்பட்ட பொழுது கோகிலா அந்த வளையலை விஜயலக்ஷ்மியிடம் விற்றிருக்கக்கூடும் என்பதையும் அவன் அதே சமயத்தில் ஊகித்து உணர்ந்து கொண்டான். ஏனெனில் நோய் வாய்ப்பட்டுப் படுத்த பின் அவன் அந்த வளையலைக் கோகிலாவின் கையில் காணவில்லை. அவள் கையை வெறுங் கண்ணாடி வளையல்கள் மட்டும் அலங்கரித்ததையே தான் அவன் பார்த்திருந்தான்.

"ஆமாம். இது உங்களிடம் எப்படி வந்தது?"—காரணம் தெரிந்திருந்தும் தெரியாதவனைப் போல் ஜகதீஷ் அவளைக் கேட்டான்.


"எனக்கு இதன் வேலைப்பாடு மிகவும் பிடித்திருந்தது. அதனால் இதைக் கோகிலாவிடமிருந்து கேட்டு வாங்கிப் போட்டுக் கொண்டேன்!"—விஜயலக்ஷ்மி பாதி பொய்யும் பாதி மெய்யுமாகக் கலந்து கூறினாள். ஆனால் அதன் வேலைப் பாட்டில் மயங்கிப் போகக்கூடிய அளவுக்கு அந்த வளையல் ஒன்றும் அவ்வளவு பிரமாதமாக இல்லை. ஆனால் கோகிலாவின் கையை அலங்கரித்ததனால் ஜகதீஷின் அன்பு நிறைந்த கர ஸ்பரிசம் பெறும் பாக்கியம் அந்த வளையலுக்கும் பல தடவைகள் கிடைத்திருக்கக் கூடும் என்ற எண்ணம்தான் விஜயலக்ஷ்மியின் மனத்திலே அந்த வளையலுக்கு விலை மதிக்க முடியாத மதிப்பை அளித்திருந்தது. அதனால் கோகிலா அந்த வளையலைத் தன்னிடம் கொண்டு வந்து அடகு வைத்த பொழுது, அதை அணிந்து கொள்ளும் அனுமதியையும் விஜயலக்ஷ்மி கோகிலாவிடம் பெற்றுக் கொண்டாள்.

ஆகா! இந்த மானிட இருதயம்தான் எத்தனை விசித்திரமானது! இதன் விசித்திரத்தைச் சரியாக விளக்கிக் கூற முடிகிறதா?

இருவரும் ஆற்றங்கரையில் உள்ள உயரமானதோர் இடத்தை அடைந்தனர். சுற்றுமுற்றும் ஒரு முறை பார்த்த விஜயலக்ஷ்மி, "இங்கேயே உட்காரலாமே!" என்றாள்.

இருவரும் சௌகரியமாகக் கால்களைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் விஜயலக்ஷ்மி ஆயாசம் கொண்டவளைப் போல் சோம்பல் முறித்து விட்டு ஜகதீஷின் மடியில் தலையை வைத்துப் படுத்தாள்.

ஜகதீஷ் சாதாரணச் சம்பவங்களைக் கண்டு வியப்புறுகிறவன் இல்லை. ஆனால் விஜயலக்ஷ்மியின் அந்தச் செய்கை அவனுக்கு அசாத்திய வியப்பை அளித்தது. 'உடனே ஓடி விடு!' என்று சொல்லி ஒரு கடிதம் வந்ததே, அதைக் காட்டிலும் பன் மடங்கு வியப்பில் ஆழ்த்தியது. இருந்தாலும் அவன் விஜய லக்ஷ்மியின் தலையைத் தன் மடியிலிருந்து அகற்ற



வில்லை; தூக்கி அப்பால் வைக்கவில்லை. காரணம் என்ன? தீய நோக்கமா? இல்லை. பின்னே? தன் தூய நடத்தையைப் பறைசாற்றிக் கொள்ளும் பேரகந்தை இருக்கிறதே, அது தீய நடத்தையைக் காட்டிலும் தீயது, பாவம் தோய்ந்தது என்பது தான். பாவி ஒருவனுக்கெதிரே தன் புண்ணியத்தின் பிரதாபத்தைப் பற்றிப் பன்னிப் பன்னி ஒருவன் பேசினால் எப்படியிருக்கும்? மகா ஏழையான தன் நண்பனிடம் மிகப் பணக்காரனான ஒருவன் தன் பொக்கிஷத்தை நிமிஷத்துக் கொரு தடவை திறந்து காட்டி அவன் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டால் எப்படியிருக்கும்? இதைக் காட்டிலும் இந்த உலகத்தில் தாழ்ந்த செயல், இழிவான செயல் வேறு ஏதாவது இருக்க முடியுமா? உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு என்று கூறுகிறார்களே! அத்தகைய உயர்ந்தோர் வாழும் இந்த உலகத்தில் பாவியைத் தூற்றிப் பேசி இகழ்ந்து அவமதித்துத் தன்னைப் பரிசுத்தனாக வைத்துக் கொள்ளக் கூடிய ஒரு புண்ணியவான் பிறந்திருக்கிறான் என்று யாராவது விரலை மடக்கிக் கூற முடியுமா?

விஜயலக்ஷ்மியின் தலையைத் தன் மடியிலிருந்து அகற்றாமல் ஜகதீஷ் இருந்ததற்கு இந்தக் காரணத்தைத் தவிர வேறு காரணம் இருக்க நியாயம் இல்லை. அவன் மிகவும் மிருதுவான குரலில், "ஏன், அம்மா! உங்கள் உடம்புக்கு என்ன வந்து விட்டது? நான் வேண்டுமானால் மெதுவாக உங்களைக் கைப்பிடியாக அழைத்துப்போய்க் காரில் உட்கார வைத்து விடுகிறேன்!" என்றான்.

"என்னை ஒன்றும் கொண்டுபோய்க் காரில் உட்கார வைக்க வேண்டாம்! எனக்கு இந்த வாழ்க்கையே வெறுத்து விட்டது!" என்று அலுத்துக் கொண்டாள் விஜயலக்ஷ்மி.

"ஏன் அம்மா இப்படி அலுத்துக் கொள்கிறீர்கள்? உங்களுக்கு வாழ்க்கையில் அப்படி என்ன துயரம் சேர்ந்து விட்டது?" என்று கேட்டான் ஜகதீஷ்.

"துயரமா?"

இக்கேள்வியைக் கேட்டவாறு விஜயலக்ஷ்மி ஜகதீஷின் மடியில் வைத்திருந்த தன் தலையைத் தூக்கினாள். பிறகு அவன் விழிகளோடு தன் விழிகளைப் பொருத்தி, "துயரம்! துயரம் என்றால் என்ன? உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் பெண்ணாகப் பிறக்கவில்லையே! பெண்ணின் துயரத்தைப் பெண்ணாகப் பிறக்காத உங்களால் எப்படி உணர முடியும்? நீங்களோ ஆண் பிள்ளை. அதுவும் கோகிலாவைப் போன்ற குணவதியை மனைவியாகப் பெறும் பாக்கியம் பெற்ற ஆண் பிள்ளை. அதனால் நான் படும் துயரம் எங்கே உங்களுக்குத் தெரியப் போகிறது?" என்றாள்.

அவளுடைய உள்ளக் கருத்து ஜகதீஷுக்குச் சிறிது விளங்கியது. எத்தனை தான் கல்லு ஷ்திதியில் இருந்த பொழுதிலும் ஆண்—பெண் அடங்கலாக எல்லோருமே தங்கள் தங்கள் நிலையில் பெரும்பாலும் அதிருப்தியைத்தான் காண்கிறார்கள். இது ஜகதீஷுக்குத் தெரியாத உண்மை அல்ல. எனவே, அவளுக்கு ஆறுதல் அளிக்கும் நோக்கத்துடன், "நான் சுகமாயிருப்பதாக நீங்கள் கருதுகிறீர்களா?" என்று கேட்டான்.

"சந்தேகம் என்ன? நீங்கள் இன்ப வாழ்வு தான் வாழ்கிறீர்கள். நீங்கள் வாழ்கிறீர்களோ இல்லையோ, கோகிலா கட்டாயம் வாழ்கிறாள். நானும் யோசித்து யோசித்துப் பார்க்கிறேன். எனக்கு மட்டும் என் வாழ்வில் அம்மாதிரி இன்பம் ஏன் கிட்டவில்லை?"

விஜயலக்ஷ்மி மிகுந்த மனச் சுமையோடு அந்த வாக்கியத்தை முடித்தாள். அதைக் கேட்ட ஜகதீஷ் மனத்துள் சிரித்துக் கொண்டான். உண்மையாகவே கோகிலா தன்னைச் சுகசாலியாகத் தான் எண்ணியிருந்தாள். கோகிலாவின் கணவனான அவனுக்கு அது தெரியாத விஷயம் அல்ல.

"நீங்கள் இதன் காரணத்தைக் கோகிலாவிடம் கேட்டுப் பார்ப்பதுதானே?" என்றான் ஜகதீஷ்.

"கேட்டுப் பார்க்காமல் இருப்பேனா? நன்றாகக் கேட்டுப் பார்த்து விட்டேன்!"

"அப்படியா? அவளைப் போல் இன்ப வாழ்வு வாழ வேண்டும் என்றால் அவள் வாழ்க்கையையே பின்பற்றுங்களேன்!"

"அதைத்தானே இப்பொழுது செய்து கொண்டிருக்கிறேன்!" என்று சொன்ன விஜயலக்ஷ்மி கலகலவென்று நகைத்தாள். பிறகு, "அதற்காகவேதான் உங்களை என்னோடு இத்தனை தூரம் அழைத்தும் வந்திருக்கிறேன்!" என்றும் சொன்னாள்.

வாழ்க்கையில் அதிருப்தியையே கண்டு வரும் விஜயலக்ஷ்மிக்குத் தன்னிடம் அடங்காத அன்பு ஏற்பட்டு விட்டது என்பதை ஜகதீஷ் புரிந்து கொண்டான்.

ஜகதீஷைப் பேச்சில் பெரிய சாமர்த்தியசாலி என்று சொல்ல முடியாது. கோகிலாவிடம் பேச்சுக் கொடுக்கும் பொழுதெல்லாம் அவன் தோல்வியைத் தான் கண்டு வந்தான். காரணம் அவளிடம் தோற்பதில் அவனுக்கு அலாதி ஆனந்தம் கிட்டிவந்ததுதான். ஆனால் பிற மாதர்களுடன் சாதுரியம் தோய்ந்த இன்பப் பேச்சுக்கள் பேசுவதில் அவன் அதிகமாக ஈடுபட்டதும் இல்லை; ஈடுபட வேண்டும் என்ற ஆசையும் கொண்டதில்லை. அதனால் விஜயலக்ஷ்மியைப் போன்ற சாமர்த்தியக்காரியின் சுற்றி வளைத்து ஆளைக் குல்லாய் போடும் பேச்சுக்கு என்ன பதில் சொல்வது, எப்படிப் பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்தான். "ஆமாம், என்னை எதற்காக இத்தனை தூரம் அழைத்து வரவேண்டும்? எனக்குப் புரியவில்லையே!" என்று பச்சைப் பிள்ளையாகக் கேட்டு வைத்தான்.

சிற்சில சமயங்களில் ஆண்களின் அறியாமையும், அசட்டையும் கள்ளங் கபடமற்ற வெகுளித் தன்மையும் பெண்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதற்குப் பெரும்

V. 465

முதன்மை மற்றும் எப்பொழுதும் முதன்மை

மணிக்கு 394.19 மைல்கள் வேகத்தில் ஓடிய உலகில் மிக துரிதமான காரில் உபயோகிக்கப்பட்டது

மணிக்கு 178.49 மைல்கள் வேகத்தில் ஓடிய உலகில் மிக துரிதமான மோட்டார் போட்டு, 'ஸ்லோ-மோ-ஷன்' IV-ல் உபயோகிக்கப்பட்டது

1954-ல் நடந்த இந்தியானு போலிஸ் 500 மைல் தூர மோட்டார் பந்தயத்தில் முதலாவதாக வந்த பத்து கார்களிலும் உபயோகிக்கப்பட்டது இதுவே

அதிகமான மோட்டார்க்காரர்கள் உலகில் வேறெந்த மோட்டார் ஆயிலைக்காட்டிலும் இதையே உபயோகிக்கின்றனர்

உயரிய விஸ்காஸிடி இன்டெக்ஸ் இருப்பதால் என்ஜினின் எல்லா சீதோஷ்ண நிலைகளிலும் பரிபூரணமான லூப்ரிகேஷன் கொடுக்கிறது.

உயர்ந்த சுத்திகரிப்பு குணம் இருப்பதால் உங்கள் என்ஜினில் ஹானிகரமான கரிப்புகை படிய விடுவதில்லை.

திராவக எதிர்ப்பு குணத்தினுல் என்ஜினின் உலோக உறுப்புகள் அரிக்கப்படாமல் பாதுகாக்கப் படுகின்றன-மற்றும் பெட்ரோல் செலவு குறைகிறது.



போகவேண்டிய இடத்திற்கு தடங்கலின்றி போய்ச் சேர இத்தலை சிறந்த ஜதையை உபயோகியுங்கள்!

முச்செயல்-திறனுள்ள **மோபிலாயில்**

இரட்டை-சக்திவாய்ந்த **மோபில்காஸ்**

ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி

(கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

கருவிகளாக அமைந்து விடுகின்றன. காதலன் கண நேரத்துக்குத் தன்னை ஒரு நிலையற்ற ஜடத் தன்மைக்குத் தெரிந்தோ தெரியாமலோ உள்ளாக்கிக் கொண்டால் கூடக் காதலியின் உள்ளத்தில் காதல் வெள்ளம் கரை புரண்டு ஓடத் தொடங்கி விடுகிறது. பெண்ணின் அந்தப் பிரேமைப் பெருக்கில் வாத்ஸல்யம் எத்தனை பெரும் பங்கு கொண்டிருக்கிறது என்பதை யார் கணக்கெடுத்துப் பார்த்திருக்கிறார்கள்?

"என்னை எதற்காக இத்தனை தூரம் அழைத்து வரவேண்டும் என்றுதானே கேட்கிறீர்கள்? காரணம் நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமோ?" என்று கேட்டவாறே விஜயலக்ஷ்மி மறுபடியும் அவன் மடியில் தலை வைக்கப் போனாள்.

விஜய லக்ஷ்மியின் உள்ளத்தை ஜகதிஷின் விழிகள் படம் பிடித்துக் காட்டின.

மாலைக் கதிரவன் மேலைக் கடலுக்குள் மூக்குளித்து மறைந்து விட்டான். அவனைச் சாட்சி வைத்துத் தன் மனத்தை ஒரு நிலையில் வைத்துக் கொள்ளலாம் என்று எண்ணிய ஜகதீஷுக்கு அது நடவாத காரியம் என்பது தெரிந்து விட்டது! 'அட, கிரஹசாரமே! இப்படித் தர்ம சங்கடத்தில் மாட்டிக் கொண்டு விட்டோமே! நாம் மனத்தைச் சலிக்க விடாமல் இருக்க வேண்டுமே!' என்று எண்ணிய ஜகதீஷ் வெகு சிரமப்பட்டு விஜயலக்ஷ்மியின் பார்வையோடு பார்வையாக ஒன்றிப் போயிருந்த தன் பார்வையைப் பெயர்த்து ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தான். வெளியுலகை இருள் கவ்வுவதுபோல் நம் உள்ளத்தையும் இருள் கவ்வி இழுக்கான செயலில் இறக்கி விட்டால் என்ன செய்வது என்ற பயம் அவனைப் பிடித்துக் கொண்டது.

அப்பொழுது இரண்டே இரண்டு நட்சத்திரங்கள் வானவீதியில் கண் சிமிட்டிக்கொண்டிருந்தன. அவற்றைப் பார்த்த ஜகதீஷுக்கு, 'கோகிலாவின் இரு கண்களும் தான் நம்மைப் பார்த்து இப்படி எள்ளி நகையாடுகின்றனவோ?' என்று பிரமை உண்டாயிற்று.

கோகிலா அவனை அம்மாதிரி நிலையில் பார்த்தால் சிரிக்கத்தான் சிரிப்பாள். அதைத் தவிர அவள் வாய் திறந்து வேறு ஒன்றும் சொல்ல மாட்டாள் என்ற நம்பிக்கை அவனுக்குப் பரிபூரணமாக இருந்தது.

இவ்வாறு அவன் சிந்தனையில் மூழ்கியிருந்த பொழுது டிரைவர் காரின் ஹாரனை அடித்துப் புறப்பட நாழிகையாகி விட்டது என்பதை இருவருக்குமே நினைவுறுத்தினான்.

"விஜயா! நான் யோகி இல்லை. நானும் ஒரு மனிதன்தான். பலரையும் போன்று பலஹீனமான ஒரு மனிதன்தான். இதுபோன்ற செயல்கள் என்னைக் கட்டாயம் மோகாந்தகாரத்தில் மூழ்கடித்து விடும். மூச்சுப் பிடித்துக் கரை காணும் சக்தி எனக்குச் சிறிதும் இல்லை. நீங்கள் என்னை மிகவும் சோதித்து விட்டீர்கள். உங்கள் சோதனையை என் விஷயத்தில் இதோடு நிறுத்திக் கொள்ளக் கூடாதா?" என்று கேட்டான் ஜகதீஷ். அவனுடைய ஒவ்வொரு சொல்லிலும் உண்மை உறைந்திருந்தது.

"நான் உங்களை என் வாழ்நாள் முழுவதும் சோதிக்கத்தான் போகிறேன். நீங்கள் சொல்கிறீர்களே என்பதற்காக நான் என் செயலை நிறுத்த முடியாது!"

"நீங்கள் என்னை எப்படியெல்லாம் சிரமத்தில் ஆழ்த்தி விட்டீர்கள் என்பதை நான் உங்களுக்கு எப்படி எடுத்துரைப்பேன்?" என்றான் ஜகதீஷ் பரிதாபமாக.

"நீங்கள் ஒன்றும் எனக்கு எடுத்துரைக்க வேண்டாம். என்னை இப்படியே உட்கார்ந்திருக்க விடுங்கள், போதும்! நான் எத்

முன்பே தெரிந்தது!

ஜயராம்பதி என்ற ஊரிலிருந்தபோது அன்னை மலேரியா நோயினால் ரொம்பவும் பீடிக்கப்பட்டுக் கஷ்டப்பட்டார். அவரைக் கவனித்து வந்த சிஷ்யர்கள் ஒருவரும் அவரைப் பார்க்க வரும் அன்பர்களை உள்ளே அனுமதிக்கவில்லை. ஒரு பக்தர் பாரிஸால் என்ற ஊரிலிருந்து அன்னையைத் தரிசிக்க வேண்டும் என்ற ஒரே ஆவலுடன் வந்திருந்தார். சிஷ்யர்கள், அவரை அன்னையைப் பார்க்க விடவில்லை. இது சிறிது கலகலப்புக்கும் சச்சரவுக்கும் இடம் தந்தது. இந்தச் சத்தத்தைக் கேட்டு அன்னை கதவருகிலேயே வந்து விட்டார். "ஏன உள்ளே அவரைவிட மாட்டேன் என்கிறாய்?" என்று சிஷ்யரைப் பார்த்துக் கேட்டார். சுவாமி சாரதானந்தர்தான் யாரையும் உள்ளே விடவேண்டாம் என்று கட்டளையிட்டிருப்பதாகச் சிஷ்யர் கூறினார். உடனே அன்னை சற்றுக் கோபத்துடன், "இப்படித் தடுப்பதற்குச் சாரதானந்தா யார்? நான் இந்தப் பணிக்காகவே பிறந்திருக்கிறேன்" என்று கூறி விட்டு வந்தவரைப் பார்த்து, "இன்று ஏதாகிலும் சாப்பிட்டு விட்டு நாளை வா! உபதேசம் செய்துவைக்கிறேன்" என்றார். பிறகு அந்த பக்தர் அன்னையைப் பார்த்து உபதேசம் பெற்ற பிறகுதான் சாப்பிடுவது என்ற திட சங்கல்பத்துடன் வந்திருந்ததாகத் தெரிய வந்தது.

துணையோ புரிந்து கொள்வேன்! அப்படிப் புரிந்து கொள்ளா விட்டாலும் ஒன்றும் குடி முழுகி விடாது!" என்றாள் விஜயலக்ஷ்மி.

"என் நிலையை நீங்கள் நன்றாக அறிவீர்கள்! கோகிலாவின் நகைகளைக் கொண்டு தான் எங்கள் ஜீவனம் நடக்கிறது!"

"அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டியவள் கோகிலா. நீங்கள் நினைத்தால் எத்தனை வேண்டுமானாலும் சம்பாதிக்கக் கூடிய சக்தியுள்ளவர் என்று அவள் நம்புகிறாள். அதனால்தான் அவள் சிறிதும் கவலையற்றிருக்கிறாள்!" என்றாள் விஜயலக்ஷ்மி.

"நம் இருவரையும் பற்றி ஜனங்கள் என்ன சொல்வார்கள்? எனக்குச் சமூகத்தில் ஒன்றும் அவ்வளவு அந்தஸ்து கிடையாது, குறைந்து போய்விடுமே என்று நான் பயப்படுவதற்கு! ஆனால் நீங்களோ பணக்கார வீட்டுப் பெண். உங்களுக்குச் சமூகத்தில் இருக்கும் அந்தஸ்தும் மரியாதையும் அலாதி. அதனால்......"

"இப்படியெல்லாம் பேசி நீங்கள் என்னை மிகவும் இழிவுப் படுத்துகிறீர்கள். நினைவிருக்கட்டும்!" என்றாள் விஜயலக்ஷ்மி கடுமையாக.

"மன்னிக்கணும். நான் உங்களை இழிவுபடுத்தவோ அவமானப்படுத்தவோ நினைக்கவில்லை. நான் உங்கள் மதிப்பையும் மரியாதையையும் நிலைநிறுத்துவதற்கான விஷயத்தைத் தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்!"

"நீங்கள் சொல்லும் இந்த மதிப்பும் மரியாதையும் எனக்குத் தேவை இல்லை!"

"உயர்ந்தோர் சமூகம் நமது தொடர்பைப் பெரும் பாவம் என்று குற்றம் சாட்டும்!"

"என்ன குற்றம் சாட்டினாலும் எனக்கு அக்கறையில்லை. ஏனெனில் நீங்கள் கூறும் இந்தச் சமூகம் மூட்டாள் சமூகம். கட்டிய கணவன் தகுதியற்றவனாக இருந்தாலும் மனைவி அவனுடன்தான் வாழ வேண்டும், அதுதான் புண்ணியம் என்று பறைசாற்றும் உங்கள் சமூகம் புத்திசாலியாக இருக்க முடியாது. என்ன, நான் சொல்வது உண்மைதானே? ஆனால் நான் இத்தகைய புண்ணியத்தையோ புண்ணியத்தின் பலனையோ விரும்பவில்லை. எனக்கு இந்தச் சமூகமும் வேண்டாம், இந்தச் சமூகத்தின் புண்ணியமும் வேண்டாம்!" என்றாள் விஜயலக்ஷ்மி.

"புண்ணியத்தைப் பற்றி நான் கொண்டிருக்கும் நோக்கமும் மிக உயர்வானது என்று சொல்வதற்கில்லை. கோகிலா என் மனைவியாக வராமல் இருந்தால் நான் உங்களைப் போல் ஒரு விஜயலக்ஷ்மிக்கு என் இருதயத்தில் இடம் அளித்திருப்பேன். ஆனால் இந்த இருதயத்தை இப்பொழுது கோகிலா ஆட்கொண்டு விட்டாள்; அடிமை கொண்டு விட்டாள். இனி நான் என்ன செய்ய முடியும்? நீங்களே சொல்லுங்கள்!" என்றான் ஜகதீஷ்.

விஜயலக்ஷ்மி சட்டென்று தன் தலையை நகர்த்திக் கொண்டாள். தான் சொன்ன சொற்கள் விஜயலக்ஷ்மிக்குத் தவறாகப் பட்டு விட்டன என்பதை ஜகதீஷ் உணர்ந்தான். அவன் உள்ளத்தை உடைக்காமல் இருக்க அவனுக்கு வேறு உபாயம் தோன்றினால் தானே? என்ன செய்வான், பாவம்!

மாலை மங்கி இரவாக மாறி விட்டது. அவன் விஜயலக்ஷ்மியுடன் வீட்டுக்குப் போவதென்பது நடவாத காரியம். அதனால் அவன் அந்தப் பேச்சை ஒருவிதமாக முடித்துவிட வேண்டும் என்ற நோக்கத்துடன், "என்னைத் தவறாக எண்ணுகிறீர்கள். நான் இப்பொழுது இன்னொரு திடுக்கிடும் விஷயத்தைத் தங்களுக்குச் சொல்வதாக இருக்கிறேன். அதாவது நான் பதினையாயிரம் ரூபாய் களவாடி விட்டேன். போலீஸிடமிருந்து தப்புவதற்காகத் தான் தங்களோடு இத்தனை தூரம் ஓடி வந்திருக்கிறேன்!" என்றான்.

"பொய்!"

தீர்மானமாகச் சொன்னாள் விஜயலக்ஷ்மி.

"பொய்யாக இருக்கலாம். ஆனால் என் மேல் குற்றம் சாட்டப்பட்டு என்னைப் பிடிப்பதற்கான முஸ்திபு நடந்து கொண்டிருக்கிறது என்பது மட்டும் உண்மை!"

"என் மீது ஆணை வைத்துச் சொல்வீர்களா?"

"உங்கள் மீது ஆணை வைத்துச் சொல்கிறேன். நான் சொல்வதில் துளிக்கூடப் பொய்யில்லை. எல்லாம் உண்மை!"

"பொய்யாக இருந்தால்......?"

"பொய்யாக இருந்தால் நாளைக்கே நான் வீட்டுக்கு வந்து விடுகிறேன். உங்களுக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டும் என்று தோன்றுகிறதோ, அதைக் கொடுக்கலாம்!"

"சரி! அப்படியானால் நீங்கள் இப்பொழுது என்னோடு வரப்போவதில்லையா?"

"இல்லை. உங்களைக் கார் வரை வேண்டுமானால் கொண்டு வந்து விடுகிறேன்!"

"வேண்டியதில்லை. எனக்கு ஒன்றும் போகப் பயமில்லை!" என்றாள் விஜயலக்ஷ்மி, சற்றுக் கடுமையான குரலில். பிறகு ஜகதீஷைத் திரும்பிப் பாராமலே மணல் திட்டிலிருந்து இறங்கிச் செல்லலானாள். ஆனால் ஜகதீஷ் கொஞ்சதூரம் வரை அவளை மௌனமாகப் பின் தொடர்ந்தான். பிறகு, அவளைக் கூப்பிட்டு, "எனக்கு ஒரு காரியம் செய்கிறீர்களா?" என்று கேட்டான்.

"என்ன காரியம்?"

"கோகிலாவுக்கு இவ் விஷயம் தெரியாது. ஒருவேளை அவளுக்கு இந்நேரம் தெரிந்திருக்கலாம். 'நான் சுகமாயிருக்கிறேன். பொய்க் குற்றச் சாட்டிலிருந்து தப்புவதற்காகவே பயந்து ஓடியிருக்கிறேன்! கவலைப்பட வேண்டாம்!' என்று சொல்லுங்கள்!"

"கட்டாயம் சொல்கிறேன். வேறு ஏதாவது அவளிடம் சொல்ல வேண்டுமா?"

"வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை."

விஜயலக்ஷ்மி அதற்கு மேல் அவனிடம் ஒன்றும் கேட்கவும் இல்லை; பேசவும் இல்லை. ஒரு முறை ஆவல் தோய்ந்த கண்களுடன் அவனை அப்படியே விழுங்கி விடுபவள் போலப் பார்த்தாள். அடுத்தகணம் தலைகால் தெரியாத வேகத்தில் தடதட வென்று இறங்கிக் காரை நோக்கி விரைந்தாள்.

மங்கலான இருளில் திட்டின் மேலும் கீழும் இறங்கி நடந்து போய்க் கொண்டிருந்த விஜயலக்ஷ்மியை வெகு நேரம் வரை கண் கொட்டாமல் ஜகதீஷ் பார்த்துக் கொண்டிருந்தான். சிறிது தூரம் சென்றதும் அவள் இருளில் மறைந்து விட்டாள்.

சில கணங்களுக்கெல்லாம் மோட்டாரின் ஹாரன் சப்தம் கேட்டது. மின்சார ஒளி கூரிய அம்பைப்போல் நகரத்தை நோக்கி முன்னேறிச் செல்வதை ஜகதீஷ் கண்டான்.

மின்சார ஒளி கண் பார்வைக்கு மறைந்து விடவே, அவன் திரும்பி மணல் மேட்டின் உச்சியில் வந்து நின்றான். அப்பொழுது நட்சத்திரங்களின் ஒளி மட்டுமேதான் பூமியில் விழுந்து கொண்டிருந்தது. அந்த ஒளியில் பளபள வென்று ஒரு பொருள் கீழே பிரகாசித்துக் கொண்டு கிடப்பதை அவன் கண்டான். உடனே அதைக் குனிந்து கையில் எடுத்தான். கண் அருகே கொண்டு போய்ப் பார்த்தபொழுது அது விஜயலக்ஷ்மியின் வைர வளையல் என்பது தெரிந்தது.

தன் இருதயம் பயங்கரப் போருக்கிடையே சிக்கித் தவிப்பதாக ஜகதீஷுக்குத் தோன்றியது. என்ன இருந்தாலும் மக்கள் நம்மைத் திருடனாகத்தான் மதிப்பார்கள் என்ற எண்ணம் அவன் மனத்தை நிறைத்தது.

ஆனால் எல்லோருடைய கண்களுக்கும் பயங்கரத் திருடனாகக் காட்சியளிக்கும் மனிதனைக் கோகிலா உயிருக்குயிராகக் காதலிக்கிறான். என்ன வேடிக்கை! கோகிலா இருக்கட்டும். அவள் ஒரு பைத்தியக்காரி! அவள் இப்படியெல்லாம் தத்துப் பித்து என்று செய்து வைத்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் இன்று இன்னொரு பெண்ணும் அல்லவா பயங்கரமே உருவாகிவிட்ட அவனிடம் தன் மனத்தைச் சமர்ப்பிக்கத் துணிந்து விட்டாள்! இது வேடிக்கையாக இல்லையா?

உள்ளத்தை நிறைத்த வேதனை உணர்ச்சி பயங்கர அட்டகாசச் சிரிப்பாகப் பரிணமித்தது. அவன் கடகட வென்று வாய் விட்டுச் சிரித்தான். அவனுடைய சிரிப்பில் ஆற்றங் கரையின் அந்தச் சூழ்நிலையே கலக்கமுற்றுத் தத்தளித்தது.

ஜகதீஷின் உள்ளத்தை நிறைத்து விட்ட அந்த வேதனை இந்தப் பேய்ச் சிரிப்பாக வெளியே வராமல் உள்ளுக்குள்ளேயே குமுறிக் கொண்டிருந்தால், அவன் நிஜமாகவே பைத்தியம் பிடித்தவனாகி யிருப்பான். இந்த உலகம் போகும் போக்கைக் கண்டு, சமூகம் செல்லும் சூழ்ச்சிப் பாதையைக் கண்டு, மனிதன் செய்யும் மடமையைக் கண்டு, கூட்டாளிகள் செய்யும் கூடாவொழுக்கத்தைக் கண்டு மனம் படைத்த மனிதன் ஒன்று சிரிக்க வேண்டும், அல்லது அழவேண்டும். சிற்சில சூழ்நிலைகளில் அப்பொழுதுதான் உள்ளத்தைச் சுமையாக அழுத்தும் பாரம் சற்றுக் குறையும்.

ஜகதீஷ் சிரித்த அந்தச் சிரிப்பின் எதிரொலி அடங்கவில்லை. அதற்குள்ளாக மணல் மேட்டின் ஒரு புறத்தின் வழியாக யாரோ ஒரு ஆள் ஏறி வந்தான். ஏறி வரும்பொழுதே அவன் கனத்த கரகரத்த குரலில், "நீ யார்? எதற்காகச் சிரிக்கிறாய்?" என்று கேட்டுக் கொண்டே வந்தான். (தொடரும்)


தாயே, இது என்ன?

பகவான் ராமகிருஷ்ணர் புகழுடலை எய்திய பின், அன்னை சாரதாமணி தேவியார் ஒவ்வொரு நாளும் பிற்பகல் உணவைப் பகவான் ராமகிருஷ்ணருக்கு நிவேதனம் செய்து விட்டுத்தான் உண்பார். ஒரு தடவை, பதினான்கு வயதுச் சிறுவன் ஒருவன் நிவேதனம் செய்வதற்கு முன் அந்த உணவைப் பேராசைக் கண் கொண்டு பார்த்தான் என்பதற்காகப் பகவானுக்கு நிவேதனம் பண்ணவில்லை. பிறகு ஒரு நாள், அன்னை, பகவானுக்கு நிவேதனம் செய்வதற்கு முன்பு அதே சிறுவனுக்கு உணவு அளித்துக் கொண்டிருப்பதைச் சுவாமி பரமேசுவரானந்தர் கண்டார். உடனே அவர் பரபரப்படைந்து, "தாயே, இது என்ன? பகவானுக்கு நிவேதனமாவதற்கு முன் அதில் ஒரு பகுதியை அந்தப் பையனுக்குத் தருகிறீர்களே!" என்றார். உடனே "குழந்தாய், பையன் சாப்பிடட்டும், என்னை ஆட்கொண்ட பகவான் அவனுள்ளும் இருக்கத்தானே செய்கிறார்!" என்றார் ஸ்ரீ சாரதாமணி தேவியார்.

அன்னையின் இந்தப் பரிவு மக்களினத்துடன் மட்டும் நின்று விடவில்லை.

சாரதாமணி தேவியார், ஒரு கிளியை வளர்த்து வந்தார். அதற்குக் கங்காராம் என்று பெயர் வைத்திருந்தார். ஒரு நாள் அன்னையார், ஹல்வாவைக் கங்காராமுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார். இதைப் பார்த்த பரமேசுவரானந்தர், "இது என்ன? பூஜை இன்னும் ஆகவில்லை. அதற்குள் கிளிக்குக் கொடுக்கிறீர்களே!" என்றார். "குழந்தாய், பகவான் கிளிக்குள்ளும் இருக்கிறார்!" என்றார்.

ஹாஸ்யக் களஞ்சியம்



ஹோட்டல
"என்ன ஐயா! மேஜை யைத் தூக்கிக் கொண்டு கிளம்பி விட்டீர்?"
"சௌக்கியமா, சார்!"
"சாலையைத் தாண்டி விட்டுச் சொல்கிறேன்!"
"நில், அங்கேயே! தண்ணீர் தீட்டாய் விடப் போகிறது!"
குனிந்து போகவும்
"அதற்குத்தான் உங்களைத் தமிழ் நன்றாகப் படிக்கக் கற்றுக் கொள்ளுங்கள் என்று ஆதியிலிருந்தே முட்டிண்டேனே, கேட்டீர்களா?"
"டாக்டருக்கு நாலு நாளாகச் சுரம்; தனக்கு வைத்தியம் பண்ணிக் கொள்ள நேரமில்லை!"


சாமா
போலீஸ் ஸ்டேஷன்
"நானும் பார்க்கிறேன். நீ எப்பொழுது பார்த்தாலும் வாசலிலேயே நிற்கிறாயே? உனக்கு வேலை ஒன்றும் இல்லையா?"
"என் நாட்டுப் பெண்ணுக்கு இளகிய மனசு! வெங்காயம் நறுக்கினாலே மள மள வென்று கண்களில் நீர் பெருகி விடுகிறது!"
மூக்குக்கு இடம் இல்லையே..!
இடம் செய்து விட்டேன்!
தையும் தாத்தா!...
...தையும் தாத்தா!..
...தை...தை...தை!...
"திருப்பித் திருப்பி 'தையும் தாத்தா' தையும் தாத்தா'ன்னு எதற்குச் சொல்றே? தைத்துக்கொண்டு தானே இருக்கிறேன்!"
விட்டது தொல்லை!
1
2
3
4

அன்னையின் மணிமொழிகள்

எல்லோரும் மிகுந்த வருத்தத்துடன் சொல்லுகிறார்கள்: "இவ்வுலகில் எவ்வளவு துன்பங்கள் இருக்கின்றன. நாங்கள் ஆண்டவனை எங்கள் துயரைப் போக்கும்படி எவ்வளவோ பிரார்த்தித்தோம். ஆயினும் துன்பத்துக்கொரு முடிவில்லாமல் இருக்கிறது."

ஆனால் துன்பம் கடவுளின் அருள்தான். அது அவனுடைய பேரன்புக்கு அடையாளம்.

★

உலகம் முழுதும் பொன்னாசையிலும் பெண்ணாசையிலும் மூழ்கியிருக்கிறது. இவ்விரண்டையும் துறப்பதைத்தான் சந்நியாசி பயில வேண்டும். அதனால்தான் ராமகிருஷ்ணர், "ஓ சந்நியாசியே, ஜாக்கிரதை!" என்று எச்சரித்தார்.

★

உங்கள் நடத்தையில், பேச்சுக்களில், காரியங்களில் உண்மையாக இருங்கள். அப்பொழுது நீங்கள் எவ்வளவு பாக்கியம் செய்தவர்கள் என்பதை உணர்வீர்கள். அவனுடைய அருள் உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளின் மீதும் சமமாக இருக்கிறது. அதை வேண்டிப் பிரார்த்திப்பது என்பது அனாவசியம். உண்மையாக ஜபம் புரியுங்கள், அவனது எல்லையற்ற அருளின் தன்மையை உணர்வீர்கள். கடவுள் தீவிர முயற்சி, உண்மை, அன்பு இம் மூன்றையும்தான் விரும்புகிறார்.

★

வானத்து நிலா மேகத்தால் மூடப்பட்டிருக்கிறது. காற்று கொஞ்சம் கொஞ்சமாக அம் மேகத்தை விலக்க வேண்டியதாகின்றது; அப்போதுதான் நிலவைக் காண முடியும். அது திடீரெனப் போய் விடுகிறதா? ஆத்மிக பூர்ணத்துவமும் அது போலத்தான்.

★

பூவைக் கையில் எடுத்தால் வாசனையை அறிவது போலவும், கல்லின் மீது சந்தனக் கட்டையைத் தேய்த்தால் மணத்தை முகர்வது போலவும், கடவுளைப் பற்றி எப்போதும் நினைப்பதால் ஆத்மிக விழிப்பு ஏற்படும்.

★

உன் இருதயத்தின் உள்ளிடமிருந்து எப்போதும் ஆண்டவன் நாமத்தைக் கூறிக்கொண்டே இரு; மனப்பூர்வமாகக் குருதேவரைத் தஞ்சமாக அடை: சூழ்நிலையிலுள்ள பொருள்களை உன் மனம் எவ்வாறு கருதுகிறது என்பது பற்றிய கவலை வேண்டாம். ஆத்ம வழியில் முன்னேறியுள்ளோமா இல்லையா என்று கணக்கிட்டுப் பார்த்துக் கவலைப்படுவதில் உன் காலத்தை வீணாக்காதே. 'நாம் முன்னேறியுள்ளோமா?' என்று ஆராய்தலே அகங்காரமாகும். உன் குருவினிடத்தும் இஷ்ட தேவதையிடத்தும் நம்பிக்கை வை.

நமது முக்கியமான குறி அன்பு. இந்த அன்பின் மூலமாகத்தான் ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஆன்மீகத் துறைக் குடும்பம் பெருகிப் பல்கியிருக்கிறது!

★

கீழ் நோக்கி ஓடுவதே தண்ணீரின் இயற்கை. ஆனால் கதிரவனின் கிரணங்கள் அதனை ஆவியாக்கி வானில் உயர்த்துகின்றன. அது போன்று மனமும் இழிந்த பொருள்களான விஷய சுகங்களை நாடிப் போவது இயற்கை. ஆனால் கடவுளின் அருள் மனத்தை உயர்ந்த பொருளை நாடிச் செல்லும்படி தூக்கி விடும்.

★

வாழ்க்கையில் துன்பங்களால் அடிபட்ட பிறகே, பலர் இறைவனது நாமத்தை ஓதுகின்றனர். ஆனால் எவன் தன் இளமை முதற்கொண்டே மனத்தை இறைவனுடைய திருவடிகளில் அன்றலர்ந்த மலரைப்போல அர்ப்பணம் செய்வானோ, அவனே உண்மையில் பாக்கியசாலி. பிறவிப் பயன் பெற்றவன்.

★

கடவுள் காட்சி பெறவில்லையே என்பதால் உன் சாதனையைத் தளர்த்தி விடாதே. தூண்டில் போடுபவன் தூண்டிலோடு வந்து அமர்ந்த ஒவ்வொரு நாளும் பெரிய மீனையா பிடித்து விடுகிறான்? அவன் காத்துக் காத்து உட்கார்ந்திருக்க வேண்டும். பலமுறை அவன் ஏமாற்றமும் அடைகிறான்.

★

ஒருவன் வார்த்தையாலும் பிறரைத் துன்புறுத்தக் கூடாது. அநாவசியமாக ஒருவன் பிறர்க்குப் பிரியமாயிராத மெய்யை உரைத்தலாகாது. கடுமொழிகள் பேசுவதால், ஒருவனது சுபாவமே கொடுமையாக மாறுகிறது.

★

ஒரு பொருள் மிக அற்பமாயிருந்த போதிலும், ஒருவன் அதை இகழ்ந்து பேசலாகாது. நீங்கள் ஒரு பொருளை மதித்தால் அதுவும் உங்களை மதிக்கும். ஓர் அற்பக் காரியத்தையும் ஒருவன் மிக்க மரியாதையுடனும் நம்பிக்கையுடனும் செய்ய வேண்டும்.

★

இக் கலியுகத்தில் உண்மையைக் கடைப்பிடிப்பதே பெருந்தவம் என ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவார். உண்மையைக் கடைப்பிடிப்பதால் ஒருவர் கடவுளை அடைவார்.

"எப்போதும் செயலாற்றிக் கொண்டேயிருக்க வேண்டும். வேலையின்றி ஒருபோதும் இருத்தலாகாது. ஏனெனில் செயல் அற்ற சோம்பல் நிலையில் எல்லா வகையான கெட்ட எண்ணங்களும் மனத்தில் உதிக்கும்" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் என்னிடம் கூறுவதுண்டு.


இருமலுக்கு
வீட்டிலேயே
குணம்
அளிப்பது!



இரண்டு உள்ளங்கள்

ந. ஆறுமுகம்



போட்டிக் கதை

அவன், தன் தோள்மீது சுமந்து கொண்டிருந்த துப்பாக்கியைப் பக்கத்தில் இருந்த மரத்தின் மேல் சாய்த்து வைத்து விட்டு வானத்தை உற்று நோக்கினான். அஷ்டமி நிலவு பால்போல் காய்ந்து கொண்டிருந்தது. கால் கடுக்க நின்றிருந்த அலுப்புத் தீரச் சிறிது உட்காரலாம் என்று குனிந்த போது, அவன் சட்டைப் பையிலிருந்து ரூபாய் நாணயம் ஒன்று, 'டங்' என்ற ஒலியுடன் கட்டாந் தரையில் விழுந்து, சிறிது தூரம் உருண்டோடிப் பின், தான் நிற்பதற்கு எல்லை கோலுவது போல் தன்னையே நாலைந்து முறை சுற்றி விட்டு அமைதியுடன் சாய்ந்தது.

உடல் ஆயாசம் தீர உட்கார்ந்தவனுக்குப் புதுக் குழப்பத்தை உண்டாக்கி விட்டது அந்த ரூபாய். அவன் மனமும் அந்த ரூபாயைப் போலவே தன் வாழ்க்கையைச் சுற்றிச் சுழன்றது.

*   *   *   *

அவன் தகப்பனையும் இழந்தவன்; தாயையும் இழந்தவன். உற்றார், உறவினர் என்று உறவுமுறை கொண்டாட யாரும் இல்லை. எப்படியோ கஷ்டப்பட்டு இருபத்தைந்தாவது வயதின் எல்லைக் கோட்டைத் தாண்டிய அவனுக்கு அடைக்கலம் அளிக்க ராணுவ சேவை காத்துக் கொண்டிருந்தது. 'இனிப் போகவேண்டிய பாதை எப்படிப் பட்டதோ!' என்று மலைக்கும்போதுதான் ஆகாசத்தில் விடி வெள்ளி தோன்றுவதைப் போல் அவள், அவன் வாழ்வில் தோன்றி மின்னினாள்.

முதன் முதலில் அவளைச் சந்தித்த காட்சி அவன் கண்ணெதிரே நின்றது. அந்த இன்ப நினைவிலே கருத்தை ஓட்டினான். அன்றொரு நாள் மாலைப் பொழுதில், நாலைந்து சிப்பாய்களோடுவெளியில் சென்று சுற்றிவிட்டு வந்தான். வரும்போது அந்தச் சிறு கிராமத்தின் வழியாக வர நேர்ந்தது.

குடிசைக்கு முன்னால் உள்ள கம்பத்தின் மேல்சாய்ந்து கொண்டு அவள் ஒய்யாரமாக நின்று கொண்டிருந்தாள். அவள் வண்டு விழிகளும், அங்கத்தின் கொழுமையும் வருவோர் போவோரை எல்லாம் தூண்டில் போட்டு இழுத்தது. அவளைக் கண்டதும், அவளிடம் ஏதேனும் பேச்சுக் கொடுத்து வம்புக்கு இழுக்க வேண்டும் என்று மற்றவர்கள் ஆசை. ஆனால் முத்துவுக்கு மட்டும் — ஆம்; அதுதான் அவன் பெயர்—விருப்பம் இல்லை. இருந்தாலும் மற்றவர்கள் வற்புறுத்தியதின் பேரில் மனம் இல்லாமலே நாலோடு ஐந்தாகச் சேர்ந்து போனான். அதே சமயம் குட்டையின் கரைமேல் மாலை வெய்யிலில் மினுக்கிக் கொண்டிருந்த தவளை ஒன்று பூட்ஸ் காலடிகளின் 'சரக்' 'சரக்' என்ற சத்தத்தைக் கேட்டதும் 'குபுக்' என்று தண்ணீருக்குள் குதித்தது. அந்தச் சத்தத்தைக் கேட்டு எல்லாரும் திரும்பினார்கள்.

திரும்பவும் குடிசையின் வாயிலைப் பார்த்தபோது அவளை அங்கே காணவில்லை. அந்தத் தவளையும் அவளும் ஏக காலத்தில் மறைந்த நிகழ்ச்சி அவர்களுக்குச் சிரிப்பை உண்டாக்கியது.

"அட! அந்தத் தவளையும், அவளும் சொல்லி வைத்தது போல் ஒரே சமயத்தில் மறைந்தது ரொம்பப் பொருத்தமப்பா!" என்று ரசிகத் தன்மையோடு கூறினான் ஒருவன்.

"இத்தனை கழுகுகள் வருவதைப் பார்த்தபிறகு அந்தத் தவளை மறையாமல் அங்கேயே நிற்குமா!" என்று தங்கள் காரியம் சரியல்ல என்பது தொனிக்கக் கூறினான் முத்து.

"அப்பனே! நாங்கள் எல்லாம் கழுகுகள்தான். நீ வேண்டுமானால் இந்தக் கழுகுகளோடு சேரவேண்டாம்!" என்றான் மற்றவன்.

குடிசை வாசலில் போய் நின்றதும், ஒருவன் துணிந்து முன் சென்றான். ஒரு காலை வாசற்படியின் மேல் வைத்து, நீட்டிக் கொண்டிருந்த கூரையைக் கையால் பிடித்துக் கொண்டு, "யாரது உள்ளே!" என்று அதிகாரத்துடன் கேட்டான்.

அந்தப் பழைய முகம் கதவுக்குப் பின்னாலிருந்து எட்டிப் பார்த்து விட்டு, நண்டு வளையில் நுழைவதைப் போல் சடக்கென்று இழுத்துக் கொண்டது. இப்போது அச்சமும், திகைப்பும் காணப்பட்டன அந்த முகத்தில்.

கொஞ்ச நேரம் கழித்து ஒரு பெரியவர் உள்ளே இருந்து வந்தார். அநாவசியத் தொல்லையைப் பொறுக்காதவர் போல் காணப்பட்டார்.

"யாரப்பா நீங்கள்! என்ன வேண்டும்!"

"ஒன்றுமில்லை. குடிப்பதற்கு தண்ணீர் வேண்டும்."

"தண்ணீர் வேண்டுமானால், எங்கேயாவது ஆறு குளம் இருக்கும். அங்கே போங்கள். இது சத்திரம் இல்லை, வருகிறவர்களுக்கெல்லாம் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்க!"— நீங்கள் தண்ணீருக்கு வந்தவர்களில்லை என்பதைச் சுட்டிக் காட்டுவது போல் தொனித்தது அவர் குரல்.

"என்னய்யா இது! குடிக்கத் தண்ணீருக்குக் கூடவா



பஞ்சம்! தர்மத்துக்கும் உங்களுக்கும் ரொம்ப தூரமோ!'' என்று கேலி செய்தான் ஒருவன்.

இதற்குள் மூத்து இடை மறித்தான். "இந்தாப்பா! தர்மம் செய்வதும், செய்யாததும் அவர் இஷ்டம். அதைப் பற்றிக் கேட்க நீ யார்! நான் யார்! தர்மம் கேட்கிறபோது கூடவா அதிகாரம்! வாங்கப்பா, போகலாம்!'' என்று கூறி எல்லோரையும் அழைத்துக் கொண்டு போனான்.

போகிற போக்கிலே கதவுக்குப் பின்னால் ஜாடையாகப் பார்வையை ஓட்டினான் மூத்து. அவள் உதடுகளில் இலேசாகப் புன்முறுவல் தோன்றிக் கரைந்து கொண்டிருந்த சாயல் காணப்பட்டது. "இப்படிப்பட்ட முரட்டுச் சென்மங்களிடையேயும் இளகிய நெஞ்சம் ஒன்றிருக்கிறதே!'' என்ற ஆச்சரியமும், திகைப்பும் கூத்தாடின அவனுடைய மலர்ந்த விழிகளில்.

பிறந்தது முதல் இதுவரை தாய் தந்தையரிடமிருந்தோ மற்றவர்களிடமிருந்தோ இத்தகைய பரிவுப் பார்வையைப் பெற்று அனுபவித்தறியாத மூத்துவுக்கு என்னவோ போலிருந்தது. உடல் ரோமங்கள் சிலிர்த்தன.

மூன் புதரின்மேல் துணியை விரித்துப் போட்டு விட்டு, திரும்பவும் அதை எடுக்கச்சங்கடப்படுவது போல் அவள் முறுவலிலும், கண் பார்வையிலும் மனத்தைச் சிக்கவிட்டு விட்ட அவன் அதைத் திரும்பத் தன்னிடம் இழுக்கச் சங்கடப்பட்டான்.

அதற்குப் பிறகு பல தடவைகள் காரணமில்லாமலே அவன் கால்கள் அவனை அந்தக் கிராமத்தின் பக்கம் இழுத்துச் சென்றன. வரும்போதும் போகும்போதும் ஜாடைமாடையாக அந்தக் குடிசையைக் கவனித்தான். அவள் கண்களில் தென்பட்டால் இலேசாகச் சிரிப்பான். அவளும் நாணிக் கோணிக் கொண்டு உள்ளே ஓடி விடுவாள். இப்படிப் பல நாட்கள் பார்வையின் மூலமே அவர்களுடைய பாசம் பரவிப் படர்ந்தது.

கடைசியாக ஏற்பட்ட அந்தச் சந்திப்புதான் அவன் வாழ்நாளிலேயே என்றும் மறக்க முடியாத சம்பவம். அவன் அவளிடம் வைத்திருந்த ஆசை கைகூடும் என்ற நம்பிக்கை உறுதிப் பட்டதும் அந்தச் சந்திப்பின்போது தான்.

அவன் எங்கெல்லாமோ சுற்றி அலைந்துவிட்டுத் தளர்ந்த நடையோடு அந்தத் தோப்புக்குள் நுழைந்து கொண்டிருந்தான். விறகுச் சுள்ளிகளையெல்லாம் பொறுக்கிக் கட்டாகக் கட்டி வைத்து விட்டுத் தூக்கி விட யாராவது வருவார்களா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

மூத்துவைக் கண்டதும், சகஜமாக அவள், "என்னுங்க! கொஞ்சம் தூக்கி விடுகிறீர்களா!'' என்று கெஞ்சும் பாவனையில் கேட்டாள்.

"யாரு! ஓகோ! தண்ணீர் தரமாட்டேன் என்று மறுத்த மகராசியா! அவசியம் தூக்கிவிட வேண்டியதுதான்'' என்று பாதி கேலியும், பாதி உண்மையுமாகக் கூறினான் மூத்து.

அவளுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. "போதும் நிறுத்துங்க! உங்களுக்குத் தண்ணீர் கொடுக்க மாட்டேன் என்று யார் சொன்னது! உங்களோடு வந்த அந்தத் தடியர்களுக்கல்லவா சொன்னோம்!'' என்று கூறிவிட்டு ஓரக்கண்ணால் அவன் முக மாறுபாட்டைக் கவனித்தாள்.

"அப்படியானால் எனக்கு மட்டும் கிடைக்குமாக்கும்!'' என்றான் அவன்.

"ஓ, தாராளமாக! தண்ணீர் என்னுங்க ஒரு பெரிய காரியம்! விருந்துகூட வைக்கிறேன். பாவம், வீடு வாசலை விட்டு இப்படிக் கஷ்டப் படுவதற்கு எவ்வளவோ செய்யலாமே!'' என்று கூறிக்கொண்டே போனவள், இடையில் ஒரு சந்தேகத்தைப் போக்கிக்கொள்ள ஒரு சிறு கேள்வியைப் போட்டாள்.

"ஆமாங்க! உங்களுக்கெல்லாம் கல்யாணம் ஆகிவிட்டதா!'' இந்தக் கேள்வியைத் தான் கேட்டது உசிதமோ உசிதமில்லையோ என்ற குழப்பம் அவள் முகத்தில் தெரிந்தது.

அவன் வேடிக்கை பண்ணினான். "உங்களுக்கெல்லாம் என்றால்...அதோ இருக்கிறார்களே அவர்களுக்கெல்லாமா!'' என்று தன் முகாம் இருந்த திசையைக் காட்டி, கண்ணைச் சிமிட்டினான்.

"உஸ்ம்...'' என்று ஒரு இழுப்பு இழுத்தாள். "அவர்களை எல்லாம் முன்னே பின்னே பழக்கமா!'' என்று கூறியவள், "ஐயோ! நேரமாகு

விட்டது! இதைத் தூக்கி விடுங்கள்!" என்று பதற்றத்தோடு குனிந்தாள்.

அவனும் ஒரு கைகொடுத்துத் தூக்கிவிட்டான். அவள் கூந்தலில் செருகி இருந்த மலர்கள் சிதைந்து கீழே விழுந்தன. அவள் பார்க்கும்படி அவற்றைப் பொறுக்கி முகர்ந்து பார்த்து விட்டுச் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டான் அவன்.

அவளுக்குச் சிரிப்புத் தாளவில்லை. "பூ வேண்டுமானால் என்னைக் கேளுங்கள்! நான் நிறையக் கொண்டு வந்து தருகிறேன்" என்று கூறிச் சிட்டாய்ப் பறந்து விட்டாள்.

அதுமுதல் முத்துவின் வாழ்க்கையில் புதிய மாறுதல்கள் காணப்பட்டன. அழகாகச் சிங்காரித்துக் கொண்டு அவன் அடிக்கடி வெளியே போய் வருவான். அதைக் கண்டு மற்றவர்களிடையே 'கசமுச' வென்று பேச்சுக் கிளம்பியது. அந்தப் பேச்சு சுபேதார் மாணிக்கம் வரையிலும் எட்டி அவனை அவர் முன்னிலையிலும் கொண்டு போய் நிறுத்தியது.

அவன், அவர் முன்பு தலைகுனிந்து நின்றான். 'நானோ ஏழை! என்னை மன்னிப்பதும் மன்னிக்காததும் உங்கள் தயவைப் பொறுத்திருக்கிறது' என்று குறிப்பது போலிருந்தது, அவன் தன்னையும் மறந்து நின்ற நிலை.

அவர், அவனை உச்சி முதல் உள்ளங்கால் வரை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தார், ஆளை எடை போடுவது போல.

பிறகு, "தம்பி! உன்னைப் பற்றி ஏகப்பட்ட புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. தெரியுமா, உனக்கு!" என்று கேட்டார். பதில் இல்லை.

"உன்னைத்தான் கேட்கிறேன். நான் கேட்கிற கேள்விகளுக்கு நீ பதில் கூறியாக வேண்டும்!" குரலில் கடுமையும் கண்டிப்பும் தொனித்தன.

அவனுக்கு அழுகையே வந்து விடும்போலிருந்தது. 'ஓ' வென்று கதறிவிட்டு ஒரேயடியாக அவர் காலில் விழுந்து விடுவோமா! வீண் வார்த்தைகள் எதற்கு! என்றுகூட எண்ணி விட்டான். பிறகு ஒருவாறு சமாளித்துக் கொண்டான்.

"ஐயா! நான் ஒன்றும் தவறான வழியில் போகவில்லை! என்மேல் பொறாமையால் ஏதேதோ..." என்று அவன் கூறி முடிப்பதற்குள் சுபேதார் மாணிக்கம் குறுக்கிட்டார்.

"நல்ல ஆளப்பா நீ! தவறு, தவறு இல்லை என்பதை நான் தீர்மானிப்பதற்குள் நீயே தீர்ப்பளித்து விட்டாயா! ஹூம்! விஷயத்துக்கு வா."

"ஐயா! ஒரு பெண் சம்பந்தமாக அடிக்கடி நான் வெளியில் போய் வருவது உண்மை." உண்மையைக் கூறி விட்டான் முத்து.

"இதைக் காட்டிலும் வேறு தப்பு வேண்டுமா! பேஷ்! ராணுவ முகாமை விட்டு அடிக்கடி வெளியே போய் வருவதே பெரிய குற்றமாயிற்றே!" என்றார் சுபேதார்.

"ஐயா! என்னை மன்னிக்க வேண்டும். தாய் தந்தையினுடைய அன்பையே இன்னதென்று அறியாதவன் நான். பிறந்தது முதல் என்னை நேசித்த ஒரே ஆத்மா அவள்தான். நானும் அவளை நேசிக்கிறேன். இதுகூடத் தவறா! அப்படியானால், தயவுசெய்து என்னை இங்கிருந்து அனுப்பி விடுங்கள்" என்று கெஞ்சும் பாவனையில் கேட்டான் முத்து.

அவர் அலட்சியமாகச் சிரித்தார். "தம்பி! இங்கே வருவதும், போவதும் உன் இஷ்டம்

அன்னையின் பரிவு

ஒருநாள் அன்னை சாரதாமணி தேவியார் சுவாமி மகாதேவ ஆனந்தரை, மண்ணெண்ணெய், கோதுமை மாவு முதலிய சாமான்களை வாங்கி வரச் சொல்லி ஹலிதிபுகூர் கடைத் தெருவுக்கு அனுப்பினார். சாமான்கள் வாங்கினார். அவை எண்பது மணங்கு கனத்துக்கு மேலிருந்தன. ஆனால் அன்னை கூலிக்காரனை வைத்துச் சாமான்களை எடுத்து வருமாறு பணிக்காததால், அவர் தம் தலையில் வைத்துத் தூக்கி வந்து கொண்டிருந்தார். வருகிற சாலை சேறும் சகதியுமாகவும், பாதங்கள் வழுக்கி விழக்கூடியதாகவும் இருந்தது. இந்நிலையில் தலை மீதிருந்த பாரம், அடிக்கு அடி அதிகமாகக் கனப்பது போல் தோன்றிற்று. எனினும் ஒரு கூலி நியமிக்கக் கூடாது என்று உறுதி செய்துகொண்டார். 'இந்த பலஹீனத்துக்கு இடம் தரலாகாது. எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும் நாமேதான் தூக்கிக் கொண்டு போக வேண்டும்' என்று தீர்மானித்துக் கொண்டார். அப்போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது. இந்த உறுதி செய்து கொண்ட அடுத்த கணம், ஒரு அடியைத் தூக்கி மேலே வைக்கிறார், தலைமீதிருந்த சுமையின் கனம் திடீரென்று குறைந்து போய் விட்டது. தெருவிலிருந்த சேறு - சகதியை வெகு சுலபமாகக் கடந்து விட்டார். இப்படித் திடீர் என்று ஏற்பட்ட அதிசய மாறுதலானது அவர் சிந்தனையைத் தூண்டியது. ஆனால் அன்னை இருந்த வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தாரோ இல்லையோ, அன்னை வீட்டு முற்றத்தில் மேலும் கீழும் நடப்பதையும் கவலையினால் முகம் சிவந்து போயிருப்பதையும், விழி பிதுங்கிக் கொண்டு வெளிவர முயல்வது போல் காட்சி யளிப்பதையும் பார்த்தார். அத்துடன் அன்னை, "ஏன் அவனை ஒரு கூலியை வைத்துச் சாமானை எடுத்து வரச் சொல்லவில்லை?" என்று தம்மைத் தாமே கேட்டுக் கொள்வதையும் சுவாமி மகாதேவானந்தர் கேட்டார். சுவாமி மகாதேவானந்தர், சுமையைக் கீழே இறக்கியதும் உடனே அன்னை அவரைப் பார்த்து, "ஏன் நீ ஒரு கூலியை ஏற்பாடு செய்து இந்தச் சாமான்களைக் கொண்டு வந்திருக்கக் கூடாது? நான் உனக்குச் சொல்லியனுப்பா விட்டால் என்ன? இப்படியா ஒருவர் சாமான்களைச் சுமந்து கொண்டு வருவார்கள்?" என்று மிகுந்த பரிவுடன் கேட்டார்.

ஒன்றும் குறையாது!

சாரதாமணி தேவியாருடன் கூடவே இருந்து பணியாற்றிய பெண்மணிகளில் கோலாப்மா ஒருவர். அவர் ஒரு நாள் வேலைக்காரியை மிகவும் கடிந்து கொண்டிருந்தார்.

சாரதாமணி தேவியார், "ஏன் இப்படி அவளைக் கடிந்துகொள்ளுகிறாய்?" என்று கேட்டார்.

அதற்கு கோலாப் மா சலித்துக் கொண்டு, "உங்களிடம் சொல்லி என்ன பயன்? பிறர் குற்றங் குறைகளைத் தான் நீங்கள் பார்க்க மாட்டீர்களே?" என்றார்.

"கோலாப், பிறர் குற்றம் பார்ப்பவர்களின் எண்ணிக்கை உலகில் என்னால் ஒன்றும் குறைந்து விடாது. நான் வேறு விதமாக இருப்பதனால் உலகம் ஒன்றும் அஸ்தமித்தும் போய் விடாது!" என்றார் அன்னை.

என்று நினைத்துக் கொண்டாயா! அதுதான் முடியாது! அது முடிவதாயிருந்தால், நான்... அந்த...ஆசை முகத்தை..." என்று கூறும்போதே அவர் நாத் தழுதழுத்தது. ஏதோ ஒரு துயரச் சம்பவம் அந்த அரை குறை வாக்கியத்தில் அடங்கி யிருப்பதாகப் பட்டது.

மேலே சமாளித்துக்கொண்டு பேசினார். "தம்பீ! இது ராணுவம். கடமைதான் முக்கியம். காதலுக்கு இங்கே இடமில்லை. ஞாபக மிருக்கட்டும்" என்று வேண்டுமென்றே பேச்சில் கடுமையை வருவித்துக் கொண்டு கூறினார். "இனியும் இந்தக் காரியத்தில் பிரவேசித்தாயானால் கடுந் தண்டனை தான் கிடைக்கும்!" என்றும் கர்ஜித்தார்.

ஏதோ கூறப்போனவன், அவர் முகம் கனித்ததைக் கண்டு அஞ்சிப் பின் வாங்கினான்.

இனி அவன் தன் காதலுக்குச் சமாதி கட்ட வேண்டியதுதானா! வேறு வழியே இல்லையா!

அவன் வழி கண்டு பிடிப்பதற்கு முன்னாலேயே ராணுவ முகாம் வேறு இடத்துக்கு மாறி விட்டது. அந்தப் புது இடத்தில் பொழுது போவது முத்துவுக்குச் சிரமமாக இருந்தது. முன் போல் அவளை நினைத்தபோதெல்லாம் அவன் போய்ப் பார்க்க முடியாதல்லவா! என்ன செய்யலாம்! விதியே என்று காலத்தைக் கடத்தினான். வரவர அவளைப் பற்றிய நினைவும் கிருஷ்ண பக்ஷத்து நிலவைப் போல் கொஞ்சம் கொஞ்சமாக மங்கியது. அந்தச் சமயத்தில் தான் மறைந்து போன தன் நினைவுக்குப் புதுமெருகு கொடுத்துப் புத்துயிர் அளிக்க வந்தாள் அவள்.

புது இடத்துக்கு வந்து அன்று ஆறாவது நாள். அன்றிரவு பதினொரு மணி இருக்கும். முகாமில் பேச்சரவம் அடங்கி அமைதி நிலவியது. அவன் படுத்திருந்த கூடாரத்தினுள், அரிக்கேன் லாந்தரின் வெளிச்சத்தில் ஒரு நிழல் உருவம் அசைந்தாடி மறைந்தது. மெதுவாக எழுந்து வந்து திரையை விலக்கிப் பார்த்தான். அங்கு அவள் நின்று கொண்டிருந்தாள். அவள் கண்களில் விவரிக்க முடியாத அச்சமும், பீதியும் குடி கொண்டிருந்தன.

"என்ன சமாசாரம்! எப்படி வந்தாய், இந்த இருட்டில்! உன்னோடு யாரேனும் வந்திருக்கிறார்களா!" என்று சரமாரியாகக் கேள்விகளை அடுக்கினான் முத்து.

"உஸ்ஸ்......உள்ளே வாருங்கள், சொல்லுகிறேன்" என்று அழைத்துச் சென்றாள். ஏதோ ரகசியமாகச் சொன்னாள். இடையிடையே விக்கலும், விம்மலும் கேட்டன. கொஞ்ச நேரம் சென்றதும் அவளைக் கூட்டிக் கொண்டு வந்து, திரையை விலக்கி வெளியே அனுப்பி விட்டு, "சீக்கிரம் போய்விடு, கவலைப்படாதே!" என்று ஆறுதல் அளித்தான் முத்து.

அவள் விடுவிடு என்று நடக்க ஆரம்பித்தாள். கொஞ்ச தூரம் சென்றதும், எதிரே வந்த ஓர் உருவம், "யார் அது! நில்!" என்று அதட்டியது. அவள் அப்படியே திகைத்து நின்று விட்டாள்.

"கையில் என்ன!" என்று கேட்டதும் தான் அவளுக்கு ஞாபகம் வந்தது.

அடடா! ஆசையோடு அவருக்குக் கொடுக்கலாம் என்று கொண்டு வந்த கீரைக் கறி அல்லவா! அவசரத்தில் அதைக் கொடுத்து விட்டு வர மறந்து விட்டோமே!

ஏமாற்றத்தை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், "ஒன்றுமில்லை. தின் பண்டம்!" என்று இழுத்தாள் அவள்.

"சரி! முன்னால் நட!" என்று உத்தரவு போட்டு விட்டுப் பின்னாலேயே தொடர்ந்தார் அவர்.

உள்ளே இருந்த முத்துவுக்குக் குரல் சுபேதாருடையது என்று விளங்கிவிட்டது. வந்த தும்மலைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான். "சரி! வசமாக இன்று அகப்பட்டுக் கொண்டு விட்டோம். இனி தப்புவதேது!" என்று நினைக்கவும் அவன் தலை கிறுகிறுவென்று சுற்றியது. அதே குரல் தன் பெயரைச் சொல்லிக் கூப்பிடவும், புலிக்கு முன் செல்லும் ஆடுபோல் அவர் முன் நடுங்கியவாறே வந்து நின்றான்.

அவளைப் பார்த்து, "அந்தப் பொட்டணத்தை அங்கே கொடுத்து விட்டு ஓடிப் போ!" என்று அதட்டினார் சுபேதார். அவன் கையில் கூடக் கொடுக்காமல், அவன் காலடியில் வைத்து விட்டு ஓட்டம் பிடித்தாள் அவள்.

அவரும் அவனை ஒருமுறை முறைத்துப் பார்த்து விட்டுப் பேசாமல் போய் விட்டார்.

அன்று அவருக்குத் தூக்கமே வரவில்லை. கயிற்றுக் கட்டிலில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தார். அமைதியான தடாகத்தில் சிறு கல்லைப் போட்டாலும் அலைகள் வட்டம் வட்டமாகக் கிளம்பிக் கரையை மோதுவதுபோல், முத்துவின் செயல் அவர் சிந்தனை அலைகளைக் கிளப்பியது. முன்பு தமக்கு நேர்ந்த அநுபவத்தை முத்துவின் அநுபவத்தோடு ஒத்திட்டுப் பார்த்தார்.

*　　　*　　　*

மாணிக்கத்தின் ஆசை மனைவி தன்னந் தனியாக மேட்டூர் கிராமத்திலே இருந்தாள். அவன் ராணுவக் கூடத்திலே இருந்தான். மணமாகி ஆறுமாதம்கூட ஆகவில்லை. மனைவிக்கு ஆறுதல் கூறி விட்டு முகாமுக்கு வந்து விட்டான். அவன் கண்ணீரில் மாதங்கள் பல கரைந்தன. கடிதங்கள் மட்டும் இருவர் உள்ளத்தையும் பரிமாறிக் கொண்

ஓர் பரிபூரண சேவைத் திட்டம்

PANDYAN INSURANCE COMPANY LIMITED

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

நெருப்பு - கப்பல் - விபத்து

ஆஸ்திகள் சுமார் 1 கோடி ரூபாய்

தலைமைக் காரியாலயம்: பாண்டியன் பில்டிங் : மதுரை

கிளைகள்: பம்பாய், கல்கத்தா, டெல்லி, சென்னை, நாகபுரி, ஷோலாப்பூர், பெங்களூர், திருவனந்தபுரம், கோயமுத்தூர், கொச்சி

புண்பட்டு வலிக்கும் கால்களுக்கு

ஜாம்-பெக் தடவி சுகம் பெறச் செய்க



Zam-Buk

ஜாம்-பெக் உலகின் மகோன்னதமான சருமக்களிம்பு. ஜாம்-பெக் சருமத்துவாரங்களுள் புகுந்து நோயுற்ற கால் தசைக்கு சுமை ஊட்டி பலமும் தருகின்றது. ஜாம் பெக் சருமத்தை மிருதுவாக்கி, எரிச்சல் அல்லது ரணம் ஏற்படாமல் தடுக்கும். உங்கள் காலில் உபத்திரவம் இருந்தால் ஜாம்-பெக் தடவி உடன் குணம் பெறுக. பிறகு பிரதி இரவிலும் உபயோகித்து பாத ஆரோக்கியமும் அடையுங்கள். சரும நோய்களையும், காயங்களையும் ஆற்றுவதில் ஜாம்-பெக் அற்புத சக்தி வாய்ந்தது. ஜாம்-பெக்கில் இதர மதிப்பு வாய்ந்த ஔஷதப் பொருள்களைத் தவிர க்ளோரோபில் அதன் நோயாற்றும் குணம், தசைநார் போஷாக்கு மற்றும் இதர குணங்களுடன் சேர்க்கப்பட்டுள்ளது.



மிருகக் கொழுப்பு சேரவில்லை என்பதற்கு உத்திரவாதம்
ஜாம்-பெக்கினால் குணம் பெறுவீர்கள்
எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

F2Y 37 TAM.

மதராஸிற்கு ஏகஏஜெண்டுகள்: தாதா & கம்பெனி, பார்க் டவுன்

டிருந்தன. அவன் ஆசை முகத்தைக் காண ஆவலாக இருப்பதாக, அவளது அன்பழைப்பைத் தாங்கி வந்த கடிதங்கள் பலப்பல.

ஆனால், போர் நிலைமை நெருக்கடியான கட்டத்தில் இருந்ததால் லீவு தர மறுத்துவிட்டனர் மேலதிகாரிகள். அடுத்தடுத்து அவள் தன் உள்ளக் குமுறலை அள்ளித் தெளித்துக் கடிதங்களாக வரைந்து தள்ளினாள். அவை எல்லாம் ஆடிக் காற்றில் கரைந்து மாயும் மேகக் கூட்டத்தைப் போல் பயனின்றி ஒழிந்தன. மாதங்கள் வருஷமாக உரு மாறின. ஆசைக்கு இனியாளை ஆவலுடன் காணத் துடித்துக் கொண்டிருந்த அவனுக்கு, அந்தத் தந்தி இறுதி எச்சரிக்கையாக—அபாய அறிவிப்பாக வந்து சேர்ந்தது.



பிரசித்தி பெற்ற "ஸ்ட்ரோஜுக்ஸ்" விளம்பர கம்பெனியின் மானேஜிங் டைரக்டரான ஸ்ரீ எச். என் ராபின்ஸன் ஆஸ்திரேலியாவிலிருந்து இந்தியாவுக்கு வந்தபோது அவரை ஸ்ரீமான் வெபரும் ஸ்ரீமதி வெபரும், ஸ்ரீ டி. வி. காந்தியும் பம்பாய் விமான நிலையத்துக்குச் சென்று வரவேற்றனர்.

"மிக்க அபாயம்! தாமதிக்காமல் உடனே புறப்பட்டு வரவும்!"

சுருக்குத் தெரிந்தாற் போல் அத்தந்தியில் ஒரு சில வார்த்தைகள்தான் இருந்தன!

தந்தியும், கையுமாக அதிகாரிகளின் காலில் விழுந்து லீவு பெற்றான் அவன். வழியில் என்னென்னவோ எண்ணங்கள்! அவளுடன் ஆசையோடு பேசப் போகிறோமா! அல்லது ஆசை மணம் வீசாத கருகிய மலரைத்தான் பார்ப்போமா! என்று ஏங்கினான். எப்படியோ ஒன்றரை நாள் பயணத்துக்குப் பிறகு அவன் இறங்க வேண்டிய ஸ்டேஷன் வந்தது.

அப்போது இரவு மணி சுமார் மூன்று இருக்கும். கைப் பெட்டியுடன் வண்டியை விட்டு இறங்கி வீட்டை நோக்கிச் சென்றான்.

துக்கம் தாளாமல் முகத்தை மறைத்துக் கொண்டு விக்கி விக்கி அழுவதைப் போல ஒரு கம்பத்தின் உயரத்தில் தொங்கிக் கொண்டிருந்த 'காஸ் லைட்டு' புஸ் என்ற இரைச்சலுடன் அணைவதும் குபீர் என்று எரிவதுமாக இருந்தது.

வீட்டை அடைந்தவன் தலையில் கையை வைத்துக் கொண்டு கல்லாகச் சமைந்து உட்காரும்படியாகி விட்டது. காரணம், அவன் ஆசைக் கனல் அவிந்து போயிருந்ததுதான்.

சில நாள் தங்கிச் செய்ய வேண்டிய இறுதிக் கிரியைகளை எல்லாம் முடித்துக் கொண்டு லீவு முடிவதற்குள் ராணுவ முகாமுக்குச் சென்று தன் வேலையை ஒப்புக் கொண்டான்.

* * *

ராமது இந்த அநுபவத்தால் கனிந்து போய் இருந்த அவர் உள்ளம் முத்துவின் பரிதாப நிலைமைக்கு இரங்கியது. ஆனால் செய்வது என்னவென்றுதான் அவருக்குப் புரியவில்லை.

ஒரு மாதம் உருண்டோடியது. முத்துவுக்கோ அவளைப் பற்றிய சமாசாரமே தெரியவில்லை. 'தன்னை ஒரு முரடனுக்கு மணம் செய்து கொடுக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன' என்று கூறி, அன்று விக்கி விக்கி அழுது விட்டுப் போன அவளது பரிதாப நிலைமையை நினைத்துப் பார்த்தான். அவனுக்கு அப்புறம் அங்கே ஒரு கணமும் தங்க முடியாதென்று தோன்றியது. எனவே, அன்றிரவே தன் எண்ணத்தைச் செயலாக்கி விட்டான். அப்பொழுது அவன் நெஞ்சு 'திக்திக்' என்று அடித்துக் கொண்டது. யாரோ பின்னால் தொடர்ந்து வரும் காலடி யோசை வேறு கேட்டது. ஆனால் அவன் பின்னால் ஒரு தடவை கூடத் திரும்பிப் பார்க்கவில்லை.

அவனுக்கு மேல் மூச்சு வாங்கியது. நெஞ்சும் உலர்ந்து போய் ஒட்டிக் கொண்டது. எச்சில் கூட்டி விழுங்கிப் பார்த்தான். ஊஹூம்! ஊற்றே வற்றி விட்டது போல் தோன்றியது.

சீடரும் பூனைக்குட்டியும்

அன்னை ஒரு பூனைக் குட்டியிடம் ரொம்பப் பிரியமாயிருந்தார். தினம் அதற்கு ஆழாக்குப் பால் வாங்கிக் கொடுத்து வந்தார். அது பயமில்லாமல் அவருடன் பழகியது. சில சமயம் அவர் அதைத் தடியால் அடிப்பதுபோலப் பாசாங்கு செய்வார். ஆனால், அது அச்சமில்லாமல் அவர் காலடியில் போய்ப் படுத்துக் கொள்ளும். அப்போது அன்னை தடியைக் கீழே போட்டுவிட்டுச் சிரிப்பார். ஒருமுறை, அது வீட்டிலிருந்த பொருள் எதையோ திருடி விட்டது. அப்போது அன்னை கூறியதாவது: "திருடுவது அவற்றின் தர்மம். அவைகளுக்கு அன்புடன் ஆகாரமளிப்பதற்கு யார் இருக்கிறார்கள்?"

ஞான மகாராஜ் என்ற ஒரு சீடருக்கு அந்தப் பூனையைப் பிடிக்காது. ஒருநாள் அதை அடித்து விட்டார். அன்னை இதற்காக ரொம்ப வருத்தப்பட்டார். ஒருமுறை அவர் கல்கத்தாவுக்குப் போக நேர்ந்தது. அப்போது அவர் ஞாபகமாக ஞான மகாராஜை அழைத்து, "ஞான மகாராஜ்! நீ தினம் சமைக்கும்போது, பூனைக்கும் கொஞ்சம் சேர்த்துச் சமைக்க வேணும். மறந்து போய் விடாதே" என்றார்.

ஓடினான்; ஓடினான்; ஓடினான்; அப்படி ஓடினான்! ஊர் நெருங்கி விட்டது!

எதிரே ஓர் கல்யாண ஊர்வலம் மேளதாளத்துடன் வந்து கொண்டிருந்ததைப் பார்த்தான். அது போகட்டும் என்று மரத்தின் பின்னால் கொஞ்சம் ஒதுங்கி நின்றான். ஊர்வலம் பக்கத்தில் வந்ததும் உற்றுக் கவனித்தான். அவ்வளவுதான்! முழங்கால்களுக்குக் கீழே சொரணையற்று விட்டது போல் தோன்றியது. பாவம், அவன் கண்ட கனவெல்லாம் பாழாகி விட்டது!

அந்தப் பெண் வேறு யாருமில்லை. அவன் ஆசைக் காதலியேதான். ஐயோ! இதைக் காணத்தானா இப்படி நள்ளிரவில் அவன் ஓடி வந்தான்!

அழுது புரண்டு அடம் பிடித்து வாங்கிய அப்பத்தைக் காகத்துக்குப் பலி கொடுத்து விட்டு, அண்ணாந்து பார்த்து ஏங்கி நிற்கும் சிறு பிள்ளையைப் போலிருந்தது அவன் நிலைமை.

ஆசையோடு சட்டைப் பைக்குள் போட்டு வைத்திருந்த அந்த மலர்ச் சருகுகளைத் துழாவிய அவன் கரங்களில் ஏதோ ஓர் கடிதம் தட்டுப்பட்டது. ஆவலோடு பிரித்துப் பார்த்தான். நின்று நின்று போய்க் கொண்டிருந்த ஊர்வலத்தின் காஸ் லைட்டு வெளிச்சத்திலே அந்த எழுத்துக்கள் நன்றாகப் பளிச்சிட்டன.

அன்புள்ள முத்து!

இந்தக் கடிதத்தை நீ பார்க்கிறபோது, அநேகமாக உன் ஆசைக் காதலியின் அரவணைப்பிலே இருப்பாய். அதுதான் என் ஆசையும். ஏன் பதறுகிறாய்? எனக்குத் தெரிந்து விட்டதே என்றா? நானும் மனிதன்தானடா! ஆனால், நீ நினைத்திருப்பாய்; என்னை ஹிருதயம் அற்ற மனிதன் என்று! சில சமயம் பசு புலியாகவும், புலி பசுவாகவும் தோன்றுவது இயல்பே! நீ என்னைப் பற்றி எது வேண்டுமானாலும் நினைத்துக் கொள்! ஆனால் ஒன்று மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்! எனக்குத் தெரியாமல் நீ இந்த முகாமிலிருந்து தப்பிச் சென்றிருக்க முடியாது! அன்று அவளை நீ முகாமில் சந்தித்தபோதே முடிவு கட்டிவிட்டேன், நீ தப்பி ஓடிவிடுவாய் என்று! இன்று உன் நடவடிக்கைகளைக் கவனித்து, நானே இந்தக் கடிதத்தை உன் சட்டைப் பைக்குள் மறைத்து வைத்தேன். இன்றோடு என் ஓயாத மனப் போராட்டத்துக்கு முடிவு கட்டி விட்டாய். உங்கள் இருவருக்கும் என் ஆசி!

சுபேதார்—மாணிக்கம்.

முத்துவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. மாணிக்கம், சுபேதார்-மாணிக்கமாகத் தோன்றவில்லை. மனிதருள் மாணிக்கமாகவே தோன்றினார் முத்துவுக்கு.

அவன் கண் முன்னால் நின்று கொண்டிருந்த பூவரச மரத்தில், அடை அடையாய் ஒட்டிக் கொண்டிருந்த கம்பளிப் பூச்சிகள், கொஞ்ச நஞ்சம் இருந்த பசையையும் உறிஞ்சிவிட்டு வேறு இடத்துக்கு நகர்ந்து கொண்டிருந்தன. அவனுக்கு மட்டும் என்ன! வாழ்வில் கொஞ்ச நஞ்சமிருந்த ஆசையும் உலர்ந்துதானே போய் விட்டது!

அவர் பிரார்த்தனை!

அன்னை சாரதாமணி தேவியார் புண்ணிய க்ஷேத்திராடனம் புறப்பட்டு, ஒரு முறை ராமேசுவரத்துக்கு வந்தார். அப்போது, இராமநாதபுரம் ராஜாவாக இருந்தவர் சுவாமி விவேகானந்தரிடம் மிகுந்த ஈடுபாடும் பக்தியும் கொண்டவர். ராமநாதபுரம் மன்னரின் பேருதவியாலேயே சுவாமி விவேகானந்தர் மேல் நாட்டுக்குச் சென்று பாரத நாட்டின் சமயப் பண்பின் தரத்தை உலகமெலாம் அறிய முழக்க முடிந்தது. எனவே, ராஜாவுக்கு அன்னையார் தமது சமஸ்தானத்துக்கு வந்திருக்கிறார் என்பதில் எவ்வளவு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கவேண்டும்?

ராஜா தமது அரண்மனை உத்தியோகஸ்தரை அழைத்து, தமது பொக்கிஷத்தைக் காண்பித்து, அன்னை விரும்பும் பொருளை எடுத்துக் கொள்ளச் செய்யுங்கள் என்றார்.

அப்படியே அரண்மனை உத்தியோகஸ்தர்களும் பொக்கிஷத்தைக் காண்பித்து அரசரின் விருப்பத்தைத் தெரிவித்தார்கள். முற்றத் துறந்த அன்னை அந்தப் பொக்கிஷ அறையிலுள்ள எந்த நவரத்தினத்தையும், தங்க நகைகளையும் விரும்ப முடியும்? ஆகவே, "எனக்கு ஒன்றும் வேண்டாம்! எல்லாம் தான் ஏற்கெனவே உங்கள் மன்னர் கொடுத்திருக்கிறாரே!" என்றார்.

காரியஸ்தர்கள் மீண்டும் சாரதாமணி அன்னையை வற்புறுத்தினார்கள்.

அன்னையார், தமது சகோதரர் மகளை வளர்த்து வந்தார். அந்தக் குழந்தையின் பெயர் ராது. அந்தக் குழந்தை மிகவும் துஷ்டத்தனமும் பிடிவாதமும் கொண்ட குழந்தையாக இருந்து வந்தது. அதனிடம் அன்னைக்கு அளவுகடந்த அன்பு. அதன் காரணமாக அன்னை அதன் துஷ்டத்தனத்தைப் பொறுத்து வந்தார்.

இப்பொழுது அந்தக் காரியஸ்தர்கள், வற்புறுத்தவே, "ராது வேண்டுமானால் தனக்கு வேண்டியதை இந்தப் பொக்கிஷத்திலிருந்து எடுத்துக் கொள்ளட்டும்" என்றார்.

அடுத்த கணம் அன்னை பெரிதும் தவித்துப் போனார். குழந்தை மிக உயர்ந்த பொருளை ஏதாகிலும் எடுத்துக் கொண்டு விட்டால் என்ன செய்வது என்று வருத்தப்பட்டார். அப்படியே கண்களை மூடி, பகவான் ராமகிருஷ்ணரைத் தியானித்தார். ராதுவின் மனத்தில் எத்தகைய பேராசை எண்ணமும் எழவொட்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று வேண்டினார்.

பகவானின் காதுகளில் சாரதாமணி அன்னையின் பிரார்த்தனை விழுந்தது.

குழந்தை ராது, "இங்குள்ள பொருள்கள் ஒன்றும் எனக்கு வேண்டாம். என் எழுதுகோலை எங்கேயோ தொலைத்து விட்டேன். அதனால் ஒரு பென்சில் வாங்கிக் கொடுங்கள். அது ஒன்றே எனக்குப் போதும்" என்று கூறினான். உடனே அன்னையார் தம் கையிலிருந்து அரை அணாக் கொடுத்து ஒரு பென்சில் வாங்கிவரச் செய்து குழந்தை ராதுவுக்குக் கொடுத்து மகிழ்ந்தார்.


அழகு மிக்க உங்கள்
தோற்றத்திற்கு
அவசியமானது...
BOURJOIS
ஈவினிங் இன் பாரீஸ்
BOURJOIS
போர்ஷ்வா தயாரித்துள்ள வாசனை திரவியம்


அடைந்த
மூக்கைத்
துரிதமாகச்
சுத்தி
செய்கிறது!
VICKS
Inhaler
விக்ஸ் இன்ஹேலர்!



பத்மாவின் திருமணம்

"பத்மா!"

"..............."

"பத்மா! ஏ, பத்மா!" என்று சற்றுக் குரலை உயர்த்தி அழைத்தான் பரந்தாமன்.

இப்பொழுதும் பதிலில்லை.

ஒரு குரல் கூப்பிட்டவுடன், "ஏன்!" என்று கேட்டுக்கொண்டு புள்ளி மான்போலத் துள்ளி ஓடி வரும் பத்மாவைக் காணவில்லை. பரந்தாமனுக்கு ஒரு கணம் ஒன்றும் தோன்றவில்லை. மேல் மாடிக்குப் போயிருக்கலாமோ என்று நினைத்துக் கொண்டு மாடிக்குச் சென்றான்.

மாடிப் படிகளை ஏறிச் சென்றதும் மாடியின் கைப்பிடிச் சுவரில் பத்மா உட்கார்ந்திருப்பதையும் மார்பில் தவழ்ந்து அலைந்து கொண்டிருந்த கூந்தலை அவள் கைகள் கோதிப் பின்னிக் கொண்டிருப்பதையும் பார்த்தான்.

பத்மா அவ்விதம் கூந்தலைப் பின்னிக்கொண்டிராவிட்டால், அவள் மாடியின் கைப்பிடிச் சுவரில் அமைக்கப்பட்ட ஒரு பெண்ணின் பொற் சிலையாகவே தோன்றியிருப்பாள்.

பரந்தாமன் அடிமேல் அடி வைத்துச் சத்தமில்லாமல் நடந்து சென்று பத்மாவுக்குப் பின்னால் உட்கார்ந்து கொண்டான்.

பத்மா இது ஒன்றையும் கவனியாமல் மேற்குத் திசையில் பூமிக்குள் மறையப் போகும் கதிரவனைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள். மாலைச் சூரியனின் பொற் கிரணங்களுடன் கண்ணில் தெரிந்த ஒவ்வொரு பொருளும் கூடிக் குலாவுவது போலிருந்தது. ஜிலுஜிலு வென்று வீசிக் கொண்டிருந்த தென்றலின் இனிய சுருதிக்கு இணங்க அந்த வீட்டின் இரு புறத்துச் சோலைகளிலும் புள்ளினங்கள் மங்கள கீதம் பாடிக் கொண்டிருந்தன. பரந்தாமன் மெதுவாகப் பத்மாவின் கண்களைப் பொத்தினான்.



"ஆ! நீங்கள் வந்து விட்டீர்களா!" என்று கேட்டுக்கொண்டே திரும்பினாள் பத்மா.

"மாடியில் தன்னந் தனியாக உட்கார்ந்து கொண்டு என்ன செய்கிறாய்!"

"தங்களுடைய அன்பை எண்ணி வியந்து கொண்டிருந்தேன்."

"இத்தனை நாளும் இல்லாமல் இன்றைக்கு அதைப்பற்றி நினைப்பானேன்!"

மறுமொழி சொல்லாமல் பத்மா ஒரு முறை பரந்தாமனை நோக்கினாள். அடுத்த கணம் தலையைக் குனிந்தவண்ணம் தன் அன்புக் கணவனைக் காதல் கனியப் பார்த்தாள்.

"என்ன சொல்லேன். நான் தெரிந்துகொள்ளக் கூடாதா!" என்று கனிவோடு கேட்டான்.

"அத்தையும் மாமாவும் பேசிக்கொண்டிருந்தார்கள். பேச்சுக்கு மத்தியில் தங்கள் பெயர் அடிபடவே சற்றுக் காது கொடுத்துக் கேட்டேன். பிறர் பேசுவதை அவர்கள் அறியாமல் கேட்பது அநாகரிகம் என்று தெரிந்திருந்தும், தங்கள் மீதுள்ள அன்பு காரணமாக என்னையும் அறியாமல் நின்று உற்றுக் கேட்டேன். நம்முடைய திருமணத்துக்காகத் தாங்கள் எடுத்துக்கொண்ட பிரயத்தனங்களையும், அதற்கு ஏற்பட்ட இடையூறுகளைத் தாங்கள் அலட்சியமாகக் கடந்ததையும் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதைக் கேட்டதிலிருந்து......" என்று வார்த்தையை முடிக்காமலே நிறுத்தினாள் பத்மா.

"பத்மா! உன்னை அடைவதற்குக் காற்றிலேறி அந்த விண்ணையும் கடச் சாடலாமே!" என்று சொல்லி அவள் அருகில் நெருங்கினான்.

இந்தக் காதல் தம்பதிகளைப் பார்த்தவுடன் தன் காதலியைத் தேடிக் கொண்டு கதிரவன் பூமிக்குள் புதைந்து மறைந்து விட்டான்.

பரந்தாமனின் உள்ளத்தில் பழைய சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அலை மோதிக் கொண்டு எழுந்தன. அந்த நினைவுகளில் மூழ்கினவனாய் அப்படியே செயலற்று உட்கார்ந்து விட்டான்.



கருப்பண்ணத் தேவர் பெரு நிலம் படைத்த பண்ணையார். பரம்பரையாகவே பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர். பழைய காலப் பிரபுக்கள் வீட்டுக் குழந்தைகளைப் போலவே செல்லமாக வளர்க்கப் பட்டவர். இளம் பிராயத்தில் இருந்தே அவர் விரும்பியதை யெல்லாம் நிறைவேற்றி வந்தனர் அவர் பெற்றோர்கள். அதனால்தானோ என்னவோ அவர் வளர்ந்து பெரியவரானதும் தாம் நினைத்ததை எல்லாம் சாதிக்கும் திறன் படைத்தவராய் விளங்கினார். தம்முடைய எண்ணத்துக்கு விரோதமாக ஏதாவது நிகழ்ந்து விட்டால் அவரால் தாங்க முடியாது. எண்ணெயில் விழுந்த பணியாரம் போல் குதிப்பார். அசாத்திய கோபம் கொண்டவர். ஆனால் நியாயம் அநியாயம் உணர்ந்தவர். அன்பு நிறைந்த இதயம் படைத்தவர். இவையெல்லாவற்றையும்விட அவரிடம் இன்னொரு குணமும் விசேஷமாக இருந்தது. ஒரு முறை யாரையாவது நம்பி விட்டால் கடைசி வரையில் அவர்களுடைய வார்த்தைக்கு மதிப்புக் கொடுப்பார். இதை யறிந்த பலர் அவரைத் தம்முடைய வஞ்சக எண்ணத்துக்கு ஏற்றவாறு ஆட்டிப் படைத்து வந்தனர். அதில் மிக முக்கியமானவனாக விளங்கி வந்தான் ஆதிமூலம்.

ஆதிமூலம் வேறு யாருமில்லை. தேவரின் அண்ணன் மகன். பிறர் சுகமாக வாழ்வதைக் காணச் சகிக்க மாட்டான். கொஞ்சம் நிம்மதியாக வாழ்பவர்களைப் பார்த்துக் கொண்டு அவனால் சும்மா இருக்க முடியாது. அவர்கள் அமைதியைக் கெடுக்க எவ்வளவு சூழ்ச்சிகள் உண்டோ அவ்வளவும் செய்வான். அவனுக்கு ஏற்றவண்ணம் அவன் மனைவியும் வாய்த்திருந்தாள். இவனுடைய கெட்ட குணங்கள் அத்தனையும் பெண் உருவமாகப் பெற்றுத் திகழ்ந்தாள் அவன் மனைவி லக்ஷ்மி.

ஒரே கொடியில் காய்த்த பழங்களின் சுவையில் அவ்வளவு வேறுபாடு காண முடிவதில்லை. ஆனால் ஒரே குடும்பத்தில் பிறந்தவர்களின் குணத்தில் தான் எவ்வளவு வேற்றுமை!

ஆதிமூலம் கருப்பண்ணத் தேவரின் முன் கோபத்தைத் தனக்கு ஏற்றபடியெல்லாம் பயன்படுத்தி வந்தான். சமயம் நேரும்பொழுதெல்லாம் தேவரின் அறைக்குச் சென்று அவர் மனத்துக்குத் தகுந்தபடி பேசுவான். முகஸ்துதி செய்வான். முகஸ்துதியில் மயங்காத மனிதர்கள் உண்டா! அதிலும் பணம் படைத்தவர்களைச் சுற்றி இப்படி முகஸ்துதி பாடுபவர்கள் இருப்பதைப் பற்றிக் கேட்க வேண்டுமா! அவர்கள் குடியைக் கெடுத்துக் கொண்டிருந்தால்தானே இந்த மாதிரி புகழ் பாடும் கும்பல்கள் பிழைக்க முடியும்!

ஒரு நாள் ஆதிமூலம் தேவரிடம் பேசிக்கொண்டிருந்தான். தேவர் தமக்கு வந்த கடிதங்களைப் பிரித்துப் படித்துக் கொண்டிருந்தார். ஒரு கடிதத்தைப் பார்த்தவுடன் அவர் முகம் மாறியது. கோபத்தால் அவர் கண்கள் சிவக்க ஆரம்பித்து விட்டன. ஒரு கணம் மௌனமாக இருந்து விட்டுக் கடிதத்தைக் கசக்கி எறிந்தார்.

"சித்தப்பா! அது என்ன கடிதம்! அதில் இருந்த விஷயம் என்ன!" என்றான் ஆதிமூலம்.

"தம்பி பரந்தாமன் படிக்கும் கல்லூரியிலிருந்து வந்திருக்கிறது" என்றார்.

பரந்தாமன் கருப்பண்ணத் தேவரின் மூத்த புதல்வன். தம் புதல்வனை நல்ல முறையில் படிக்க வைத்துப் பெரிய போலீஸ் உத்தியோகத்தில் சேர்க்க வேண்டும் என்று அவருக்கு ஆசை. அதற்காக அவனைச் சிறுவயதிலேயே ஏர்க்காட்டில் உள்ள ஐரோப்பியப் பள்ளியில் படிக்க வைத்தார். பரந்தாமனும் பள்ளிப் படிப்பில் முதல்வனாக விளங்கினான். அவன் புத்திசாலித்தனத்தை எண்ணித் தேவர் மகிழ்ந்து வந்தார். பிறகு சட்டப் பரீட்சைக்காகச் சென்னைக்கு வந்து படிக்க ஆரம்பித்தான். அந்தப் பரீட்சையில் அவன் தவறி விட்ட செய்திதான் அந்தக் கடிதத்தில் இருந்தது.

தேவர் பதில் ஒன்றும் சொல்லாமல் கசக்கி எறிந்த கடிதத்தை எடுத்து ஆதிமூலத்தின் கையில் கொடுத்தார். கடிதத்தைப் படித்த ஆதிமூலம் தேவரின் இதயத்தில் விஷத்தைத் தூவ ஆரம்பித்தான். தந்தைக்கும் தனயனுக்கும் மத்தியில் பெரிய அகழ் தோண்ட ஆரம்பித்தான்.

பரந்தாமன் பரீட்சையில் தவறிய செய்தி தேவருக்கு மிகுந்த மன வருத்தத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தி யிருந்தது. சம்பந்த மில்லாமல் அவர் பரந்தாமன் மீது கோபப்பட ஆரம்பித்தார். அவன் சரியாகப் படிக்கவில்லை என்று கருதினர். அவர் இதயம் கோபத்தால் எரிந்து கொண்டிருந்தது. அந்த எரியும் நெருப்பில் எண்ணெய் வார்க்க ஆரம்பித்தான் ஆதிமூலம்.

ஆதிமூலத்துக்கு, பரந்தாமன் எங்கே படித்துப் பட்டதாரியாகிப் புகழுடன் விளங்கி விடுவானே என்று நீண்ட நாளாகவே அவன் இதய ஆழத்தில் அசூயை புகைந்து கொண்டிருந்தது. சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்த ஆதிமூலம் அதைப் பயன்படுத்திக் கொள்ள முயன்றான்.

"ஏன் சித்தப்பா! அவன் படித்துவிட்டு என்ன கிழிக்கப் போகிறான்! மேலும் படிப்பது பணத்துக்குத்தான் கேடு. வயலை வரப்பைப் பார்த்துக்கிட்டு இருக்கச் சொல்லுங்க" என்றான்.

"நீ சொல்லுவதும் சரிதான். சும்மா மாட்டை கன்றைப் பார்த்துக் கொண்டு கிடக்க வேண்டியவன்தான். உருப்படுகிறவனு யிருந்தால் நன்றாகப் படித்துப் பரீட்சையில் தேறியிருக்க மாட்டானா! இன்றைக்கே அவனுக்குச் சேர வேண்டிய பாகத்தை ஒதுக்கி விடுகிறேன். அவன் பாக நிலத்தை அவனுக்குப் பிரித்துக் கொடுத்தும் விடுகிறேன். பார்த்துக் கொள்ளும்படி பரந்தாமனிடம் சொல்லி விடு" என்று சொல்லி மிகுந்த கோபத்துடன் எழுந்து போய் விட்டார் தேவர்.

உழவுத் தொழிலைவிட உயர்ந்த தொழில் உலகில் இல்லை என்பதைத் தேவர் அறிவாரா! மேனி நலுங்காமல், உடைகள் கசங்காமல் உத்தியோகத்தில் இருக்கும் அதிகாரிகளுடன் பழகிப் பழகி அவர் மனசு என்னமோ தம்முடைய பிள்ளைகளும் இது போல் உயர்ந்த உத்தியோகத்தில் இருக்க வேண்டும் என்று எண்ணி யிருக்கிறார். சுதந்திரமாக உழைத்து மக்கள் குலத்துக்கு உணவு அளிக்கும் புனிதத் தொழில் அல்லவா உழவுத் தொழில்! தேவருக்கும் தேவரின் குடும்பத்துக்கும் பெயரும் புகழும் இருப்பதே நெறி பிறழாமல் அவர்கள் உழவுத் தொழிலில் ஈடுபட்டு உழைத்து வருவதுதான் என்பதை உலகம் அறியுமே.


******

பரந்தாமன் தான் பரீட்சையில் தவறி விட்ட செய்தி கேட்டுச் சற்று மனவருத்தப் பட்டான். ஆனால் அது காரணமாகவே தனக்குச் சேர வேண்டிய நிலங்கள் பிரிக்கப்பட்டுத் தன்னுடைய நிர்வாகத்துக்கு வந்துவிட்ட செய்தி கேட்டுப் பரமானந்தம் அடைந்தான். தனக்குப் பட்டம் கொடுத்துப் பெருமை யடையும் பாக்யெத்தைச் சென்னை சர்வகலாசாலை இழந்து விட்டது என்று எண்ணினன். தன்னுடைய இளமை, வாழ்க்கைக்கு உதவாத பள்ளிக்கூடத்தில் விரயமாகாமல் உழவுத் தொழிலில் செலவழிக்கும் வாய்ப்பளித்த தந்தையை மனதார வாழ்த்தினன்.

பரந்தாமன் இதுவரை வெறும் பள்ளி மாணவனாகவே வளர்ந்து விட்டான். அவனுக்கு நிலபுலன்களைக் கவனித்துப் பழக்கமில்லை. ஆகையால் அவனுக்கு உதவியாக இருந்து பண்ணையைக் கவனித்துக் கொள்ளுவதற்காகத் தேவர் தமது அந்தரங்கக் காரியதரிசியான பாலனை நியமித்தார்.

பாலனுக்கு உலகம் தேவர்தான். தேவர் வாக்கு அவனுக்கு வேத வாக்கு. தேவர் எதைச் சொன்னாலும் அதற்கு "ஆமாம்" போடுவதே அவன் தொழில். பார்த்தால் பரம சாதுபோல் தோன்றுவான். ஆனால் அவன் பகத்தோல் போர்த்திய புலி. தேவருக்கு எதிரில் கூழைக் கும்பிடு போடுவான். பின்னல் தேவருக்கே வத்தி வைப்பான். பிறர் சொத்துக்கு ஆசைப்படாதவன் போல் நடிப்பான். ஆனல் எல்லார் கண்களிலும் மண்ணைத் தூவிவிட்டு அகப்பட்ட வரையில் சுருட்டிக்கொள்வான். மொத்தத்தில் வஞ்சகம் பேசிப் பிறரைக் கெடுத்து வாழ்பவன். முகஸ்துதி பாடி வயிறு வளர்ப்பவன்.

பாலன் பரந்தாமனைத் தன் கைக்குள் போட்டுக் கொள்ள வேஷம் போட்டான். பரந்தாமனைப் பற்றிப் புகழ்ந்தான். 'ஆகா ஊகு' என்றான். பரந்தாமன் படித்தவன். உலக நிலையை உணர்ந்தவன். பரம்பரையாக உள்ள அவர்கள் குடும்பத்து உயர்ந்த குணங்களைக் கொண்டவன். வாலிபன் அல்லவா! அவன் இதயம் எப்போதும் உண்மைக்கு அருகிலேயே இருந்தது. அவனிடம் வளர்ந்து வரும் உலகத்துடன் ஒத்து வாழும் பண்பு இருந்தது. மனிதர்களை மனிதர்களாகப் பார்க்கும் இதயம் இருந்தது. இன்னொரு மனிதனின் இதய உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுக்கும் உயர்ந்த மனப் பக்குவம் இருந்தது. அதனால் பாலனின் சூழ்ச்சி நிறைந்த உள்ளத்தை ஒரு நொடியில் பரந்தாமன் உணர்ந்து கொண்டான். காரியஸ்தர் பாலனின் இருகுதாளம் ஒன்றும் பரந்தாமனிடம் செல்லவில்லை.





அக்டோபர் மாதம் கடைசி வாரத்தில் இலங்கை அக்கரைப்பற்றில் அன்னை சாரதாதேவியின் நூறாவது ஆண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்குத் தலைமை தாங்கத் திருப்ப ராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தி லிருந்து வந்த சுவாமி சித்பவானந்தர் அவர்களை ஊர்வலமாக அழைத்து வந்தனர். இந்த விழா ஆரம்பமாவதற்கு முன்னால் சாரதாமணி அன்னையாரின் திரு உருவத்தை யானைமீது வைத்துப் பக்தகோடிகள் புடை சூழ வீதி வலம் வந்தார்கள்.

பரந்தாமன் தன்னுடைய பண்ணையை நேரடியாகக் கவனித்தான். இதனால் பாலனின் தந்திரம் பலிக்கவில்லை. பரந்தாமன் பண்ணையில் நியாயமும் நேர்மையும் கொண்ட ஒரு குடியானவன் இருந்தான். திடீரென்று அவனுக்கு வெளியூர் போக வேண்டிய வேலையிருந்தது. காரியஸ்தர் பாலனிடம் சொல்லிக் கொள்ளலாம் என்று அவனைத் தேடினான். காரியஸ்தர் தன்னுடைய காரியங்களை ஒழுங்காகக் கவனித்தால்தானே! அவன் எங்கோ ஊர் சுற்றப் போயிருந்தான். குடியானவன் நேரே பரந்தாமனிடம் வந்து விடுமுறை பெற்றுக் கொண்டு சென்று விட்டான்.

காரியஸ்தர் பாலனுக்கு இந்த விஷயம் தெரிந்ததும் என்ன செய்வது என்று தெரியவில்லை. தன்னிடம் சொல்லாமல் எஜமானிடம் உத்தரவு பெற்றுக் கொண்டது அவனுக்குப் பிடிக்கவில்லை. மறுநாள் அந்தக் குடியானவனைப் பண்ணையிலிருந்து நிறுத்தி விட்டான். குடியானவன் பரந்தாமன் காலில் விழுந்து கதறினான்.

பரந்தாமனுக்கு ஒன்றும் புரியவில்லை. பண்ணைக்கு யார் முதலாளி என்ற பிரச்னையே உண்டாகி விட்டது. ஒரு கணம் சிந்தித்தான். அடுத்த கணம் ஒரு முடிவுக்கு வந்து விட்டான். காரியஸ்தர் பாலனின் கணக்கைத் தீர்த்து அவன் வேலைக்குச் சீட்டுக் கொடுத்தான். குடியானவனை மீண்டும் வேலைக்கு வைத்துக் கொண்டான்.

இந்தச் செய்தி பண்ணையில் பெரிய பரபரப்பை உண்டாக்கி விட்டது. பண்ணையாட்கள் எல்லாம் இதைப் பற்றியே பேசிக் கொண்டனர். பெரிய பண்ணையார் கருப்பண்ணத் தேவரின் அந்தரங்கக் காரியதரிசி பாலனே இந்தப் பாடுபட்டால் நம் கதி என்ன ஆவது என்று பண்ணையாட்கள் எல்லாம் நடுங்கினர். பண்ணை நல்ல முறையில் சீர்திருத்தமாயிற்று. பயிர்கள் செழித்தன.

தம்முடைய ஆளைத் தம்மைக் கேட்காமல் பரந்தாமன் நிறுத்தி விட்டதை நினைத்துத் தேவர் ஆத்திரப்பட்டார். யாரோ, ஒரு முகஸ்துதி பாடும் பாலனுக்காகத் தன் சொந்த மகனை எதிரியாக நினைக்க ஆரம்பித்து விட்டார். கோபம் அவர் சிந்தனையைச் செயல்படும்படி விடவில்லை. "பரந்தாமனை என்ன செய்கிறேன், பார்!" என்று குமுறைத்தார். எனக்கு அவன் பிள்ளையே இல்லை. வளர்த்த கடா மார்பிலே பாய்கிறது என்பது போல அவன் காரியங்கள் செய்கிறான் என்று என்னென்னவோ வாயில் வந்ததெல்லாம் உளறினர்.

பரந்தாமன் இந்த உலகில் தன் தந்தையைத் தெய்வமாக மதிப்பவன். அவருக்கு ஒன்று என்றால் அவனால் தாங்கவே முடியாது. அவரிடம் உள்ள பெரிய குணத்தையும் முன்கோபத்தையும் பயன்படுத்திக் கொண்டு அவரை எல்லாரும் ஏமாற்றுகிறார்களே என்று அவன் எத்தனையோ முறை தனிமையில் இருந்து கண்ணீர் விட்டிருக்கிறான். இதை எல்லாம் தேவர் எங்கே உணரப் போகிறார்!

தன்னைப்பற்றித் தன் தந்தையார் தாறுமாறாகப் பேசுவதை யறிந்த பரந்தாமன் வேதனைப்படவில்லை. பெற்ற தந்தைக்குத் தன் மகனைப் பற்றித் திட்ட உரிமை கிடையாதா என்ன! ஆனால் யாரோ ஒரு வஞ்சகனுக்குப் பரிந்து பேசுவதை எண்ணித்தான் அவன் வேதனைப் பட்டான். உண்மை நிலையைத் தேவருக்கு விளக்க வேண்டும் என்று பரந்தாமன் பலமுறை முயன்றான்.

தேவரின் முன் கோபத்தை நன்கு உணர்ந்தவன் அல்லவா பரந்தாமன்! அதனால் அவர் அருகில் சென்று நிலைமையை விளக்குவதால் விபரீதம்தான் விளையும் என்பதை உணர்ந்தான். 'சத்தியம் வெல்லும். அன்புக்கு அழிவு கிடையாது' என்பதுதான் பரந்தாமன் கொள்கை, லட்சியம் எல்லாம். ஆகவே பொறுத்திருப்போம் காலம் மாறும் என்று பேசாமல் இருந்து விட்டான்.

****

"சித்தப்பா!" என்று குரல் கேட்டது.

"யாரு, ஆதி மூலமா! வா, வா" என்று வரவேற்றார் கருப்பண்ணத் தேவர்.

"பரந்தாமனின் திமிரைப் பார்த்தீர்களா! பணத்தைப் பணம் என்று பார்க்காமல் தண்ணீராகக் கொட்டிப் படிக்க வைத்தீர்கள். பலன் இல்லை. ஊர் உலகம்போல் இல்லாமல் அவனுக்கு வேண்டிய நிலத்தையும் கொடுத்து அதைக் கவனித்துக் கொள்ள அருமையான ஆளையும் கொடுத்தீர்கள். ஆள் என்ன சாமான்யப் பட்டவனா! தங்கள் உயிருக்கு உயிரானவன் அல்லவா! அவனை வேலையை விட்டுத் தள்ளி உங்களை அவமானப் படுத்தி விட்டானே, சித்தப்பா. அதை நினைத்தால் என் மனசு தாங்கவில்லை" என்று நீலிக் கண்ணீர் வடித்தான் ஆதிமூலம்.

"அவனுடைய பேச்சை இனிமேல் என்னிடம் பேசாதே! அவன் எப்படியாவது கெட்டுத் தொலையட்டும். நீங்கள் எல்லாம் காட்டும் மரியாதையைக் கூட அவன் எனக்குக் காட்டுவதில்லை" என்று அந்தப் பேச்சை முடித்தார் தேவர்.

பரந்தாமனுக்கும் அவன் தந்தைக்கும் ஆகவொட்டாமல் செய்து விட்டதில் வெற்றி கண்ட ஆதிமூலம், "சரி! அவன் இத்துடன் ஒழிந்தான்!" என்று முடிவுகட்டி விட்டான்.

எண்ணியபடி எல்லாம் நடந்து விடுமா! சத்தியமும் நேர்மையும் இன்னும் இந்த நாட்டில் செத்து விட வில்லையே! அதை யாராலும் எந்தக் காலத்திலும் அழிக்க முடியாதே!

ஆதிமூலம் நினைத்தபடி நடக்கவில்லை. பரந்தாமனின் பண்ணை செழித்து ஓங்கத் தொடங்கியது. எத்தனையோ ஆண்டுகளாகப் பண்ணையில் இருந்து வந்த உளுத்துப் போன பழைய முறைகளை மாற்றி அமைத்தான். பூமியுடன் போராடாமல் காலத்தை ஓட்டி வந்த பண்ணையாட்களைப் பூமியில் உழைத்துப் பாடுபடும்படி வழிவகைகள் வகுத்தான். பரந்தாமனின் நிலங்கள் பொன் கொழிக்கும் பூமியாக மாறின. முன்பு பாட்டன் முப்பாட்டன் கட்டிய பழைய வீடுகளை இடித்துப் புதுப்பித்தான். தன் கௌரவத்தைவிடத் தன் குடும்பத்தின் கௌரவத்தைப் பெரிதாக எண்ணிய பரந்தாமன் சொந்தத்துக்கு ஒரு கார் வாங்கினான். ஏழை எளியவர்கள் நிறைந்த கிராமங்களுக்குச் சென்று தொண்டு செய்யும் உயர்ந்த பணியில் உண்மையோடு ஈடுபட்டான். பட்டம் பதவிக்கு ஆசைப்படாமல் பாடுபட்டான். அதனால் பரந்தாமனின் புகழ் ஓங்கியது.

இதைக் கண்டு சந்தோஷப்பட வேண்டிய ஆதிமூலம் பொறாமைப் பட்டான். பரந்தாமன் வீட்டோடு தன் பாழடைந்த வீட்டை ஒப்பிட்டுப் பார்த்து மனம் புழுங்கினான். அவனுடைய புதுக் காரைப் பார்த்துப் பொருமினான். அவன் புகழ் கேட்டுத் துடித்தான். அவனுக்கு இன்னல் விளைவிக்கச் சதித் திட்டம் வகுத்தான். அதற்கு அவனுடைய தந்தையை — கருப்பண்ணத் தேவரையே பயன்படுத்திக் கொண்டான்.

தேவரும் பரந்தாமனைப் பற்றி ரகசியமாக விசாரித்து வந்தார். தேவரின் ஆட்கள் பரந்தாமனின் நல்ல காரியங்களைப் பற்றிக் கூறுவதில்லை. சாதாரண மனித வாழ்க்கையில் எல்லாருக்கும் ஏற்படும் சில்லறை இடைஞ்சல்கள் பரந்தாமனுக்கும் ஏற்பட்டன. அதை எவ்வளவு தூரம் பெரிதாகக் கூட்டிச் சொல்ல முடியுமோ அவ்வளவு தூரம் கூட்டிச் சொன்னார்கள்.

இந்த மாதிரி சமயங்களில் ஆதிமூலம் தன் திருத்தொண்டைச் செய்யத் தவறவில்லை.

"கேட்டீர்களா, சித்தப்பா! பரந்தாமன் கார் வாங்கியதில் மூவாயிரம் கடனும். டம்பத்துக்கு ஆசைப்பட்டு வீடு கட்டினானே, அதிலே ஐயாயிரம் பாக்கியாம். இன்னும் ஜவுளிக் கடை, மளிகைக் கடை எங்கு பார்த்தாலும் கடன். பையன் விழி பிதுங்குகிறது, திண்டாடிக் கொண்டிருக்கிறான்" என்று ஏகதாளம் செய்தான் ஆதிமூலம்.

பரந்தாமனின் நிலையைக் கேட்ட கருப்பண்ணத் தேவரின் பெற்ற மனசு துடித்தது. இருந்தாலும் "இந்தப் பயல் நம்மிடம் வந்து ஒன்றும் கேட்கவில்லையே" என்று ஆத்திரம்.

பரந்தாமன் எப்படிப் போய்க் கேட்பான்! தேவர்தான் எடுத்ததற்கெல்லாம் அர்த்தமில்லாமல் கோபிக்கிறாரே! துள்ளிக் குதிக்கிறாரே!

"அவன் பேச்சைப் பேசாதே! என்னை விரோதித்துக் கொண்டு அவன் உருப்படுவானா!" என்று சொல்லி ஆதிமூலத்தின் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தார் தேவர்.


ஆதிமூலத்துக்குப் பரந்தாமனைப் பற்றி அவதூறு சொல்வதை விட வேறு என்ன வேலையிருக்கிறது. "ஒன்றுமில்லை" என்று எழுந்து போனான்.

பரந்தாமனுக்குக் கடன் இருந்தது உண்மைதான். ஆனால் இவர்கள் கூறுவது போல் தாங்க முடியாத கடன் அல்ல. அவனே அவைகளை அலட்சியமாக அடைத்து விடுவான். அந்தத் தைரியம் இல்லாமலா கடன் வாங்கினான்! நன்றாக இருப்பவர்களைப் பார்த்தால்தான் மற்றவர்களுக்குத் தாங்காதே! பெரிய குடும்பத்தில் தந்தையும் பிள்ளையும் சேர்ந்து வாழ்வதைப் பங்காளிகள் பார்த்துக் கொண்டிருப்பார்களா!

ஆதிமூலத்தின் சூழ்ச்சியால் கருப்பண்ணத் தேவர் மனம் மாறித் தம் பிள்ளையை வெறுத்தாலும் பரந்தாமன் தேவரை வெறுக்கவில்லை. அவர் உத்தமர். மாசு மறுவற்ற குணம் படைத்தவர். உண்மை தெரிந்தால் அவர் அப்படியெல்லாம் பேசமாட்டார் என்பதை நன்கு உணர்ந்திருந்தான். அதனால் தன் தந்தைக்கு நண்பர்கள் போல் நடித்து அவருக்குக் கேடு செய்கிறவர்கள் மீது ஒரு கண் வைத்துக் கொண்டே இருந்தான். அவர்கள் சூழ்ச்சிகள் நிறைவேறாமல் செய்து வந்தான். இதை அறிந்த ஆதிமூலம் கூட்டத்தார் பரந்தாமனைக் கண்டு பயப்பட ஆரம்பித்தார்கள். தந்தை எவ்வளவு கோபித்துக் கொண்டாலும் மகன் மிக்க பெருந் தன்மையுடன் தந்தைக்கு ஆதரவாகவே இருந்து வருகிறானே என்று அங்கலாய்க்க ஆரம்பித்தனர். பரந்தாமனின் வாழ்க்கையிலும் புகுந்து கேடு செய்ய நினைத்தனர்.

oooo

பேட்டைத் தேவர் என்றால் அழுத பிள்ளை சிரிக்கும். அவ்வளவு தங்கமான குணம். பேட்டை



லீவர் பிரதர்ஸ் கம்பெனியார் தாங்கள் தயாரிக்கும் பிரசித்தி பெற்ற லக்ஸ் டாய்லட் சோப்பின் குணத்தையும் மணத்தையும் பிரசாரம் செய்யும் நோக்கத்துடன் நடத்திய போட்டியில் சென்னை ராஜ்யத்தில் பரிசு பெற்றவர்களுக்கு நவம்பர் 14ல சென்னை, காமதேனு டாக்கீஸில் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த வைபவத்தின் போது எடுக்கப்பட்ட மேலேயுள்ள படத்தில் மேற்படி கம்பெனியைச் சேர்ந்த ஜெனரல் சேல்ஸ் மானேஜர் ஸ்ரீ ஆர். ராமஸ்வாமி, பிராடெக்ட் மானேஜர் ஸ்ரீ கே. கோஸ்வாமி, ஸ்ரீ எஸ். வி. வேணுகோபால், முதலியவர்களையும், பரிசுகளை வழங்கிய ஸ்ரீமதி அஞ்சனிதேவியையும் காணலாம்.

கிராமம் முழுவதுமே அவருக்குச் சொந்தம். பேட்டைத் தேவரின் குடும்பமும் கருப்பண்ணத் தேவரின் குடும்பமும் பரம்பரையாகச் சம்பந்திக் குடும்பங்கள். பேட்டைத் தேவரின் மகள் பத்மா பரந்தாமனுக் கென்றே பிறந்தவள் என்று இரு குடும்பத்தவர்களும் பெருமைப்பட்டனர்.

ஆனால் இந்தச் சம்பந்தத்தை நடத்த விடாமல் செய்வதற்கு ஆதிமூலம் வேலை செய்ய ஆரம்பித்தான். பேட்டைத் தேவர்மீது வெறுப்பு ஏற்படும்படி கருப்பண்ணத் தேவருக்குத் தூபம் போட்டான். சந்தர்ப்பமும் சூழ்நிலையும் ஆதிமூலத்தின் சதிக்கு உதவி செய்தன.

கருப்பண்ணத் தேவர் எதையும் தீர விசாரியாமல் பேட்டைத் தேவரின் மீது சந்தேகம் கொள்ள ஆரம்பித்தார். பேட்டைத் தேவர் உத்தமர். வீண் வம்புக்குப் போக மாட்டார். அதற்காக வந்த வம்பை விடமாட்டார். கருப்பண்ணத் தேவரின் குணங்களையும் மனோபாவத்தையும் நன்கு அறிந்தவர். ஆகையால் அவர் கருப்பண்ணத் தேவரின் வறட்டுப் பிடிவாத குணத்தைக் கண்டு மிரண்டு விடவில்லை. தம் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறவன் பரந்தாமன். அவனுக்கு வாழ்க்கைத் துணைவியாக வேண்டியவள் பத்மா. அவர்கள் இருவர் உள்ளங்களையும் அவர் நன்கு புரிந்து கொண்டார். ஆகவே அதைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்து விட்டார்.

பேட்டைத் தேவர் இப்படி பேசாமல் இருப்பதை ஆதிமூலம் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பானா? அங்கேயும் தன் கை வரிசையைக் காட்ட ஆரம்பித்தான்.

பேட்டைத் தேவரின் மனத்தை மாற்ற முயன்றான். பரந்தாமனைப்பற்றிப் பேட்டைத் தேவரிடம் அவதூறுகள் சொல்ல ஏற்பாடுகள் செய்தான். பத்மாவைத் தானே கல்யாணம் செய்துகொள்ள விரும்பினான்.

அதற்குத் தன் மனைவியின் சம்மதத்தையும் பெற்றான். முதல் மனைவி இருக்கும்போதே இரண்டாவது மனைவியைக் கல்யாணம் செய்து கொள்ளச் சட்டம் இடந்தரவில்லை. அதற்காகச் சட்ட சம்பந்தமான நுணுக்கங்களை ஆராய்ந்து வரச் சென்னைக்குச் சென்றான். பெண்ணோடு ஏராளமான சொத்தும் வரும் என்ற அற்ப ஆசையில் சொந்த ஊர் வக்கீல் இடமே தெரிந்து கொள்ள வேண்டிய விஷயத்துக்கு ஏராளமான பணத்தைச் செலவு செய்து சென்னைக்குச் சென்று அங்குள்ள சட்ட நிபுணர்களிடம் சட்ட சம்பந்தமான சிக்கல்களைப் புரிந்து கொண்டு வந்தான்.

ஆதிமூலத்தின் ஆசையில் மண்ணைத் தூவினார் பேட்டைத் தேவர். இதற்கு உடந்தையாக இருந்து அடிக்கடி பேட்டைக்குச் சென்று தேவரின் மனத்தை மாற்ற முயன்ற அவன் மனைவி லக்ஷ்மியின் முகத்தில் கரியைப் பூசினார்.

தனக்குப் பத்மா இல்லை என்பதை அறிந்த ஆதிமூலம் பரந்தாமனுக்கும் கிடைக்கக் கூடாது என்று தீர்மானித்து விட்டான். தானே பேட்டைத் தேவர் வீட்டைத் தேடிச் சென்றான்.

****

"மாமா!" என்ற ஆதிமூலத்தின் குரல் கேட்டுப் பேட்டைத் தேவர் எழுந்து வந்தார். அவனை வரவேற்றுத் தமக்கு எதிரில் இருக்கும் ஆசனத்தில் அமரச் செய்து குசலம் விசாரிக்க ஆரம்பித்தார்.

"ஆதிமூலம்! எங்கே, இவ்வளவு தூரம்!"

"எல்லாம் நம் பத்மாவின் கல்யாணத்தைப் பற்றித்தான் பேச வந்தேன். நல்ல வரன் ஒன்று இருக்கிறது. அதை நழுவவிடக் கூடாது."

"யார் அந்த வரன்!"

"நம் கட்டுப்பட்டி ஜமீன்தார் பிரதாப சிங்தான். தங்கமான குணம். ஊரில் நல்ல பெயர். நிலபுலன்களுக்கும் குறைச்சல் இல்லை. பங்களா, கார், வேட்டை நாய்கள், குதிரைகள் ஒன்றுக்கும் குறைச்சல் இல்லை."

"ஆமாம், பிரதாப்சிங்குக்கு எல்லாம் இருக்கு. ஆனால் புத்தியும் ஒழுக்கமும்தான் இல்லை" என்று சொல்லி ஆதிமூலத்தின் கன்னத்தில் இரண்டு அறை கொடுத்து அனுப்பலாமென்று எண்ணினார் பேட்டைத் தேவர்.

கட்டுப்பட்டி ஜமீன்தாரைப் பற்றிப் பேட்டைத் தேவருக்கு நன்றாகத் தெரியும். பெயர் தான் பெரிய பெயரே ஒழிய அவனுடைய அயோக்கியத்தனங்களைப் பற்றி ஊர் சிரிக்கிறது. ஆகையால் "அதைத் தவிர வேறு பேச்சுப் பேசுங்க!" என்றார் தேவர் கண்டிப்பான குரலில்.

ஆதிமூலத்தின் நாடி விழுந்து விட்டது.

பேட்டைத் தேவர் மேலும் தொடர்ந்து சொன்னார்: "பத்மாவின் கல்யாணம் என் இஷ்டத்தில் இல்லை. பத்மா யாரைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறாளோ அந்தப் பிள்ளைக்கே அவளைக் கொடுக்கப் போகிறேன்."

"அது எப்படி மாமா நியாயம்! பத்மா, அந்தப் பயல் பரந்தாமனைத்தான் கல்யாணம் செய்து கொள்ளுவேன் என்கிறாளாம். இது நம் குடும்ப

உங்கள் இருமலின் காரணத்தை இல்லாமல் செய்யுங்கள் -அதை கட்டுப் படுத்தினால் மட்டும் போதாது



இருமல் அபாயத்தின் அறிகுறி. ஸிரோலின் நோய்க் கிருமிகளை ஒழிக்க உதவி, இருமலின் காரணத்தை நீக்குகிறது.



இருமலை ஒருபொழுதும் அசட்டை செய்யாதீர்கள். உங்கள் தொண்டையிலும் சுவாசப்பைகளிலும் இருக்கும் மெல்லிய தசை நார்கள் வீங்கி நெருக்கமுறும்போது ஸிரோலின் உட்கொள்ளுங்கள். அது நோயை வேரறுக்கும்.

ஸிரோலின் மயக்க மருந்துகளின் சகாயமின்றி வேலை செய்கிறது. அதில் எபிட்ரின் கிடையாது. அதன் விஷ நாசக குணம் நோய் தொற்றவிடாமல் தடுத்து, வீக்கத்தை படிப்படியாக நீக்குகிறது. தொண்டையில் கபமோ கோழையோ அடைத்து கெட்டிப்பதில்லை— அவை சுலபமாக வெளியேற ஸிரோலின் உதவுகிறது.

ஸிரோலின் உங்களை புது மனிதனாக்குகிறது

ஸிரோலின் உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியை வளர்க்கிறது. அது ஜீரண சக்தியை ஊக்கி, பசியை விருத்தி செய்கிறது. ஸிரோலின் குடும்பத்தின் அனைவருக்கும் இன்றியமையாத இருமல் நிவாரணியாகும். குழந்தைகள், வயது வந்தவர்கள் எவருக்கும் சிறந்த பயனளிப்பது, அபாயமற்றது. வீட்டிலெப்பொழுதும் ஒரு புட்டி அவசியம் வைத்திருங்கள்.

ஸிரோலீன்
'ரோஷ்'

VB. 9858 (A) -

பக்தரின் சந்தேகம்.

ஒரு பக்தர் அன்னையை நோக்கிக் கேட்டது. "தாயே, குருதேவர் காலமான பிறகும் தாங்கள் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டும், மக்களுக்குப் போதித்துக் கொண்டும் இருக்கிறீர்கள். ஆனால், இதற்கு முன் இவ்வுலகில் தோன்றிய அவதார புருஷர்களின் பத்தினி மார்களில் ஒருவராவது இவ்விதம் செய்ததாக யாரும் கேள்விப் பட்டதில்லை. தங்கள் விஷயத்தில் மாத்திரம் இப்புதுமை ஏன்?"

இதற்கு அன்னை அளித்த பதில்:

"என் குழந்தாய், குருதேவர் ஒவ்வொருவரிடமும் தெய்விகத் தாயின் சொருபத்தைக் காண்பது வழக்கம். இது உனக்குத் தெரியும். இந்தத் தடவை அவர் என்னை ஏன் தனியே விட்டு விட்டுப் போயிருக்கிறாரென்றால், மக்களுக்கு ஆண்டவனின் தாய்மை இயல்பைப் போதிப்பதற்காகத்தான்."

கௌரவத்துக்கு அடுக்குமா! ஊர் என்ன சொல்லும்!" என்றான் ஆதிமூலம்.

"பரந்தாமனுக்கு என்ன! படிப்பில்லையா! பணம் இல்லையா! ஆண் தன்மை இல்லையா! அழகில்லையா! அவனுக்கு என்ன இல்லை சொல்லேன்."

"அவன் கெட்டுக் குட்டிச்சுவராகி விட்டான். ஊரெல்லாம் கடன் பிடுங்கித் தின்கிறது! பெற்ற தந்தையையே துச்சமாக மதித்து நடக்கிறான். இப்படிப்பட்டவனுக்குப் பத்மாவைக் கொடுத்தால் ஊர் சிரிக்காதா!"

இதைக் கேட்டவுடன் பேட்டைத் தேவருக்குக் கோபம் 'பொத்'துக் கொண்டு வந்து விட்டது. அவர் கண்கள் சிவந்தன. மீசை துடிக்க ஆரம்பித்து விட்டது. இதயம் நொந்து எரிமலை போல் வெடிக்க ஆரம்பித்து விட்டார்.

"ஊர் என்ன சொல்லும்! நீ தரகனையும் உன் மனைவி உனக்குப் பெண் தேடியதையும் கேட்டுத்தான் ஊர் சிரிக்கும். என் மகள் பத்மாவை நீ சொல்லும் வரனுக்குக் கொடுப்பதைவிடப் பாழுங் கிணற்றில் தள்ளலாம். பரந்தாமனைப் போல் பிள்ளை கிடைக்கத் தவம் இருக்க வேண்டும். அவனுக்கு இருக்கும் அறிவுக்கும், பண்புக்கும் யாரும் அவன் கால் தூசு பெற மாட்டார்கள். பிள்ளையின் பெருமையைக் கருப்பண்ணத் தேவர் தெரிந்து கொள்ளவில்லை. பாவம், அவர்மீது குறை சொல்ல முடியாது. எல்லாம் உன் காரியம் தான். பரந்தாமனுக்கும் அவன் தந்தைக்கும் ஆகாமல் அடித்தது போதாதா! என் குடும்பத்தையும் குலைக்க ஆரம்பித்து விட்டாயா! கருப்பண்ணத் தேவரிடம் ஒரு வார்த்தை பரந்தாமனைப் பற்றி நல்லபடி சொல்லியிருப்பாயா! கருப்பண்ணத் தேவரை எனக்கு நன்றாகத் தெரியும். தங்கமான குணம் படைத்த தர்மவான். அவரிடம் உன் சதியைப் பற்றிக் கூறி அவர் மனத்தை மாற்றி, பத்மா பரந்தாமன் திருமணத்தை இன்றைய பத்தாம் நாளில் முடிக்கிறேன். ஆதிமூலம்! பத்மா-பரந்தாமன் திருமணம் இன்றைய பத்தாம் நாள் நடக்கும். நீயும் கண் குளிரப் பார்க்கலாம்" என்று கூறி எழுந்தார் பேட்டைத் தேவர்.

இதற்குள் ஆதிமூலத்தின் சதித் திட்டங்கள் எல்லாம் கருப்பண்ணத் தேவருக்குத் தெரிந்து விட்டன. அவர் கண்யமற்றவர்கள் பேச்சைக் கேட்டுத் தான் பெற்ற பிள்ளையையே விரோதியாக நினைத்து விட்டோமே என்று கண்ணீர் விட்டார். உத்தம குணம் படைத்த பேட்டைத் தேவரை, பேதைமையால் தவறாக எண்ணிக் கொண்டிருந்தோமோ என்று ஏங்கித் தவித்தார்.

****

'பாம் பாம்' என்று மோட்டார் கார் சத்தம் கேட்டது. கருப்பண்ணத் தேவர் தம் அறையிலிருந்து எழுந்து வாசலுக்கு வந்தார். பேட்டைத் தேவர் காரிலிருந்து கைகூப்பி வணங்கிய வண்ணம் மலர்ந்த முகத்துடன் கீழே இறங்கினார்.

"வணக்கம். வரவேணும் வரவேணும்" என்று வரவேற்றார் கருப்பண்ணத் தேவர்.

"வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே அவர் பின்னால் சென்று அவருக்கு எதிரில் இருந்த ஆசனத்தில் அமர்ந்தார் பேட்டைத் தேவர்.

"எல்லாவற்றையும் கேள்விப்பட்டேன். தயவு செய்து என்னை மன்னிக்க வேணும்" என்று ஆரம்பித்தார் கருப்பண்ணத் தேவர்.

"தங்களைப் பற்றியெல்லாம் எனக்குத் தெரியாதா! எந்த விஷயத்தையுமே நாம் இருவரும் நேருக்கு நேர் பேச ஆரம்பித்து விட்டால் எல்லாம் தீர்ந்து விடும். அதற்காகத்தான் வந்தேன்."

"பேசுவதற்கு ஒன்றுமில்லை. தங்கள் விருப்பப்படியே இன்றைய பத்தாம் நாள் பரந்தாமன் — பத்மா திருமணம் நடக்கும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்யச் சொல்லி விட்டேன்" என்றார் கருப்பண்ணத் தேவர்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பேட்டைத் தேவர் மனம் குளிர்ந்தது. சம்பந்திகள் இருவரும் சந்தோஷக் கடலில் மிதந்தனர்.

****

"நேரம் போவதே தெரியாமல் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்!" என்று கேட்டுக்கொண்டே வந்தார் கருப்பண்ணத்தேவர்.

தன் தந்தையின் குரலைக் கேட்ட பரந்தாமன் திடுக்கிட்டான். பத்மா நாணித் தலை குனிந்தாள்.

"உங்களை எங்கே யெல்லாம் தேடுவது! சீக்கிரம் கிளம்புங்கள். பேட்டைக்குப் போகவேணும். இன்று இரவு பேட்டைக் கோயிலில் ஐந்தாம் நாள் திருவிழா. உங்களை யெல்லாம் அழைத்துப் போகப் பேட்டைத் தேவரே வந்திருக்கிறார்" என்றார்.

"அப்பா வந்திருக்காங்களா!" என்று கேட்டுக் கொண்டே பத்மா கீழே இறங்கிப் போனாள்.

"நான் தயாராகவே இருக்கிறேன்" என்று சொல்லிவிட்டுத் தன் அருமைத் தந்தையுடன் கீழே இறங்கினான் பரந்தாமன்.

அடுத்த சில நிமிஷங்களுக்கெல்லாம் கல கலவென்று சிரிப்பொலி கேட்டது. பேட்டைத் தேவரும் கருப்பண்ணத் தேவரும் திரும்பிப் பார்த்தனர். பத்மாவும் பரந்தாமனும் தங்களை மறந்து சிரித்துக் கொண்டு வந்தனர்.

மகளையும் மருமகனையும் சம்பந்தியையும் அழைத்துக் கொண்டு பேட்டைத் தேவர் கிளம்பினார். அவர்கள் எல்லாரும் சந்தோஷத்துடன் ஒன்றாகக் காரில் செல்வதைப் பார்த்து ஆதிமூலம் தலை குனிந்து நின்று கொண்டிருந்தான். அவன் அருமை நாயே அவன் செயலைக் கண்டு வெறுப்பதுபோல அவனைப் பார்த்துக் குரைத்தது.

'டாண் டாண்' என்று பெரிய கோயில் மணியின் இனிய ஓசை காற்றிலே மிதந்து வந்தது. அது அக்கிரமம் அழிந்து அன்பு வென்ற வெற்றி முழக்கம் போலக் கேட்டது.

*****

Edited Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press,
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras-10



உங்கள் எல்லோரா
ஜடைச் சிங்காரத்தின் அழகைப் பூர்த்திசெய்ய
கலிபோர்னியன் பாப்பி

(ரெஜிஸ்டேர்ட் டிரேட் மார்க்)

கூந்தல் தைலம்
உபயோகியுங்கள்

இனம்!

இந்த ஜடைச் சிங்காரத்தைப் பற்றிய தகவல்களைத் தரும் துண்டுப் பிரசுரம் நெ. 7க்கு ஒரு அணா தபால்தலையுடன் விளம்பர இலாகா, தபால் பெட்டி நெ. 822, பம்பாய் 1க்கு எழுதுங்கள். இந்த துண்டுப்பிரசுரம் தனித்தனியாக தமிழ், ஹிந்தி, வங்காளி, ஆங்கிலம் என்ற பாஷைகளில் கிடைக்கிறது.



இராஸ்பிக் கம்.லிட்., லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தது. CPH. 15-50 TM

REGISTERED No. M. 4392
Registered as a newspaper in Ceylon